ஞானம் சென்ரர்
இலங்கை
45 நிமிடம்
(விபரங்கள் 21-ம் பக்கம்)

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 4 27 ஒகஸ்ட் – 02 செப்டெம்பர் 1998 முழக்கம்: 189

கோலாகலமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது
கோபால் அன் கோ
GOPAL & COMPANY
SUPER MARCHE
72, Rue Louis Blanc, 75010
Paris. - Metro: La Chapelle
Tel: 01 53 26 09 25

## மாங்குளத்தை பாதுகாக்க புலிகள்

# 40 கி.மீ. நீள பாதுகாப்பு அரண்கள்

## சிறப்புப் படையணிகள் தயார் நிலையில்

(24.08.98)

மாங்குளம் மீதான சிறீலங்காப் படைகளின் இராணுவ நகர்வுகளை தடுத்து நிறுத்துவதற்கு 40 கிலோ மீற்றர் நீளமான முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை விடுதலைப் புலிகள் நிறுவியுள்ளனர்.

மாங்குளத்திற்கு கிழக்கே ஒட்டிசுட்டான் பகுதியிலிருந்து மேற்கே வவுனிக்குளம் வரை 40 கி.மீ நீளமான பிரதேசத்தில் புலிகளின் சிறப்புப் படையணிகள் இப் பாதுகாப்பு நிலைகளை நிறுவியுள்ளன. இவ் நீண்ட முன்னரங்க நிலைகளில் புலிகளின் பல்வேறு படைப்பிரிவுகளையும் சேர்ந்த போராளிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறீலங்காப் படைகள் மாங்குளம் நகரை நோக்கி மற்றுமொரு

(☞ 2ம் பக்கம்)



### புலிகளின் பாரிய பாதுகாப்பு வேலி

(ஆய்வு)

மாங்குளம் சமர் ஆரம்பமான போது 4 கி.மீ. நீளத்திற்கே புலிகளின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் நிறுவப்பட்டிருந்தன. கரிப்பட்ட முறிப்பைவிட்டு பின்வாங்கிய புலிகளின் சிறப்புப் படைப் பிரிவுகளே இவ் அரண்களை நிறுவின. பின்னர் புளியங்குளம் மற்றும் கனகராயன்குளம் பகுதிகளைவிட்டு புலிகள் பின்வாங்கி மாங்குளத்தில்

(☞ 2ம் பக்கம்)

### திறனிலும் – ஆட்பலத்திலும் வளர்ந்துள்ளோம்

- விடுதலைப் புலிகள்

(24.08.98)

மிக நீண்டதொரு முன்னரங்க நிலைகளை கொண்டவாறு மரபுச் சண்டையிடும் புதிய இராணுவ பரிமாணத்தை தமிழீழ விடுதலைப் போர் சந்தித்துள்ளது என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

முன்னரங்க நிலைகளை நீட்டி விரிவாக்க புலிகளை நிர்ப்பந்தித்தால் அது அவர்களுக்கு பாதக

(☞ 2ம் பக்கம்)

## அரச பணிமனைகள் மூடப்பட்டன வன்னியில் மக்கள் போர்க்கொடி

(21.08.98)

விடுவிக்கப்பட்ட வன்னிப் பிரதேசங்களில் வாழும் பல்லாயிரம் தமிழர்கள் அப் பிரதேசங்களில் உள்ள அனைத்து சிறீலங்கா அரச பணிமனைகளையும் மூடுமாறு போராடி வருகின்றனர். வன்னிப் பகுதி மீது சிறீலங்கா அரசு மேற்கொண்டு வரும் உணவுத் தடை நடவடிக்கைகளைக் கண்டித்து, அவ் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றினை நடாத்தியதுடன் உணவு, மற்றும் நிவாரண விநியோகங்கள் மீதான தடைகள் நீக்கப்படாத வரை அரச பணிமனைகள் செயல்பட முடியாது என அறிவித்துள்ளனர்.

(☞ 2ம் பக்கம்)

## புலிகளிடம் நடமாடும் சத்திரசிகிச்சை கூடம்

- அமெரிக்க அதிகாரிகள் -

அமெரிக்க அரசாங்கத்தினால் சிறீலங்காவிடம் கையளிக்கப்பட்ட 3 மிக நவீனரக நடமாடும் சத்திரசிகிச்சை கூடங்களில் ஒன்று விடுதலைப் புலிகளிடம் சென்றடைந்துள்ளதாக அமெரிக்க தகவல் சேவை அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

(☞ 2ம் பக்கம்)

## செம்மணி சாட்சியம் மீது தாக்குதல்

கிருசாந்தி கொலைவழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் இராணுவ கோப்ரல் சோமரட்ன ராஜபக்ஷ வெலிக்கடைச் சிறையில் கொழுக்காவலர்களால் மோசமாக தாக்கப்பட்டுள்ளார். படுத்த காயங்களுடன் சிறைச்சாலை வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

செம்மணியில் 400க்கு மேற்பட்ட

(☞ 2ம் பக்கம்)

## தென்னாபிரிக்கா செல்ல சந்திரிகா தயக்கம்

இவ்வாரம் தென்னாபிரிக்காவில் ஆரம்பமாக உள்ள அணிசேரா மாநாடுகளில் கலந்து கொள்ளும் சிறீலங்கா ஜனாதிபதிக்கு தென்னாபிரிக்காவில் வாழும் தமிழர்கள் பெரிய அளவிலான எதிர்ப்பினைத் தெரிவிக்கலாம் என சிறீலங்கா அரசு அஞ்சுகின்றது இதனால் இம் மகாநாட்டில் சந்திரிகா கலந்து கொள்வது தொடர்பான விபரங்களை வெளியிட சிறீலங்கா தயக்கம் காட்டிவருகிறது. சந்திரிகாவிற்கு பதிலாக சிறீலங்கா தூதுக் குழுவினை கதிர்காமர் தலைமைதாங்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

மகாநாடு நடைபெற உள்ள டேர்பன் நகரில் கமார் ஆறு

(☞ 2ம் பக்கம்)

## சிறீலங்கா பொருளாதாரம் மேலும் வீழ்ச்சி

(24.08.98)

சிறீலங்காவின் பங்குச் சந்தை கடந்த ஏழுவருடங்களின் அதிமோசமான பாதிப்பை இன்று சந்தித்துள்ளது. 1991-ம் ஆண்டிற்குப் பின் ஏற்பட்ட பாரிய பொருளாதாரம் பாதிப்பு இதுவாகும்.

(☞ 2ம் பக்கம்)

உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது
Kumars Shop
S.A.R.L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore Exchange Co.
90, Bld. Rochechouart,
75018 Paris. Mo: Anvers ou Pigalle
Tel: - Fax: 01 42 23 03 10
ou 01 42 59 53 91

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
16 à 26, Rue Perdonnet,
75010 Paris.

RCS PARIS
B 389 673 110 (95B01491)

Directeur de la publication:
P. Velupillai

Redacteur:
P. Sivaguru

Impression:
IMPRIMERIE MEAULLE

ஆசிரியர்:
ப. வேலுப்பிள்ளை

நிர்வாக ஆசிரியர்:
அமரர் க. சந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்
Tel: 01 40 37 63 62
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
Gun. சிறிஸ்கந்தராஜா.
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா
Tel / Fax: 02 151 39 73 63

டென்மார்க்:
R. குருகேசன்
Grundtvigs Vej - 38, 1.th
7400 Herning, Denmark.
Tel: 97 12 08 76 - 97 21 76 49

சுவிஸ் மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerei: Frankreich.
Tel: 01-271 7374

கனடா:
ரொறன்ரோ – Tel: 0958906145
மொன்றியல் – Tel: 0956277710

இத்தாலி:
மக்கள் கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
- JAFFNA FOOD -
Tel: 22425527

இலங்கை:
தகவல் பிரிவு
Tel: 076 6425604

# இராணுவ துப்பாக்கி சூட்டுக்கு சிறுமி பலி

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அளவெட்டி மேற்குப் பகுதியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் கோகிலராஜனி ரெட்ணம் என்ற 9 வயதுச்சிறுமி பலியானார். இச் சூட்டுச்சம்பவத்தில் போது இவரது சகோதரி அனுராஜனி போக ரெட்ணம் (வயது 11) படுகாயங்களுக்குள்ளானார்.

கொல்லப்பட்ட சிறுமியின் சடலம் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன் காயமுற்றவர் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் வண்டி மூலம் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இவ்விருவரும் குடாநாட்டின் கிறிஸ்தவ சமயவகுப்புக்கு சென்று திரும்பும்போது இராணுவத்தினர் தம் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததாக மரண விசாரணையின்போது சாட்சியமளித்த தாக தனது மகள் அனுராஜனி கூறியதாக தந்தை போகரெட்ணம் கூறினார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளின் பாரிய...

20 கி.மீ. நீளமான பாதுகாப்பு நிலைகளை நிறுவினர். இதன் மூலம் சிறீலங்காப் படைகளின் பாரிய ஆட்டலம் இந் நீள அரணை கனத்த நெருக்கடிக்குட்பட்டு முறியடிக்கப்பட்டது.

இதனால் முன்னரங்க நிலைகளைத் தாக்கி ஊடறுத்துச் செல்லும் போர் முறையினை இராணுவத்தினர் கைவிட்டனர். மாறாக புலிகளின் பாதுகாப்பு நிலைகள் நிறுவப்படாத புதிய முனைகளூடாக இராணுவம் நகர முயன்றது. இதனைக் கணிப்பிட்டு புலிகள் தமது நிலைகளை 30 கிமீற்றருக்கு அதிகரித்தனர்.

இவ் வேளையில் மாங்குளத்திற்கு கிழக்கே அம்பகாமம் ஊடாக இராணுவத் தளபதிகள் விசேட இராணுவ அணியினரின் உதவியுடன் புதிய முனை ஒன்றை திறந்தபோது புலிகள் மேலும் பத்து கிலோ மீற்றர் நீளத்திற்கு தமது அரண்களை நிறுவி மாங்குளத்தை பாதுகாக்கத் தொடங்கினார்கள்.

புலிகளின் இப் பாரிய பாதுகாப்பு அரண்களானது அவர்களது மரபுவழிப் போராற்றலை வெளிக்காட்டுகின்றது. மேலும், பாதுகாப்பு நிலைகளை நீளமாக்குவதன் மூலம் புலிகளின் படைத்தளை குறிப்பிட்ட இடங்களில் குறைக்கலாம் என்ற சிறீலங்காவின் கணிப்பீட்டை விடுதலைப் புலிகள் பொய்க்க வைத்துள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## சிறீலங்கா...

அமெரிக்க காங்கிரஸைச் சேர்ந்த ஸ்கொட் என். குளக் என்பவர் சிறீலங்காவின் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கை தொடர்பாக ஆராய கொழும்பு சென்றுள்ள வேளையிலேயே இவ் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

சிறீலங்கா சந்தைகளில் முதலிடுவதற்கு சர்வதேச முதலீட்டாளர்கள் விரும்பவில்லை எனவும், கடந்த மாதம் சந்திரிகா அரசால் அமுல்படுத்தப்பட்ட நாடுதழுவிய அவசரகாலச்சட்ட பிரகடனமும் இதற்கு காரணம் எனச் சொல்லப்படுகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## தென்னாபிரிக்கா...

இலட்சம் தமிழர்களும், யோகன்ஸ் பேர்கில் 10,000 தமிழர்களும் வசிக்கின்றனர். மேலும் 36 பாராளுமன்ற உறுப்பினர்கள் தென்னாபிரிக்கப் பாராளுமன்றத்தில் இவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## மாங்குளத்தை...

பாரிய நகர்வை எவ்வேளையிலும் ஆரம்பிக்கலாம் என நம்பப்படுகின்றது.

சுமார் 20,000 சிறீலங்காப் படைகள் ஒரே நேரத்தில் மாங்குளம் மீதான தாக்குதலில் பல்வேறு முனைகளூடாக ஈடுபடுத்தப்படலாம் எனவும் கருதப்படுகின்றது.

வன்னிப்பகுதிகளில் பருவ மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்னர் இராணுவத்தினர் தமது முயற்சியில் தீவிரம் காட்டலாம் என கொழும்பு இராணுவ ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

விற்பனைக்கு

பாரிஸ் நகரில் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் 'இந்தியன் ரெஸ்ரோறன்ட்' விற்பனைக்கு உள்ளது
விபரங்களுக்கு
Tel : 01 45 79 21 21
38, Rue Fondary, 75015 Paris.
(Mo: Avenue Emil Zola / La Motte Picquet Grenelle)

கோலாகலமாக
திறந்துவைக்கப்பட்டுள்ளது
லா சப்பல் மெற்றோ நுழைவாயிலின் முன்பாக
அனைத்து மளிகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
கோபால் அன் கோ
410 சதுர மீட்டர் பரப்பளவில் தமிழ் மக்களுக்காக மிகப் பிரமாண்டமான பல்பொருள் அங்காடி
GOPAL & COMPANY
SUPER MARCHE
72, Rue Louis Blanc, 75010 Paris. - Metro: La Chapelle
Tel: 01 53 26 09 25

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## திறனிலும்...

மான இராணுவ விளைவுகளை கொடுக்கும் என சிங்களத் தரப்பு கருதியது. அளவுக்கு மிஞ்சி முன்னரங்க நிலைகள் நீண்டு விரிந்தால் புலிகளின் ஆள் ஆயுத பலம் ஐதாக்கப்படும் அது புலிகளின் எதிர்ப்பு வலுவை சிதைத்துவிடும் என சிங்களத் தளபதிகள் நம்பினர். இதனால் படையினர் தாமும் பரவி நிலைகொண்டு புலிகளையும பரப்பி நிலை கொள்ள வைத்தனர். ஆனால், அவர்கள் கணித்தது போல் விளைவுகள் ஏற்படவில்லை இன்று படை நகர்வை ஆட்டிலறி நோயில் இது வீழ்த்தி விட்டது இவ்வாறு புலிகளின் சத்திபோசுபூர்வ ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரியல் தந்திரங்களிலும், போர்த்திறனிலும், ஆட்பலத்திலும் புலிகள் இமாலய பாரிய வளர்ச்சிபெற்றுவருகிறது என்பதையே இவ் இராணுவப் பரிமாணம் புலப்படுத்துகிறது என புலிகள் அறிவித்துள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## செம்மணி சாட்சியம்...

தமிழர்கள் பலர் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டதை நீதிமன்றத்தில் தெரிவித்தற்காக இவர் இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளார்.

தனது உயிருக்கு எந்நேரமும் ஆபத்து ஏற்படலாம் என இவர் ஏற்கனவே முறைப்பாடு செய்திருந்ததாக குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளிடம்...

அமெரிக்க அரசினால் போர் நடைபெறும்போது பாதிக்கப்படும் மக்களுக்கு சிகிச்சை அளிக்கவென இவைகள் வழங்கப்பட்டன. ஆனால் இவற்றை இராணுவத்தினர் போர் முனைகளில் தமது படைகள் காயமடையும் போது அவர்களுக்கு சிகிச்சை அளிக்கவே பயன்படுத்தி வந்தனர். மிக நவீனமாக அமைந்து வசதிகளுடன் கொண்ட இந் நடமாடும் சத்திர சிகிச்சை நிலையத்தில் ஒரே நேரத்தில் இருவருக்கு சிகிச்சை வழங்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

வன்னி ஜெயசிக்குறு மீதான ஊடறுப்புத் தாக்குதல் ஒன்றின் போதே, இராணுவத்தினரிடமிருந்து புலிகள் இதனை கைப்பற்றியிருக்கலாம் என செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## அரச பணிமனைகள்...

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் சிறீலங்கா அரசு உணவை போருக்கான ஒரு ஆயுதமாக பயன்படுத்துகிறது எனக் குற்றஞ்சாட்டியுள்ளது. மேலும், கடந்த சில வருடங்களாக இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவு விநியோகத்தினை அரசு தடைசெய்து வருகின்றது. இது சிங்கள தேசத்தினால் தமிழ் மக்களுக்கு கூட்டாக வழங்கப்படும் தண்டனையைப் போன்றுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வரவு TATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,800 Frs. |
| Singapour | - | 3,670 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.
LI: 075 95 01 37

# இவ்வார செய்தித் தொகுப்பு

## மட்டு இராணுவ நகர்வு!
# புலிகளின் ஆட்டிலெறித் தாக்குதல் பின்வாங்கச் செய்தது

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை ஊடறுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளின் ஆட்டிலெறித் தாக்குதலால் நிறுத்தப்பட்டது.

கடந்த புதன்கிழமை (19.08.98) சிறிலங்கா இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர், பொலிசார், தமிழ் குழுக்கள் கூட்டாக பல முனைகளிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கொக்கட்டிச்சோலைப் பகுதியை நோக்கி முன்னேறினர்.

புதன் இரவு அதிகாலை 4.00 மணியளவில் 15 பேருந்துகளில் வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து பட்டிருப்புப் பாலத்தை நோக்கி படையினர் நகர்ந்தனர். இதே வேளை மீண்டுமொரு படைப்பிரிவு மண்முனை ஏரியைக் கடந்து நகரத் தொடங்கியது. இப் படை நகர்விற்கு மேலதிக துருப்பினர் பொலநறுவை மாவட்டத்திலிருந்து வந்துகொண்டிருந்தனர்.

இவ் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதும் மட்டக்களப்பின் தென் மேற்குப்பகுதியில் சகல போக்குவரத்துக்களும் தடைசெய்யப்பட்டு, சந்திவெளிப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப் பட்டிருந்தது. இதனால் நடைபெற்றுக் கொண்டிருந்த கல்விப் பொதுத் தராதரப் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. தொழிலாளர்கள் எவரும் தமது கடமைகளுக்கு செல்ல முடியவில்லை.

இராணுவத்தினர் முன்னேறியபோது புலிகள் தரப்பிலிருந்து பாரிய எதிர்ப்புக்கள் எதுவும் இடம் பெறவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை இடம் பெற்ற மோதல்களில் தமது தரப்பில் 3 படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 29 படையினர் காயமடைந்துள்ளதாகவும் சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. இவ் இராணுவ நடவடிக்கைக்கு உதவியாக விமானப் படையினரும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

கொக்கட்டிச்சோலைப் பகுதிக்குள் வாகரை படையினரால் மேற்கொள்ளப்பட்ட பாரிய முயற்சிகள் விடுதலைப் புலிகளால் நான்கு தடவைகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

காலை 7.30 மணியளவிலேயே படையினர் முன்னேறி கொக்கட்டிச்சோலைப் பகுதியை சுற்றிவளைத்தனர். இதன் போது செல்வராஜா (37) என்னும் தையல் தொழிலாளி படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இச் சுற்றிவளைப்பில் சில பெண்களையும், இளைஞர்களையும் கைது செய்து முகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர்.

வியாழக்கிழமை (20.08.98) மதியம் இரண்டு மணியளவில் விடுதலைப் புலிகளின் பீரங்கிப் படையணி, மட்டக்களப்பு விமானப்படைத் தளத்தின் மீதும், 231வது படைப்பிரிவின் தலைமையகத்தின் மீதும் இலக்குவைத்து தொடர்ச்சியாக பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டது. இத் தாக்குதல்களால் விமானத் தளத்தில் வீழ்ந்த குண்டுகளால் விமான ஓடுபாதை பலத்த சேதமடைந்துள்ளது. இதேவேளை 231 படைப்பிரிவு தலைமையக கட்டடங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் இத் தாக்குதல்களைத் தொடர்ந்து இராணுவ நகர்வில் ஈடுபட்டிருந்த படையினர் தமது முகாமிற்கு திரும்பிச் சென்றனர்.

இவ் இராணுவ நடவடிக்கைக்கு உதவியாக பொலநறுவை மின்னேரியா முகாமிலிருந்து வந்த படையினர் 31 பேருந்துகளில் வெள்ளிக்கிழமை (21.08.98) அன்று மட்டக்களப்பிலிருந்து திரும்பிச் சென்றனர். இவ் இராணுவ வாகனத் தொடர் முன்னேயும், பின்னேயும் டாங்கிகள் பாதுகாப்பு வழங்கிய அதேவேளை, வீதியின் இரு மருங்கிலும் படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த பத்துமாத இடைவெளியின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா விமானப் படை விமானங்கள் இவ் இராணுவ நடவடிக்கையின் போதே தாக்குதல்களில் ஈடுபட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி மக்களுக்கு விசேட அடையாள அட்டை

யாழ். வடமராட்சி மக்களுக்கு சிறிலங்கா இராணுவத்தினரால் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ் அடையாள அட்டையில் அவர்களது புகைப்படத்துடன் அவர்கள் பற்றிய முழு விபரங்களும் பதியப்பட்டுள்ளன. இது பிரதிகள் அனைத்தும் முகாமினுள் பதிந்து வைக்கப்பட்ட பின்னரே உரியவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

மட்டக்களப்பு நகரிலும் 1990ம் ஆண்டில் இவ்வாறான ஒரு நடவடிக்கை சிறிலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்டது. இவ் அடையாள அட்டை வழங்கப்பட்டவர்கள் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைவிட்டு வெளியேறும் போதும் உள்ளே வரும்போதும் கடும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்தனர் என்பது தெரிந்ததே.

இராணுவத்தினர் வடமராட்சி மக்களுக்கு வழங்கியுள்ள இவ் விசேட அடையாள அட்டை குறித்து மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. அவை இராணுவத்தினரின் இவ் நடவடிக்கை, தமது போர்க்கால நிலைமையைப் பாதுகாக்க சொந்த மண்ணிலேயே மக்களின் பிரஜா உரிமையைப் பறிப்பது போன்ற ஒரு நடவடிக்கை எனக்கூறியுள்ளன.

## மன்னாரில் 'பிஸ்டல்' குழு

மன்னார் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் இரண்டு சிறிலங்காப் பொலிசார் பிஸ்டல் குழுவினரால் சுடப்பட்டுள்ளனர். கடந்த 19ம் திகதி மாலை 4.30 மணியளவில் தையலகம் ஒன்றில் நின்று கொண்டிருந்த பொலிசார் மீது அங்கு வந்த பிஸ்டல் குழுவைச் சேர்ந்தவரால் துப்பாக்கிச்சூடு நிகழ்த்தப்பட்டது.

இதன்போது ஒரு பொலிஸார் அவ்விடத்திலேயே கொல்லப்பட, மற்றவர் படுகாயமடைந்துள்ளார். தாக்குதலை நடத்தியவர் அங்கிருந்து தப்பியோடி விட்டதாகவும், வவுனியாவில் 'பிஸ்டல்' குழுவினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு தாக்குதல்களைப்போல் மன்னாரிலும் தொடரலாம் என சிறிலங்காப் படைத்தரப்பு அஞ்சுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கிளைமோர் தாக்குதலில் இரு பொலிசார் பலி

வவுனியா பெரியகுளம் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் இரு சிறீலங்காப் பொலிசார் கொல்லப்பட்டதுடன், இரு இராணுவத்தினரும், ஒரு காவலாளியும் படுகாயம் அடைந்துள்ளனர் என சிறிலங்காப் பாதுகாப்பு தலைமையகம் அறிவித்துள்ளது.

செட்டிக்குளம் பகுதியில் இருந்து கடந்த வியாழனன்று மன்னார் முருங்கன் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது மாலை 5 மணியளவில் பெரியகுளம் பகுதியில் வைத்திருந்த கிளைமோரில் சிக்கியபோது படையினர் பயணம் செய்த வாகனம் வெடித்துச் சிதறியது.

## தேங்காய் விலையேற்றம்

யாழ். குடாநாட்டில் தேங்காயின் விலை மிகவும் உயர்ந்து செல்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு தேங்காய் குறைந்தது 25 ரூபாவாக தற்போது விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

தேங்காய் பெருமளவு உற்பத்தி செய்யும் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள பல தென்னந்தோட்டங்கள் படையினரின் பாதுகாப்பு அரணுக்குள் அமைந்துள்ளதாலும், பலமைல்களுக்கப்பாலுள்ள தென்னைகளை படையினர் காப்பரண் அமைக்க தறித்துவிடுகின்றமையினாலுமே இவ் விலையேற்றம் ஏற்பட்டுள்ளதாக குடாநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

## மக்கள் புலிகள் பக்கம் சாய்ந்துவிடுவார்கள் உணவுத் தடையை நீக்குங்கள் - ரணில்

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எங்கனும் சந்திரிகா அரசு உணவு, மருந்துத் தடைகளை ஏற்படுத்தியுள்ளதால் அங்குள்ள மக்கள் 'சோமாலிய நாட்டு மக்களின் நிலைக்குத்' தள்ளப்பட்டு வருகின்றனர் என சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழன் அன்று பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தும்போது தெரிவித்துள்ளார்.

வன்னியில் கடந்த பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்தம் காரணமாக அங்கு உணவுப் பொருட்கள் அனுப்பப்படுவதில்லை, நிவாரணங்கள் வெட்டப்பட்டுள்ளன. இதனால் மக்கள் விரக்தி அடைந்து புலிகளின் பக்கம் சாய்ந்துவிடுவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தமக்குத் தேவையான அளவிற்கு உணவு, எரிபொருட்களை வைத்துள்ளனர். அரசின் தடையினால் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களே பெரிதும் பட்டினிச்சாவை எதிர்நோக்கி உள்ளனர். எனவே அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## சிறிலங்கா அரசிற்கு எதிராக யாழ். குடா வர்த்தகர்கள் போராட்டம்

முல்லைத்தீவுக் கடலில் விடுதலைப் புலிகளினால் 19.08.98 அன்று வழி மறிக்கப்பட்ட டுபாய் கப்பலான 'பிறின்சஸ் காஷ்' கப்பல், சிறிலங்காப் படையினரால் குண்டுவீசி அழிக்கப்பட்டமைக்கு நஷ்ட ஈடு வழங்கக் கோரி யாழ்குடா வர்த்தகர்கள் கடையடைப்புப் போராட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

கடந்த 21ம் திகதி யாழ். வணிகர் கழகம் ஏற்பாடு செய்த போராட்டத்திற்கு அனைத்து வர்த்தகர்களும் தமது ஒத்துழைப்பை வழங்கியதாகவும், இதன்போது யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பில் எரிந்த நிலையில் இரு சடலங்கள்

கொழும்பு கொட்டாஞ்சேனை கல்லூரி வீதியில் (College Street) வீடொன்றில் இருந்த இரு நபர்களின் சடலங்கள் எரியுண்ட நிலையில் கடந்த செவ்வாயன்று மீட்கப்பட்டுள்ளன.

இறந்தவர்கள் சுசீதாவடிவேல் (55) அவரது இரண்டு வயது மகன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது பற்றிய மேலதிக விபரங்கள் கிடைக்கப் பெறவில்லை. மீட்கப்பட்ட உடல்கள் பொரளை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## கட்டைபறிச்சானில் இரண்டு படையினர் பலி! நால்வர் படுகாயம்

### பதுங்கியிருந்த படையினர் மீது தாக்குதல்

திருமலை - கட்டைபறிச்சானில் சிறிலங்காப் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் இரண்டு படையினர் கொல்லப்பட, நான்கு படையினர் படுகாயம் அடைந்துள்ளதாக சிறிலங்கா தேசிய பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

கடந்த புதனன்று கட்டைபறிச்சான் பகுதியில் விடுதலைப் புலிகள் அங்கு நடமாடுவதாக கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற படையினர் விடுதலைப் புலிகளை எதிர்பார்த்து பதுங்கியிருந்தனர். அப்போது பதுங்கியிருந்த படையினரை நோக்கி திடீரெனத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதன்போதே இரண்டு படையினர் கொல்லப்பட நால்வர் படுகாயமடைந்ததாகவும் தெரிய வருகின்றது.

ஆனால் இத் தாக்குதல் குறித்து மேலும் தகவல் வெளியிட்டுள்ள இராணுவத் தலைமைச் செயலகம் தாம் பத்து விடுதலைப் புலிகளைச் சுட்டுக் கொன்றுள்ளதாக கூறியுள்ளது.

ஐ.நா. 50வது மனித உரிமை உபஆணைக் குழுவில்

# செம்மணி விவகாரத்துக்கு சிறீலங்கா பதிலளிக்கும்!

([illegible])

ஜெனிவாவில் ஐ.நா.வின் 50வது மனித உரிமை உப ஆணைக்குழு கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகியது. இவ் உப ஆணைக்குழு இருபத்தி எட்டு (28) சட்ட ஆலோசகர்களை அங்கத்தவர்களாக கொண்டுள்ளது. இவ் ஆலோசகர்கள் கண்டங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஆசிய பகுதியினுள் சிறீலங்காவைச் சேர்ந்த சிங்களவர் ஒருவரும் இம்முறை முதன் முறையாக அங்கத்துவம் பெற்றுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக் கூட்டத்தொடருக்கு ஆபிரிக்காவின் செனகல் நாட்டைச் சேர்ந்த திருகிசே என்பவர் தலைமை தாங்குகிறார். இக் கூட்டத்தொடரில் பங்கு கொள்ள உலகின் பல பாகங்களிலிருந்தும் பெருந்தொகையான அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் (NGOS) இங்கு வருகை தந்துள்ளார்கள்.

இக் கூட்டத் தொடரின் முதல் வாரம் நாடுகளின் மனித உரிமை மீறல்களை ஆராயும் இடத்தில் இருபெரும் பழமை வாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களான சர்வதேச கல்வி நிறுவனம், வடக்கு-தெற்கு 21 ஆகியவை சிறீலங்காவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை கடுமையாகக் கண்டித்தன. 'வடக்கு-தெற்கு 21' இன் சார்பில் உரையாற்றிய செல்வி டியமற்றி மக்கோனல் கடந்த காலத்தில் இலங்கைத் தீவில் நடைபெற்ற தமிழர் படுகொலைகளை வரிசைப்படுத்திக் கூறியதுடன், அண்மைக் காலத்தில் உலகத்தின் கண்களைத் திறக்க வைத்த 300-400 செம்மணிப் படுகொலைகளுக்கு இவ் உப ஆணைக்குழு உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

சர்வதேச கல்வி நிறுவனத்தின் சார்பில் உரையாற்றிய திரு. சசிகிருபாகரன், கடந்த 15 வருட காலத்தில் 50,000க்கு மேற்பட்ட தமிழ் மக்களே பலியாகியுள்ளனர். தொடர்ந்தும் தமிழ் மக்களே கைது செய்யப்பட்டும் சித்திரவதை செய்யப்பட்டும் காணாமல் போயும் இடம் பெயர்ந்தும் வருகின்றார்கள். ஆனால் தமிழ் மக்களின் படுகொலை சர்வதேசக் கண்களிலிருந்து மறைக்கப்படுகிறது. இதுவும் ஒரு வித இனவேறுபாடே! தமிழ் மக்களை சிங்கள ஆட்சியாளர்களின் கீழ் வாழுமாறு கேட்பது, பிரஞ்சு மக்களை இத்தாலிய ஆட்சியின் கீழ் வாழுமாறும், நோர்வே மக்களை ஸ்வீடன் ஆட்சியாளர்களின் கீழ் வாழுமாறும் கேட்பதற்கு ஒத்ததாகுமென உரையாற்றினார்.

இதற்குப் பதில் அளித்த சிறீலங்கா அரச வதிவிடப் பிரதிநிதி, தமது நாட்டில் மனித உரிமைகளை நிலைநாட்ட பல வழிகளில் முயற்சிக்கிறோம் என்று கூறி, செம்மணி படுகொலைகளை மூடிமறைத்து விட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத் தொடரில் உரையாற்றிய திருமதி கரன் பாக்கர், தமிழர் மீது சிறீலங்கா அரசினால் திட்டமிடப்பட்டு பொய்ப் பிரச்சாரங்கள் வெருமனவில் நடைபெறுவதாகவும், இப் பொய்ப்பிரச்சாரத்தில் சர்வதேச நிதியில் ஈடுபடுவோர் உணவு வசதிகள், மருத்துவ வசதிகள், கல்வி வசதிகள் இல்லாத 850,000 தமிழர்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ளார்கள் என்பதை அறிவார்களா? அத்துடன் சிறீலங்கா 1997ம் ஆண்டில் காணாமல் போனோர் வரிசையில் முதலிடம் வகிப்பதை அறிவார்களா? எனவும் கேள்வி எழுப்பினார்.

விடுதலை என்னும் நிறுவனத்தின் சார்பில் உரையாற்றிய செல்வி. மான், நடைபெற்று வரும் யுத்தத்தில் பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 500 அப்பாவித் தமிழ்ப் பெண்கள் சிறீலங்காவின் சிறைச்சாலைகளில் எவ்வித குற்றச்சாட்டுகளும் இல்லாது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதே வேளை அத்திரவாதத்துக்கு எதிரான நிறுவனம், சர்வதேச ஜனநாயகப் பெண்கள் அமைப்பு, கிறிஸ்தவ ரோமன் அமைப்பு, பிரான்சின் மிகவும் பழமை வாய்ந்த அமைப்பான மிறப் (MRAP) மற்றும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கைத்தீவில் தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்களை வரிசைப் படுத்தி இங்கு சமர்பித்தார்கள்.

பிரான்சில் உள்ள மிறப் (MRAP) இன் சார்பில் உரையாற்றிய திரு மோல் ஜக் அவர்கள், சிறுபான்மையினம் என்ற போர்வையில் மற்ற இனத்தவர்களுக்கு சம உரிமையை அரசுகள் மறுத்து வருகின்றன. இதற்கு நல்ல உதாரணமாக சிறீலங்காவைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றார். சிறீலங்காவில் தற்போது நடைபெறும் யுத்தத்தை நல்ல முறையான அரசியல் தீர்வு மூலம் தடுப்பதற்கு அரசு தவறியுள்ளது. வேறுபட்ட மொழி, சமயம், கலாச்சாரத்தைக் கொண்ட இனத்தவர்களிடையே வரும் அரசியல் தலைவர்கள் விட்ட தவறினால் இன்று பேச்சு வார்த்தை என்பது மிகவும் கடினமான நிலையை இருசாரிடையேயும் உருவாக்கியுள்ளது. ஆகையால் இக் கூட்டத் தொடரின் மூலம் சிறீலங்காவில் பேச்சுவார்த்தைக்கு ஏற்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று கூறினார்.

இக்கருத்து இக்கூட்டத்தொடரில் பங்கு பெற்றும் சட்ட நிபுணர்களிடையே வரவேற்பு பெற்றபோதும், பிரான்ஸ் சட்ட நிபுணரான திருஜொய்பூவானே உரையாற்றும் போது 'நாம் இரு பகுதியினரையும் போரை நிறுத்தி பேச்சு வார்த்தைக்கு கொண்டுவரும் நிலைக்கு ஓர் சூழலை உருவாக்க வேண்டும்' இதுவே இவ் உப ஆணைக் குழுவின் கடமையாக அமைய வேண்டும் என்றார்.

தொடர்ந்து நடந்த கூட்டத் தொடரில் சர்வதேச கல்வி நிறுவனம், வடக்கு-தெற்கு 21, விடுதலை, சர்வதேச ஜனநாயக பெண்கள் அமைப்பு போன்றவை செம்மணிப் புதைகுழிகள் தொடர்பாக இவ் உப ஆணைக்குழு தமிழ் மக்களுக்கு என்ன பதிலை கூறவுள்ளது என அக்கறையுடன் கேட்டுள்ளன.

இவ்வினாவுக்கு சிறீலங்கா அரசின் பதில்களை இவ் உப ஆணைக்குழு எதிர்பார்த்த வண்ணம் உள்ளது. அங்குள்ள ஆர்வலரின் கணிப்பின்படி, அதிகமாக செவ்வாய்க்கிழமை சிறீலங்கா அரசு பதில் கூறலாம் என்று எதிர்பார்க்கிறார்கள்.

## இராணுவ தளபதிகள் இடமாற்ற செய்தியும் தணிக்கை

சிறீலங்கா படை தளபதிகள், உயர் அதிகாரிகளின் இடமாற்றம் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வெளியிடுவது தடை செய்யப்பட்டுள்ளது. இவ் அறிவித்தலைத் தணிக்கை அதிகாரியான மேஜர் ஜெனரல் எஸ்.ரி.ரி ஜெயசுந்தர பத்திரிகைகளுக்கு சென்றவாரம் அறிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் போர்முனைகளுக்கு அனுப்பப்படும் தளபதிகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படுவதால் விடுதலைப் புலிகள் உளவுத்துறை பிரிவினர் அவர்களுடைய நடவடிக்கைகளை அடையாளம் கண்டுகொள்வது இலகுவாக உள்ளமையே இத் தணிக்கைக்கு காரணம் என அறியமுடிகிறது.

இதேவேளை ஏற்கனவே இராணுவ செய்திகளுக்கு தணிக்கை விதிக்கப்பட்டுள்ளது. இப்போது இராணுவ தளபதிகளின் இடமாற்றங்களின் செய்திகளுக்கும் தணிக்கை விதிக்கப்பட்டுள்ளதால் பத்திரிகையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்

— [illegible] —

முள்ளைத்தீவு கடலில் வைத்து சிறீலங்கா விமானப் படையால் குண்டு வீசி அழிக்கப்பட்ட 'பிரின்சஸ்காஷ்' கப்பல் சிறீலங்கா படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள கடற் பகுதியில் வைத்து குண்டுவீசி அழிக்கப்பட்டது நிரூபிக்கப்பட்டால் சிறீலங்கா அரசு 'பிரின்சஸ் காஷ்' கப்பலின் கப்டனிடமும், இந்தியாவிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் அரசு மன்னிப்பு கேட்க மறுக்கும் பட்சத்தில், இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகளில் பல பின்னடைவுகளை சந்திக்க வேண்டி நேரிடும் எனவும் தெரிவித்துள்ளார்.


தமிழர் புனர்வாழ்வுக்கழக ஜேர்மன் கிளை
நடாத்தும்

**விடுதலை கானம்பாடி - 1998**

சிறந்த பாடகர் தெரிவுப்போட்டி

தமிழர் புனர்வாழ்வுக் கழக ஜேர்மன்கிளை வருடாவருடம் நடாத்தும் 'விடுதலை கானம்பாடி' சிறந்த பாடகர் தெரிவுப்போட்டியின் 1998ம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பங்குபற்றுவோருக்கான விதிகள்

1. இதுவரை வெளிவந்துள்ள தமிழீழ விடுதலைப் பாடல் தொகுப்புகளில் இருந்து மாத்திரமே போட்டிக்கான பாடல்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.
2. போட்டியாளரின் தெரிவுக்காக இரண்டு பாடல்கள் அனுமதிக்கப்படும்.
3. இசைக்குரல் பாடற்போட்டி, தனிக்குரல் பாடல் போட்டி என இருவகைப் போட்டிகள் நடாத்தப்படும்.
4. 14 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு எனவும், 14 வயதிற்கு உட்பட்டோர் கீழ்ப்பிரிவு எனவும் இரு பிரிவுகளாகப் பிரித்து தனிக்குரல் பாடற் போட்டி நடாத்தப்படும்.
மேற்பிரிவு: 31.12.1984 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.
கீழ்ப்பிரிவு: 01.01.1985 அன்றும் அதற்கு பின்னரும் பிறந்தவர்கள்.
5. இசைக்குரல் பாடற்போட்டிக்கு வயதெல்லை இல்லை. தெரிவு செய்யும் பாடல் இசைக்குரல் பாடலாக இருத்தல் வேண்டும்.
6. முதற்சுற்றுப் போட்டியில் தெரிவான பாடகர்கள் இறுதிப்போட்டிக்கு அழைக்கப் படுவர்.
7. விண்ணப்பக் கட்டணமாக 75.00 DM செலுத்தப்பட வேண்டும்.
T R O., Deutsche Bank Monchengladbach, - Konto 7360217, BLZ 31070001
என்னும் வங்கி இலக்கத்துக்கு பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினைத் தங்கள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
8. விண்ணப்பம் சேர்வதற்கான இறுதித் திகதி: 31.08.98.
9. விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி
E. Anandarajah - Tamilische Rehabilitations Organisation
Hompesch Str. 16, 41189 Munchengladbach.

போட்டியாளர்களுக்கான இறுதி அறிவித்தல் இது

ஆர்வமுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் — ஜேர்மன் கிளை



AUDIO - CD களில்
மனங்கவர்ந்த
பழைய, புதிய பாடல்கள்....

டென்மார்க்கில்

தரமான பிரதிகளில்
பழைய, புதிய
திரைப்படங்கள்
வாடகைக்கும்
விற்பனைக்கும்...

நவீன டிசைன்
தங்க நகைகள்...

இசைபாலனத்தின் சங்கமம்

**HAPPY ENTERPRISE**

VIJAYAKANTHAN
Ostervold-5
8900 Randers
Tlf: 86422094, 86438027
Mob: 30407266

WESTERN UNION
20 நிமிடங்களில்
பணமாற்று சேவை

சிங்கப்பூர், பாங்கொக் இந்தியா
போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட நவீனரக ஆடைகள்...

நம் நாட்டு
கடல் - புலக்கறி உணவு வகைகள்...
மளிகைப் பொருட்கள்....

குத்துவிளக்கு மணவறை
திருமணங்களுக்கு வேண்டிய
அலங்காரப் பொருட்கள்...

# விடுதலைப் புலிகளினால் தான் நாம் உயிர் தப்பினோம் – பிரின்சஸ்காஷ் கப்டன்



விமான நிலையத்திலிருந்து வாகனத்துக்கு அழைத்துச் செல்லப்படும் மாலுமிகள்

விடுதலைப் புலிகளினால் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட 17 இந்திய மாலுமிகளும் விமான நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டபோது, சிறிலங்கா விசாரணை குழுவினரால் கப்பலின் கப்டனும், தலைமை அதிகாரியும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கடந்த 19-ம் திகதி 2.30 மணியளவில் சென்னை செல்ல இருந்த 'இந்தியன் ஏர்லைன்' விமானத்தில் 17 மாலுமிகளும் பயணம் செய்ய ஏற்பாடாகி பண்டாரநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டனர். ஆனால் அங்கு வந்த விசாரணை அதிகாரிகள் 15 மாலுமிகளையும் செல்லுமாறு அனுப்பி விட்டு இருவரையும் தடுத்து வைத்து விசாரணை செய்துள்ளனர். பின்னர் மாலை 5.20 மணி விமானத்திலேயே சென்னை செல்ல அனுமதித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு பொருட்களை விநியோகிக்க தாம் சென்றதாக சிறிலங்கா அரசு கூறிய குற்றச்சாட்டை கப்பலின் கப்டன் மறுத்திருக்கின்றார். தாம் இந்திய பிரஜைகள் என்று தெரிந்த பின்னர் தம்மை மிகவும் கௌரவமாக நடாத்தினாகவும் தமது கப்பலில் சிறிலங்காப் படைகளுக்கான ஆயுதங்கள், வெடிமருந்து பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றனவா என்பதை அறிவதற்கே விடுதலைப் புலிகள் கப்பலை தடுத்து நிறுத்தியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கப்பல் தடுத்து நிறுத்தப்பட்டதும் ஆண்கள் பெண்கள் உட்பட 25ற்கும் மேற்பட்ட புலிகள் வேகமாக கப்பலில் ஏறி கப்பலை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்ததாகவும் எச்சரிக்கையாக வானத்தை நோக்கி துப்பாக்கி சூடு நிகழ்த்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

தமது கப்பலை விமானப் படையினரை தாக்குதல் நடாத்த வேண்டாம் என சிறிலங்கா அரசிடம் கோரிக்கை விடுத்த போதும் அதனை ஏற்றுக்கொள்ளாது கப்பலைக் குண்டு வீசி அழித்ததுடன் கரையோரப் பகுதிகளிலும் பலத்த குண்டு வீச்சை நிகழ்த்தியது. விடுதலைப் புலிகள் வேகமாக தம்மை கரைப் பகுதிக்கு கொண்டு வந்து தமது பதுங்கு குழியில் எமக்கு பாதுகாப்பு வழங்கியதாலேயே தங்களது உயிர் தப்பியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியா திரும்பிய முதல் 15 மாலுமிகளுடன் பத்திரிகையாளருடன் பேசக்கூடாது என இந்திய புலனாய்வுத்துறை உட்பட சில முக்கிய அதிகாரிகளினாலும் வற்புறுத்தி கூறப்பட்டிருந்தது. எனினும் இவர்கள் விமான நிலையத்தில் இருந்து வாகனத்திற்கு அழைத்துச்சென்ற வேளை அங்கு கூடியிருந்த பத்திரிகையாளர்கள் புகைப்படப் பிடிப்பாளர்கள் மத்தியில் ஒரு மாலுமி 'The LTTE are very nice people' என ஆங்கிலத்திலும் 'விடுதலைப் புலிகள் மிகவும் நல்லவர்கள்' என தமிழிலும் சத்தமிட்டுக் கூறியுள்ளார். ஆனால் உடனே பொலிசார், அவரது வாகனத்தின் கண்ணாடியை வேகமாக மூடியதால் சத்தம் எதுவும் வெளிவரவில்லை என இந்திய எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் செய்தி வெளியிட்டுள்ளது.

## யாழ் நகர வீடுகளில் இராணுவத்தினர் கொள்ளை

(யாழ்ப்பாணம் ஆவணி 20)

யாழ். நகரத்திலுள்ள வீடுகளுக்கு இரவு வேளைகளில் சீருடையில் செல்லும் சிறிலங்கா இராணுவத்தினர் அங்கிருப்பவர்களை மிரட்டி பணம் நகை என்பவற்றைக் கொள்ளையடித்து வருகின்றனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டப் பகுதியில் தனியாக வசித்து வந்த ஒரு பெண்ணின் வீட்டுக்குள் புகுந்த இராணுவத்தினர், அவரிடமிருந்து தாலிக்கொடி உட்பட இலட்ச ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அதே போல் ஆனைப்பந்திப் பகுதியில் அமைந்திருந்த வீடொன்றுக்கு நள்ளிரவு வேளையில் சென்ற இராணுவத்தினர் அந்த வீட்டுக்காரரிடம் உங்கள் வீட்டையும் வீட்டிலுள்ளவர்களையும் சோதனை செய்யவேண்டும் எனக்கூறி 2 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் 80 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

## குண்டுப் புரளியால் மாவனல்லை நகரத்தில் ஏற்பட்ட பீதி

(கண்டி ஒகஸ்ட் 21)

மாவனல்லை நகரத்தினூடாக ஓடிக்கொண்டிருக்கும் மகா ஓயா நதியின்மேல் கட்டப்பட்டிருக்கும் பிரதான பாலத்தைத் தகர்ப்பதற்கு குண்டு வைக்கப்பட்டுள்ளது என்று பரப்பி விடப்பட்ட வதந்தியால் கடந்தவாரம் மாவனல்லை நகரம் அல்லோலகல்லோலப்பட்டது.

கடந்த 15-ம் திகதி காலை 10.30 மணியளவில் கொழும்பிலிருந்து கண்டியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கனரக வாகனமொன்று மாவனல்லை மகாஓயா பாலத்தின்மேல் செல்லும்போது இயந்திரக் கோளாறினால் நடுவீதியில் நின்றுவிட்டது. 20 மீற்றர் நீளமும், 32 சக்கரங்களும் கொண்ட இந்த பாரிய வாகனம் நடுவீதியில் நின்றுவிட்டதால் கண்டியில் இருந்து கொழும்பிற்கு வரும் வாகனங்களும் கொழும்பிலிருந்து கண்டிக்கு வரும் வாகனங்களும் மேற்கொண்டு பயணத்தை தொடராதபடி முடங்கிக்கொண்டன.

பாலத்தின் நடு வீதியில் நின்றுவிட்ட கனரக வாகனத்தின் இயந்திரக் கோளாறை சரி செய்வதற்கு அந்த வாகனத்தின் சாரதியும் அதிலிருந்தவர்களும் செய்த முயற்சி பலனளிக்கவில்லை. மாவனல்லை நகரத்திலிருந்த வாகன திருத்துனர்கள் வந்து பார்த்தும் அந்த வாகனத்தைத் திருத்த முடியவில்லை. கொழும்பிலிருந்து ஆட்கள் வந்துதான் அதைத் திருத்தவேண்டும் என்ற நிலையில் காலை 11.30 மணிக்குள் மாவனல்லை நகரத்திலிருந்து இருபுறமும் 5 கிலோ மீற்றர் நீளத்திற்கு போக்குவரத்திற்கு தடை ஏற்பட்டுவிட்டது.

இதற்கிடையில் இந்தக் கனரக வாகனத்தில் விடுதலைப் புலிகள் குண்டைப் பொருத்தி வந்து பாலத்தை தகர்ப்பதற்காக அங்கே நிறுத்தியிருக்கிறார்கள் என்ற வதந்தி அங்கே பரவிவிட அந்தப் பாலத்திற்கு அண்மையில் இருந்த மாவனல்லை நகரவாசிகளும் அந்த வாகனத்தின் அருகாமையில் இருந்த வாகனங்களின் சொந்தக்காரர்களும் தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள உடைமைகளையெல்லாம் அப்படியே விட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

அதற்குள் சிறிலங்கா இராணுவத்தினர் குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினருடன் அங்கு விரைந்து வந்து அந்த வாகனத்தை சோதனையிட்டு அந்தச் செய்தி வெறும் வதந்தி என்று அறிவித்தனர். ஆயினும் அந்த வாகனம் அந்தப் பாலத்தில் இருந்து அப்புறப்படுத்தப்படும் வரை மாவனல்லைவாசிகள் அதை நம்பத் தயாராக இருக்கவில்லை.

## நடைபாதை குறிப்புகள்

### எய்தவன் இருக்க அம்பை ஏன் நோவான்...

ஆல்ச்சிலுள்ள சிலேரன் நகரில் 01.08.98 சனிக்கிழமை இரவு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி வீதியோரமாக உள்ள மோட்டார் வாகனத் தரிப்பிடத்தில் இரு தமிழ் இளைஞர்கள் தங்கள் நண்பர்களுக்காகக் காத்திருந்தனர். ஒரு ஜப்பானிய தயாரிப்பிலான மோட்டார் வண்டியில் காத்திருப்பவர்களுக்கு அருகில் இரு நண்பர்கள் வந்து நடுவீதி ஓரமாக நின்ற நால்வரும் கதைத்துக்கொண்டிருக்கின்றார்கள். வீதியோ மிகவும் போக்குவரத்தான பிரதான பாதை. ஆனாலும் இரவு பன்னிரண்டு மணியைத் தாண்டிவிட்டதனால் ஒரு சில வாகனங்களே காணப்பட்டது. வீதியால் வந்த மாநில போக்குவரத்து வண்டி ஓட்டுநர் சற்று வேகத்தைக் குறைத்து, வீதியோரத்தில் நின்ற நால்வரையும் பார்த்து ஏதோ கூறிவிட்டுச் சென்றுவிட்டார். ஆனால் அந்த நால்வரும் சாரதியைப் பற்றி பலமாக விவாதித்தார்கள். 'நாம் என்ன தரிப்பிடத்தில்தானே நிற்கின்றோம்', 'ஓட்டுநருக்கு வெளிநாட்டவர் மீது துவேசம்', 'நாங்களும் வீதிக்கு வரி கட்டுகின்றோம்தானே', 'ஓட்டுநருக்கு வெறியாக்கும்' என்று பலவாறான கதைகளை வெளிப்படுத்தினர். அன்றைய தினம் சுவிஸ் நாட்டின் சுதந்திரதினம் ஆதலால் தாங்கள் வெளிநாட்டுக்காரர் என்பதாலேயே ஓட்டுநர் தம்மைத் திட்டியதாக முடிவு செய்துவிட்டு மோட்டார் வண்டியில் ஏற முற்பட்டபோதுதான் உண்மை புரிந்தது. அதாவது வீதியோரம் நின்ற தமது மோட்டார் வண்டியின் கதவுகள் மூடப்படாத நிலையில் போக்குவரத்திற்கு அதிகூடிய அசௌகரியமான மாநில போக்குவரத்து வண்டிக்கு மிகவும் இடைஞ்சலாகக் காணப்பட்டதால்தான் ஓட்டுநர் அதனை சுட்டிக்காட்டவே கூறியதை அறிந்து தங்கள் தவறையும் உணர்ந்தார்கள் அந்த நால்வரும். எங்களில் பிழையை வைத்துக்கொண்டு வீணாக ஏன் மற்றவர்களிடம் சந்தேகப்படுவான்.

Maria Stores

Mulhouse இல் புதிய மளிகைக் கடை

உங்களுக்குத் தேவையான மளிகைச் சாமான்கள், காய் கறிகள், மீன் வகைகள் வீடியோ கேசட்டுகள், ஆடியோ சீ.டிகள், கேசட்டுகள், டெலிபோன் கார்ட்கள், பரிசளிப்பு பொருட்கள், ஆடை வகைகள் பத்திரிகைகள், மற்றும் உங்களுக்குத் தேவையான இதர பொருட்கள் தரமான, உத்தரவாதமான முறையில் உங்களுக்கு அளிக்கின்றது Maria Stores

என்றும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய காத்திருக்கும் கடை Maria Stores

Maria Stores
30, bd de L'Europe
68100 Mulhouse
Tel: & Fax: 03 89 45 70 29
திங்கள் விடுமுறை

# 31-ம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு:
18 – 03 – 1934



இறப்பு:
26 – 07 – 1998

# திருமதி தங்கமணி பொன்னம்பலம்

காலம்சென்ற பொன்னம்பலம் தங்கமணி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 25.08.98 அன்று யாழ்ப்பாணம் 34 செட்டித்தெரு நல்லூரில் நடைபெறவுள்ளன. அன்னார் கலாம்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், ஆறுமுகசாமி (தொழில் நுட்ப உத்தியோகத்தர் யாழ் மாநகரசபை) நித்தியானந்தன் (பாறேன்) வி.கனகேஸ்வரி, க.இராஜேஸ்வரி பஞ்சாட்சரம் (பாறேன்) ப. ஞானேஸ்வரி, சு. செல்வராணி (லண்டன்), நந்தகுமார் ( லண்டன்) கண்ணதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆ. சகுந்தலாதேவி, நி.சாந்தரூபி வில்வநாதன் (பாறேன்) கருணானந்தன், ப. பாமினி (பாறேன்), பரமேஸ்வரன் (டோகா), சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆ.செந்தூர்ராஜ், ஆ.அபிராஜ், ஆ. டிச்சோராஜ், நி. நிசாந்தன், ஆ.தனராஜ், நி.நிஜேசன், வி.நிகஷ்யா வி. டினேஸ். வி.தர்சன், க. மஞ்சுவாசினி, க. ரஜேந்தன், க.சயந்தன், க.சுகி, க. கஜா ஆகியோரின் பேத்தியுமாவார். அன்பும் பாசமும் கொண்ட எங்கள் அம்மாவிற்கும், மாமிக்கும், அப்பம்மாவிற்கும் அம்மம்மாவிற்கும் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.07.98இல் நடைபெற்ற பொழுது (எமக்கு கடிதம் மூலமும் தொலைபேசி மூலமும் என்னிடம் நேரில் வந்தவர்களுக்கும்) எமக்கு ஆறுதல்கூறியும் இறுதிக் கிரிகைகளில் எமக்கு பல விதத்திலும் உதவிய உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுறோம்.

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(இலங்கை)

தகவல்: மகன்
நந்தகுமார் (லண்டன்)
தொ.பேசி.: 01814614428 அல்லது 961 806047

# இஸ்லாமிய உலகை ஒன்றிணைக்கும் அமெரிக்காவின் திசைமாறிய தாக்குதல்கள்

வியாழனன்று மாலை உலகின் செய்தி நிறுவனங்களிலிருந்து எல்லாம் பரபரப்பான ஒரு செய்தி கிட்டியது. அமெரிக்கா, சூடான் மேலும் ஆப்கானிஸ்தானிலும் ஏவுகணைத் தாக்குதல்களை நடாத்தியது. இதன்மூலம் பல பயங்கரவாதிகளையும் அவர்களது உடைமைகளையும், அவர்களால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகளையும் தாம் ஒழித்துவிட்டதாக அமெரிக்கா பிரகடனப்படுத்தியது. முழு உலகமும் அமெரிக்காவின் மற்றுமோர் விடயம் பற்றிய உற்று கவனித்துக் கொண்டிருந்தவேளை இவ்வகையான முற்றிலும் மாறுபட்ட செய்தியை உலகிற்கு அறிவித்து அவர்களது கவனத்தை வேறு திசையில் திருப்பியது.

**ஆப்கானிஸ்தானில் தனது மறைமுகப் பிரதிநிதியாக ஒருவரைத் தேடிக்கொண்டிருந்த அமெரிக்காவுக்கு சரியான ஆளாகப்பட்டவர் ஒசாம் பின் லாடன்.**

அது மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதல்கள் அமெரிக்காவின் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது உண்மைதான். காரணம் அதற்கு ஒரு வாரத்திற்கு முன்புதான் ஆபிரிக்காவில் இரண்டு அமெரிக்க தூதரகங்கள் குண்டுத்தாக்குதல்களுக்கு இலக்காகியிருந்தன. இதனால் ஏற்பட்ட உயிரிழப்புக்களால் ஆத்திரமடைந்த அமெரிக்க மக்களுக்கு அமெரிக்காவின் தாக்குதல்கள் சந்தோஷத்தைக் கொடுக்கும் என்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் சர்வதேச உலகைப் பொறுத்தவரை அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகள் பலதரப்பட்ட மாறுபட்ட கணிப்புக்களையும் கண்டனங்களையும் ஏற்படுத்தின. பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ் உட்பட ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் தாக்குதல்களை வரவேற்றிருந்தன. ஆனால் ரஷ்யா இதனை வன்மையாகக் கண்டித்தது. அதேபோல் மத்திய கிழக்கும் ஆபிரிக்காவும் ஒட்டுமொத்தமாக அமெரிக்க நடவடிக்கையை ஆக்கிரமிப்பு நடவடிக்கையென வர்ணித்தது.



அமெரிக்காவிலும் பல அரசியல் ஆய்வாளர்கள் அமெரிக்க நடவடிக்கையை முட்டாள்தனமானது என வர்ணித்ததுடன், அவசரமாக எடுக்கப்பட்ட இந் நடவடிக்கையால் அமெரிக்கா எதிர்காலத்தில் பெரும் சிக்கல்களை எதிர்கொள்ளும் என எச்சரித்தனர். இவ்வளவு எதிர்ப்பிற்கும் மத்தியில் அமெரிக்கா தான் மேற்கொண்ட தாக்குதல்களை பயங்கரவாத இலக்குகள் தான் என நிரூபிக்க முயன்று கொண்டிருந்தது.

மத்திய ஆபிரிக்காவில் தூதரகங்கள் தாக்கப்பட்டதால் 258 பேர் கொல்லப்பட்டது தெரிந்ததே. இத்தாக்குதல்களின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து பழிவாங்க அமெரிக்கா துடித்துக்கொண்டிருந்தது. அமெரிக்கா இத்தூதரக தாக்குதல்களுக்கு ஈராக்கே காரணமாக இருக்கலாம் என உறுதியாக நம்பியது. இதன்மூலம் மீண்டும் ஈராக்கை நசுக்கிவிடலாம் என அது எண்ணியிருந்தது. ஆனால் அமெரிக்காவின் உளவுத்துறையினர் நடாத்தப்பட்ட குண்டு வெடிப்பிற்கு மத்திய கிழக்கின் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களும் சவுதி அரேபியாவின் கோடீஸ்வரரான ஒசாமா பின் லாடனும்தான் காரணம் என கூறியது.

மத்திய ஆபிரிக்காவில் தூதரகங்கள் தாக்கப்பட்டபோது அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் மெடலின் ஆல்பிரைட் செய்தியாளர்களிடம், எமது தூதரகத்தைத் தாக்கியது எமது நாட்டைத் தாக்கியதுபோலாகும். எமது தற்பாதுகாப்பை உறுதிப்படுத்த நாம் திருப்பித் தாக்கும் உரிமையைக் கொண்டுள்ளோம் எனக் கூறியிருந்தார்.

இது இப்படியிருக்க அமெரிக்காவின் ஜனாதிபதியும் அந்நாட்டின் தலைமைத் தளபதியுமான பில் கிளின்டன் வெள்ளை மாளிகை பயிற்சியாளரான மொனிக்கா லெவின்ஸ்கியுடனான பாலியல் விவகாரம் தொடர்பாக விசாரணைகளுக்குள்ளாகி ஓர் முடிவிற்கு வரும் நிலையில் இருந்தது. தொடர்ந்து நீண்ட காலமாக தனது பாலியல் தொடர்பை மறுத்துவந்த கிளின்டன் சில தினங்களுக்கு முன்னர்தான் தனது தொடர்பை ஒத்துக்கொண்டு அமெரிக்க மக்களிடம் மன்னிப்புக் கோரியிருந்தார்.




அதுவரை எவரும் பெறாத பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்த கிளின்டன் இவ் விவகாரத்தில் தன் செல்வாக்கினை இழக்கும் நிலையில் இருந்தார். உலகின் மிகப் பெரும் ஜனநாயகநாடு எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் அமெரிக்கநாட்டின் ஜனாதிபதி பாலியல் விவகாரத்தில் சிக்கி என்ன தண்டனையைப் பெறப்போகின்றார் என உலகமும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. இவ்வாறான நிலையில்தான் அமெரிக்காவின் ஏவுகணைகள் ஆப்கானிஸ்தானையும் சூடானையும் சென்று தாக்கின. அமெரிக்கா இத் தாக்குதல்களை மேற்கொண்டதன்பின் சூடானில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக்கூடிய நச்சு வாயு தயாரிப்பிற்கு உதவும் பொருட்களைத் தயாரித்த ஓர் தொழிற்சாலையை தாம் தாக்கி அழித்துள்ளதாகவும் இத் தொழிற்சாலை சவுதி கோடீஸ்வரரின் பங்குதாரால் கட்டப்பட்டது என்றும் கூறியது.

அதேபோல் தற்போது ஆப்கானிஸ்தானில் வசித்துவரும் இந்த சவுதி கோடீஸ்வரரின் ஆறு பயங்கரவாத பயிற்சி முகாம்களையும் தமது ஏவுகணைகள் தாக்கி அழித்துள்ளதாயும் கூறியது. இதுவரைகாலமும் அமெரிக்காவிற்கு எதிரான பல தாக்குதல்களுக்கு சூத்திரதாரியாக இருந்த ஒசாமா பின் லாடனின் நடவடிக்கைகளை தாம் முறியடிக்க நீண்டகால திட்டத்தை தயார்செய்துள்ளதாயும் தமது தாக்குதல் நடவடிக்கைகள் தொடரும் சாத்தியக்கூறும் உண்டு என்றும் அமெரிக்க அதிகாரிகள் கூறினர். இவர்களால் இன்று உலகின் மிகப் பெரும் பயங்கரவாத செயற்பாட்டாளர் என வர்ணிக்கப்படும் இந்த ஒசாமா பின் லாடன் ஆரம்பத்தில் இவர்களது கையாளாகவே கடமையாற்றியுள்ளார் என்பதுவும் குறிப்பிடவேண்டியுள்ளது.

- உதயன் -

சவுதிஅரேபியாவின் மிகப் பெரும் செல்வந்தர்களின் ஒருவரான முகமத் பின் லாடனின் கடைசி மகனான இவர் 1979 ம் ஆண்டு ஆப்கானிஸ்தானுக்கு பயணமானார். அங்கு சோவியத் யூனியனின் படைகள் ஆப்கானிஸ்தான் போராளிகளுக்கு

**உலகின் மிகப் பெரும் ஜனநாயக நாடு எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி பாலியல் விவகாரத்தில் சிக்கி என்ன தண்டனையைப் பெறப்போகின்றார் என உலகமும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. இவ்வாறான நிலையில்தான் அமெரிக்காவின் ஏவுகணைகள் ஆப்கானிஸ்தானையும் சூடானையும் சென்று தாக்கின.**

எதிரான யுத்தத்தில் ஈடுபட்டிருந்த வேளை போராளிகளுக்கு ஆதரவாக இவர் செயற்படத் தொடங்கினார். உலகின் பல பாகங்களிலும் நிறுவனங்களை ஆரம்பித்து ஆப்கானிஸ்தான் போராளிகளுக்குத் தேவையான யுத்த உபகரணங்களையும் மற்றும் கட்டடப்பொருட்களையும் இறக்குமதி செய்தார். இவரது குடும்பத் தொழில் கட்டடக் கலை என்பதால் ஆப்கானிஸ்தானில் இவர் பாரிய வீதி அமைப்புத் திட்டங்களை மேற்கொண்டார். இச்சமயத்தில் சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிரான முஜாகிதீன்களின் யுத்தத்திற்கு அமெரிக்கா தாராளமாக உதவிக் கொண்டிருந்தது.

ஆப்கானிஸ்தானில் தனது மறைமுகப் பிரதிநிதியாக ஒருவரைத் தேடிக்கொண்டிருந்த அமெரிக்காவுக்கு சரியான ஆளாகப் பட்டவர் ஒசாம் பின் லாடன். அன்றைய அமெரிக்க ரீகன் நிர்வாகம் பின் லாடனினூடாக ஆப்கானிஸ்தான் முஜாகிதீன்களுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகளை வழங்கியது. அதே வேளை அமெரிக்க மத்திய உளவுத்துறையினரே பின் லாடனுக்கு பாதுகாப்புப் பயிற்சியை வழங்கியது. இவ்வகையில் நீண்டகாலமாக அமெரிக்காவின் தோழனாகச் செயற்பட்ட பின் லாடன் 1990 களில் சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின் மீண்டும் சவுதி அரேபியாவிற்குச் சென்று தனது குடும்ப நிறுவனங்களின் செயற்பாடுகளில் பங்கேற்றார்.

(தொடரும்)

## பள்ளிகளில் கணினி பயிற்சி – கருணாநிதி அறிவிப்பு

(சென்னை, ஆகஸ்ட் 23)

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கணினி பயிற்சி தொடங்கப்படும். அதற்கான பணி உடனடியாக மேற்கொள்ளப்பட்டு படிப்படியாக நிறைவேறும் என்று முதல்வர் கருணாநிதி அறிவித்தார். சென்னை தரமணியில் ரூ 290 கோடியில் அமைக்கப்படும் மென்பொருள் பூங்காவுக்கு (டைடல் பார்க்) வெள்ளிக்கிழமை அடிக்கல் நாட்டி அவர் பேசியதாவது:

இரண்டாயிரம் ஆண்டுக்குள் உலகளவில் தகவல் தொடர்புத்துறையில் வளர்ச்சி 800 மில்லியன் அமெரிக்க டொலரை எட்டிவிடும். அதாவது ரூ. மதிப்பில் 1800 இலட்சம் கோடியாகும். தமிழ்நாட்டில் 120 மென்பொருள் தொழில் நிறுவனங்கள் உள்ளன. இதில் 15 ஆயிரம் வல்லுநர்கள் உள்ளனர். ஆண்டுக்கு ரூ.1000 கோடி மென்பொருள் ஏற்றுமதியாகின்றன.


இதனையடுத்து தகவல் தொழில்நுட்ப மென்பொருள் பூங்கா அமைக்க அரசு ஆர்வமும் ஊக்கமும் அளித்து வருகிறது. சுற்றுப்புறத்துக்கு மாசு ஏற்படாத வகையில் இத்தொழில் வளாகம் அமையும். சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய இடங்களில் தகவல் தொழில் நுட்ப மையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளோம். மாசுக் கட்டுப்பாடு நிபந்தனைகள் அளிப்பிலிருந்து நிறுவனத்துக்கு விதிவிலக்கு முழுமையாக வழிவிலக்கு அளிக்கப்படுகிறது. 'சாப்ட்வேர்' தொழிலில் ஆற்றல் படைத்தவர்களுக்கு புதிய தயாரிப்புகளை உருவாக்க ஊக்குவிக்கும் வகையில் ரூ.30 கோடியில் சிறப்பு மூலதன நிதி உருவாக்கப்பட்டுள்ளது. செப்டெம்பரில் 3 நிறுவனங்களுக்கு ரூ.530



கோடி நிதியுதவி வழங்கப்படும்.

தொழில் துறையில் இரண்டாம் இடத்தில் உள்ள தமிழகம், முதலிடத்தை அடைய பாடுபட தொழில் முனைவோர் அனைவரும் துணை நிற்கவேண்டும்.

உலகெலாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும் என்றார் பாரதி. அதைப்போல நாம் தமிழைக் கணினி வாகனத்தில் ஏற்ற வேண்டும். இரண்டாயிரம் ஆண்டில் கணினி வானத்தில் தமிழ் ஏறட்டும் என புது வரலாற்று அத்தியாயத்தில் இடம்பெற வேண்டும் எனத் தெரிவித்தார் கருணாநிதி.




## பா.ஜனதாவுக்குப் பதிலடி கொடுக்க ஜெயலலிதா அதிரடி திட்டம்!

### அ.தி.மு.க.எம்.பி.க்களுக்கு அவசர அழைப்பு

(சென்னை, ஆக.29)

கூட்டணியில் இருந்து அதி.மு.க.வை நீக்கினால் ஆட்சிக்கு ஆபத்து ஏற்படாது என்றும் பா.ஜ.க. கருத்து தெரிவித்துள்ளது. எனவே பாரதிய ஜனதா கூட்டணியில் இருந்து அதி.மு.க. நீக்கப்படலாம் என்று டில்லியில் பரபரப்பாக பேசப்படுகிறது.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் ஜெயலலிதாவுடன் பேசி வருகிறார்கள். பாரதிய ஜனதா அரசு கவிழ்ந்தால் ஜெயலலிதாவின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைக்கலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

ஜெயலலிதாவும், பாரதிய ஜனதாவுக்குத் தக்க பதிலடி கொடுக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. இதற்காக அவர் அதிரடித் திட்டம் ஒன்றையும் தயார் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

கூட்டணியில் இருந்து அவர் நீக்குவதற்கு முன்பாக தாமாக ஆதரவை வாபஸ் பெறுவதா? அல்லது அமைச்சரவையில் இருந்து விலகுவதா? இல்லை வேறு வகையில் அரசுக்கு நெருக்கடி கொடுக்கலாமா? என்பது பற்றி ஆலோசித்து வருகிறார்.

இது சம்பந்தமாக அதி.மு.க எம்.பி.க்களை அழைத்து கருத்து கேட்கவும் அவர் முடிவுசெய்துள்ளார். அ.தி.மு.க எம்.பிக்கள் அனைவருக்கும் சென்னைக்கு வரும்படி அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

சொந்த ஊரில் இருக்கும் அவர்கள் இன்று சென்னை வருகிறார்கள். இன்றும் நாளையும் அதி.மு.க எம்.பி.கள் கூட்டம் நடக்கும் என்றும் அதில் அதிரடி முடிவுகள் எடுக்கப்படும் என்றும் அ.தி.மு.க. வட்டாரத்தில் கூறப்படுகிறது.

## அன்னை தெரேசாவை 'புனிதவதி' என்று அறிவிக்க வத்திகான் நடவடிக்கை!

மறைந்த அன்னை தெரேசாவைப் புனிதவதி என்று அறிவிக்கும் முயற்சிகள் வத்திகானில் நடைபெற்று வருகிறது. வத்திகான் கத்தோலிக்க மக்களின் தலைமைச் செயல்பாட்டு நிலையமாகும். இங்குதான் அம்மதத்தின் தலைவர் வசிக்கிறார். கத்தோலிக்கப் பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள், மக்களுக்கு அரிய தொண்டாற்றி வந்து அவர்கள் இறப்பார்களானால், இறந்த பின்னர் கத்தோலிக்க தலைமையகத்திலிருந்து 'புனிதர்' ஆக்கப்பட்ட அறிவிப்பு வெளிவரும்.

ஒருவர் இறந்து ஐந்து ஆண்டுகளுக்கு பிறகுதான் புனிதர் பட்டம் வழங்குவது பற்றி யோசிப்பார்கள். ஆனால் அன்னை தெரேசா ஏழை மக்களுக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி அவர் உயிருடன் இருந்தபோதே புனிதர் பட்டம் வழங்கினார் போப் ஆண்டவர். கத்தோலிக்க திருச்சபையின் இரு முறை முயற்சி ஆகும். அன்னை தெரேசா அனுப்பிய கடிதங்களை உலகம் முழுவதில் இருந்தும் சேகரிக்கும் பணியை வத்திக்கான் கன்னியாஸ்திரிகள் ஆரம்பித்து இருக்கிறார்கள். இப்படி சேகரிக்கப்படும் கடிதங்கள் வத்திக்கானின் பாதுகாப்பு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட இருப்பதாக தெரிகிறது.

Tamileelam Archive

# 5வது ஆண்டு நினைவில்



## சுஜிதா புவனேஸ்வரன்

**தோற்றம்: 30.05.1980**

**மறைவு: 26.08.1993**

ஆடை கட்டிய அழகு மயிலை
பாடையில் பார்க்கும் பாவிகள் ஆனோம்!
சதங்கை பூட்டிய பிஞ்சுப் பாதம்
சாம்பரானதை எப்படி ஏற்போம்.
மனிதம் இன்னும் வாழுமா! இல்லை
புனிதம் கெட்ட பூமிதான் மீளுமா?
வேளை வந்ததா? வினையின் விதியா?
வேதனைப் படுவது ஒன்றுதான் முடிவா?
எம் அன்பு மகளே! சுஜிதா மயிலே!
உன்னைப் பிரிந்து ஐந்து ஆண்டுகள்
உருக்குலைந்து உயிர்வாழ்கின்றோம்
உருமாறிப்போனோம்; உயிரற்று வாழ்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதரிகள், உற்றார், உறவினர்.

**Lambertus Str-58, 52441**
**Linnich - Tetz, Germany**

# 'மருதநாயகம்' படப்பிடிப்பை நடத்தக்கூடாது!


## — கமலஹாசனுக்கு தேவர் பேரவை கோரிக்கை —

(மதுரை, ஓகஸ்ட் 20)

இந்திய சுதந்திர போராட்டத்துக்கு எதிராக ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்த மருதநாயகம் என்ற கான்சாகிப்பை முதல் சுதந்திர போராட்ட வீரனாக சித்தரித்து மருதநாயகம் படம் எடுக்கப்படுகிறது. இது வரலாற்றைத் திரிக்கும் முயற்சியாகும். இதற்காக கமலஹாசனுக்கு தேவர் பேரவை கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது என தேவர் பேரவை நிறுவனர் டாக்டர் ராமலிங்கம் மதுரையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய சுதந்திர போராட்ட வீரர் பூலித்தேவரை காட்டிக் கொடுத்தவர் மருதநாயகம். அவரைப் பற்றித் தவறான கருத்துக்களை மக்களுக்கு சினிமா மூலம் பரப்ப கமலஹாசன் முயற்சிக்கிறார்.

எனவே மதுரை மாவட்ட பகுதிகளில் கமலஹாசன் படப்பிடிப்பு நடத்தக்கூடாது. 48 மணி நேரத்தில் அவர்கள் அந்த



இடத்தை விட்டு வெளியேற வேண்டும். இதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸ் துறை மேற்கொள்ள வேண்டும். இல்லை என்றால் தேவர் பேரவை நேரடி நடவடிக்கைகளில் இறங்கும். அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு தமிழக அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

மதக்கலவரம் நடந்து வரும் இந்த தேசத்தில் மதம் மாறிய ஒருவரை மையமாக வைத்து படம் எடுக்க முயற்சிப்பதைத் தடுக்க வேண்டும்.

மருதநாயகம் படம் எடுக்க முஸ்லிம் தீவிரவாதிகள் மறைமுகமாக பண உதவி செய்வதாகவும் எங்களுக்கு தகவல் வந்துள்ளது. எனவே கமலஹாசனிடம் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் விசாரணை நடத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# பூலான் தேவி கைதாகுவார்?

முன்னாள் கொள்ளைக்காரியும் இந்நாள் அரசியல்வாதியுமான பூலான்தேவியைக் கைது செய்ய 11 பேர் கொண்ட பொலிஸ் படை டெல்லி விரைந்துள்ளது.

கடந்த 80-ம் ஆண்டுகளில் உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட பல மாநிலங்களில் ஏராளமான கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டவர் பூலான் தேவி. உ.பியில் பெஹ்மாய் என்ற இடத்தில் ஒரு இனத்தைச் சேர்ந்த 22 பேரை பூலான் தேவி கொன்று குவித்தனர். சிறைத் தண்டனை முடிந்து வெளியே வந்த பூலான்தேவி சமாஜ்வாடி கட்சியில் சேர்ந்தார். தேர்தலில் நின்றார். லோக்சபா எம்.பியானார். உத்தர பிரதேசத்தில் முலாயம் சிங் முதல்வராக இருந்தபோது அவர் மீதிருந்த பல வழக்குகளை வாபஸ் பெறச் செய்தார். இருப்பினும் மத்திய பிரதேசத்தில் அவர் மீது இன்னும் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதனிடையே, போக்ஸிபூர் கொலை, கொள்ளை தொடர்பாக கான்பூர் நீதி மன்றத்தில் பூலான்தேவி மீது இரண்டு வழக்குகள் இருந்தன. இந்த வழக்கு விசாரணையில் ஆஜராகும்படி பூலான் தேவிக்கு பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டது. அடுத்த மாதம் 4-ம் தேதிக்குள் பூலான் தேவியை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தும்படி பொலிசாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து கான்பூர் எஸ்.பி. திரிபாதி தலைமையில் 11 பொலிசார் டெல்லிக்கு விரைந்துள்ளனர்.

# கூட்டணியில் இருந்து நீக்கப்பட்ட 3 நாட்களில் ஜெயலலிதாவுக்கு சிறை

## பா.ஜனதா கணிப்பு

(புதுடெல்லி, ஆக 22)

கூட்டணியிலிருந்து நீக்கப்பட்ட 3 நாட்களில் ஜெயலலிதா சிறையில் அடைக்கப்படுவார் என்று பாரதிய ஜனதா கணித்து உள்ளது.

மத்தியில் ஆட்சியில் உள்ள வாஜ்பாயுடன் கூட்டணியில் இருந்து கொண்டே அரசுக்கு நிர்ப்பந்தங்களை ஜெயலலிதா ஏற்படுத்தி வருவது தெரிந்ததே? இந்நிலையில்: சென்னையின் இயக்குநர் பருவா, வருவாய்த் துறை செயலாளர் என்.கே.சிங் மற்றும் 8 மூத்த அதிகாரிகளும், இடமாற்றம் செய்யப்பட்டனர். அதன் பின்னணியைப் பத்திரிகைகள் அம்பலப்படுத்தின. இந்நிலையில் பிரதமர் வாஜ்பாய் மீது ஒரு ஊழல் குற்றச்சாட்டை ஜெயலலிதா சுமத்தினார். இந்த அதிகாரிகள் மாற்றத்தில் பெருமளவு பணம் லஞ்சமாகக் கைமாறி உள்ளது. பிரதமருக்கு நெருக்கமானவர்களே அந்தச் செய்துவிட்டு என்னைப் பலிகடா ஆக்கப் பார்க்கிறார்கள் என்று ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டார்.

உடனே அதை பாரதிய ஜனதாவும் பிரதமர் அலுவலகமும் மறுத்தன.

அதைத் தொடர்ந்து ஜெயலலிதாவுக்கு வாஜ்பாயின் முதன்மைச் செயலாளர் பிரஜேஷ் மிஸ்ரா ஒரு கடிதம் எழுதினார். அதில் ஜெயலலிதாவின் குற்றச் சாட்டிற்கு ஆதாரம் தரும்படி கேட்டிருந்தார். இதற்கு இடையில் பிரதமர் மீது ஜெயலலிதா குற்றம் சாட்டியது குறித்து பாரதிய ஜனதாவுக்கும் அதிமுகவுக்கும் இடையே மோதல் முற்றி உள்ளது. எனவே கூட்டணியிலிருந்து ஜெயலலிதாவை நீக்கும்படி பாரதிய ஜனதா தலைமைக்கு நிர்ப்பந்தங்கள் வந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் கூட்டணியிலிருந்து நீக்கப்பட்ட 3 நாட்களில் ஜெயலலிதா சிறையில் அடைக்கப்படுவார் என்று பாரதிய ஜனதா கணித்து உள்ளது. அன்னியச் செலாவணி மோசடி தொடர்பாக ஜெயலலிதா, சசிகலா மற்றும் உறவினர்கள் மீது பல குற்றச்சாட்டுகள் கூறிந்து அமலாக்கப் பிரிவில் இருக்கும் பேதுப் ரூபா, தற்போது விசாரணைகளை நடத்தி முடித்துவிட்டார். ஜெயலலிதாமீது நடவடிக்கை எடுக்கப் போதுமான ஆதாரங்கள் தற்போது மத்திய அரசிடம் உள்ளன. கூட்டணியிலிருந்து நீக்கப்பட்ட 3 நாட்களில் அவரை கருணாநிதி சிறைக்கு அனுப்புவார் என்று பாரதிய ஜனதா தலைவர்கள் கூறியதாக டெலிகிராப் ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

# கூட்டுக் கட்சிகள் குறைகளை வெளிப்படையாகச் சொல்லவேண்டாம்

## *பாரதிய ஜனதா செயற்குழுவில் வேண்டுகோள்*

(ஜெய்ப்பூர், ஓகஸ்ட் 23)

கூட்டுக்கட்சிகள் தங்கள் மனக்குறைகளை வெளிப்படையாக அறிவிக்காமல் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பேசித்தீர்வு காணலாம் என்று பாரதிய ஜனதா செயற்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. பாரதிய ஜனதாக் கட்சியின் மூன்றுநாள் மாநாடு ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் வெள்ளிக்கிழமை தொடங்கியது. பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி உட்பட மூத்த தலைவர்கள் மற்றும் மாநிலத் தலைவர்கள் 40 பேர் கலந்துகொண்டனர். பாரதிய ஜனதாவின் அகில இந்தியத் தலைவர் குஷபாவ் தாக்கரே இந்தக்கூட்டத்தைத் தொடக்கி வைத்துப்பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

பாரதிய ஜனதாவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் தேசிய செயற்திட்டத்தின் அடிப்படையில் ஒற்றுமையாக ஆட்சி நடாத்துவது என்று ஒப்புக்கொண்டிருந்தோம். இந்த அரசு எந்த அளவுக்கு நமக்குச் சொந்தமோ அதுபோல கூட்டணிக் கட்சிகளுக்கும் சொந்தம். இந்த அரசுக்கு வெற்றி கிடைத்தாலும், தோல்வி ஏற்பட்டாலும் அதற்கு ஒவ்வொரு கூட்டணிக் கட்சியும் பொறுப்பு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சுருக்கமாகக் கூறினால் நாம் எல்லோரும் ஒற்றுமையாக பணியாற்ற வேண்டும் என்பதுதான்.

கூட்டணிக் கட்சிகளோடு ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்ற ஆர்வம் சில கட்சிகளுக்கு இல்லை என்பது கவலையளிக்கிறது. மத்திய அரசில் இடம் பெற்றுள்ள நமது கூட்டாளிகளுக்கு ஒரு சில மனக்குறைகள் இருக்கலாம். அதை அவர்கள் பத்திரிகை மூலமாக பகிரங்கமாக வெளியிடாமல் ஒருங்கிணைப்புக் குழுவில் தெரிவித்து தீர்வு காணலாம். கடந்த தேர்தலின்போது நமக்கு எத்தனையோ பெரிய பிரச்சினைகள் இருந்தன. அவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றுபட்டு உழைத்து வெற்றிபெறவில்லையா? இப்போதுள்ள பிரச்சினைகள் மிகச் சிறியவை. முக்கிய குறிக்கோளுக்காக முன்னேறும்போது இந்தப் பிரச்சினைகளை ஒதுக்கி வைக்கவேண்டும். ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு விட்டுக் கொடுத்து உழைக்க வேண்டும். தனி மனிதர் நலனைவிட தேச நலன்தான் முக்கியம் என்பதை மறந்துவிடக்கூடாது. அயோத்தி பிரச்சினையைப் பயன்படுத்தி காங்கிரசும் சில போலி மத சார்பற்ற கட்சிகளும் உருவாக்கிக் கொண்டிருக்கும் மதவாதப் பேயை தட்டியெழுப்ப முயற்சிக்கின்றன. அதை நாம் அனுமதிக்கக்கூடாது. அவர்களின் முயற்சியை நாம் உஷாராக இருந்து தடுத்து நிறுத்தவேண்டும். இவ்வாறு குஷபாவ் தாக்கரே கூறினார்.

முன்னதாக குஷபாவ் தாக்கரே ஜெய்ப்பூரில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், ஜெயலலிதாவின் ஊழல் புகாரால் பாரதிய ஜனதாக் கூட்டணி அரசுக்கு எந்த ஆபத்தும் இல்லை. அவர் யாரையும் குறிப்பிட்டு புகார் செய்யவில்லை. ஜெயலலிதா என்ன சொன்னாலும் பாரதிய ஜனதாவும், அதன் அரசும் அதன் வழியில் தொடர்ந்து நடைபோடும் என குஷபாவ் தாக்கரே கூறினார்.

# டான்சி நிலஊழல்: ஜெயலலிதா — சசிகலா மீது விசாரணை தொடங்க உத்தரவு

(புதுடெல்லி ஓகஸ்ட் 22)

டான்சி நில ஊழலில் ஜெயலலிதா — சசிகலா மீது விசாரணையைத் தொடங்க உச்ச நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. ஜெயலலிதா ஆட்சியில் நடைபெற்ற டான்சி நிலபேர ஊழல் வழக்கில்: முதல்வர் ஜெயலலிதாவும், அவரது உடன்பிறவா சகோதரி சசிகலாவும் மிகவும் குறைந்த விலையில் வாங்கியதாக இந்த வழக்கு தொடரப்பட்டது. இதில் ரூபா மூன்று கோடிக்கு முறைகேடு நடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ் வழக்கை எதிர்த்து சென்னை உயர் நீதி மன்றத்தில் ஜெயலலிதா மனுத்தாக்கல் செய்தார். அவரது மனு விசாரணைக்கு ஏற்கப்பட்டது. அடுத்த உத்தரவு வரும்வரை டான்சி வழக்கு விசாரணையைத் தள்ளி வைக்குமாறு சென்னை உயர் நீதி மன்றம் அந்த மனுமீது தீர்ப்பளித்திருந்தது. இதையடுத்து தனி நீதி மன்றத்தில் நடைபெற்று வந்த இந்த வழக்கின் விசாரணைக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டது. பல மாதங்களாக இந்த முட்டுக் கட்டை நீடித்தது. சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு, உச்ச நீதி மன்றத்தில் சிறப்பு விடுப்பு மனுவைத் தாக்கல் செய்தது. ஜெயலலிதாவும் தன் சார்பில் ஒரு சிறப்பு விடுப்பு மனுவை தாக்கல் செய்தார். இந்த மனுக்களை நீதிபதிகள் எம்.கே.முகர்ஜி, எஸ்.எஸ்.எம். குவாத்ரி ஆகியோர் அடங்கிய 'டிவிஷன் பெஞ்ச்' விசாரித்தது. நேற்று நீதிபதிகள் இந்த மனு மீது தீர்ப்பளித்தனர். தனி நீதி மன்றத்தில் விசாரணையைத் தொடங்குமாறு தனி நீதி மன்ற நீதிபதிக்கு டிவிஷன் பெஞ்ச் நீதிபதிகள் உத்தரவிட்டனர். இதன் மூலம் இத்தனை நாட்கள் இருந்து வந்த முட்டுக்கட்டை அகற்றப்பட்டது. வழக்கு விசாரணையை தள்ளிவைக்குமாறு சென்னை உயர்நீதி மன்றம் முன்பு அளித்த தீர்ப்பை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர். மேலும் இவ் வழக்கில் முழு விசாரணைக்குப் பின் குற்றப் பத்திரிகையை தமிழக அரசு தாக்கல் செய்யப்பட்டதால் ஜெயலலிதாவும் தமிழக அரசும், சிறப்பு விடுப்பு மனுக்களை வாபஸ் பெற்றுக்கொள்வதற்கு உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்தது.

திருமணவிழாக்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா, பிறந்த நாள் வைபவங்களா, மேடை நிகழ்ச்சிகளா இசை மழையில் நனைந்து மகிழ
ஐரோப்பா புகழ்
பாரிஸ்
ஈழநிலா
தொடர்புகட்கு: இயக்குநர் S.S. தில்லைச்சிவம்
Tel: 0140375669

# உலகச் செய்திகள்

## சூடான்

# திருப்பித் தாக்கும் உரிமை எமக்கு உண்டு

### சூடான் அதிபர் அல் பசீர்

அமெரிக்கா எந்தச்செறிகார மனமுறையில் எமது தேசத்தின் மேல் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. ஓர் தேசம் தாக்கப்பட்டது என்ற வகையில் எமக்கு அமெரிக்கா மேல் எதிர் நடவடிக்கை எடுக்கும் உரிமை உண்டு. இவ்வாறு சூடான் நாட்டின் அதிபர் ஓமார் அல் பசீர் தேசியத் தொலைக்காட்சியில் மக்களுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார். இதேவேளை ஈராக்கிய வெளிவிவகார அமைச்சர் முஹமட் செய்ட் அல்சஹாப் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக சூடான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எமது வளங்களும் பயன்படும் எனத் தெரிவித்துள்ளார். சூடானின் வெளிவிவகார அமைச்சர் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனினை சந்தித்ததன் பின்னரே ஐ.நா. விசாரணைக் குழு ஒன்றை தமது நாட்டிற்கு அனுப்பி அழிக்கப்பட்ட மருந்துத் தொழிற்சாலையை சோதனையிடுமாறு கோரினார். ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் விசாரணையாளர் குழு ஒன்றை அனுப்புமாறு தான் வேண்டியுள்ளதாகவும் கூறினார். அவற்றுடன் அமெரிக்க காங்கிரஸின் சுயாதீனக் கண்டறியும் குழு ஒன்றினையும் சூடானுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். அப்படி வரும் குழுக்களுக்கு முழு அளவிலான பாதுகாப்பினையும் எம்மால் வழங்கமுடியும் என்றார் அவர்.

முழுமையான ஆதாரங்களைப் பெற்றுக் கொள்ளாமலும், விசாரணைகளை பூர்த்தி செய்யாத நிலையிலும் சூடான் மீதும், ஆப்கானிஸ்தான் மீதும்




இவ் அறிவித்தல் வெளியாகியுள்ளது. ஈராக்கின் உதவிப் பிரதமர் தாரிக் அஸீஸ் 'சர்வதேச சட்டவிரோதமான அமெரிக்காவிற்கு எதிராக அரபிய ஒருமைப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும்' எனக் கூறினார்.

சூடான் அதிபர் தமது நாடு எவ்வகையில் அமெரிக்காவிற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனக் கூறவில்லை. ஆனால், சர்வதேச கண்கா தாக்குதல் நடத்துதல் என்பது இஸ்லாமியத் தீவிரவாதிகள் இவ்விரு நாடுகளிலுமிருந்துதான் தாக்குதல்களை மேற்கொள்ளுகிறார்கள் என முழு உலகின் கவனத்தையும் திசைதிருப்பும் நடவடிக்கையாகும்

தனது மக்களையும், தனது உடைமைகளையும் பாதுகாப்பதில் அமெரிக்காவிற்கு எவ்வளவு உரிமை உள்ளதோ அதே போன்று எமது அதிகாரத்திற்கு உட்பட்ட வகையில் அதே அளவு உரிமையை நாமும் கொண்டுள்ளோம். எமது பதில் சரியானவேளையில் கிடைக்கும். இறைவன் அருள்புரிவார். அமெரிக்கா தற்போது சியோனிஸ்ட் — குருசேடர் கூட்டமைப்பிற்கு தலைமை தாங்குவதை நாம் நன்கறிவோம். அமெரிக்காவின் கொள்கைகளும் பாவங்களும். அமெரிக்க 'நிர்வாகமும்' யூதர்களாலேயே கட்டுப்படுத்தப்படுகிறது. இதுவே சூடான் போன்ற நாடுகள் மேல் ஆக்கிரமிப்புத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதற்கும் உந்து சக்தியாக அமைகின்றன என சூடான் ஜனாதிபதி தனது தொலைக்காட்சி உரையில் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கூறினார்.

## அமெரிக்கா

# ஆப்கானிஸ்தான், சூடான் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்

### சர்வதேச ரீதியில் மாறுபட்ட எதிரொலிகள்

கிழக்காபிரிக்காவில் கென்யா, தன்சானியா போன்ற நாடுகளின் தலைநகரங்களில் அண்மையில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்புகளுக்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் அமெரிக்கா கடந்த வியாழன் அன்று சூடான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் சில இலக்குகள் மேல் ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டது.



அமெரிக்கா மேற்கொண்ட இவ் ஏவுகணைத் தாக்குதல்களால் சுமார் 50 பேர்வரை கொல்லப்பட்டும் அதே அளவு தொகையினர் காயமடைந்தும் உள்ளதாக சர்வதேச செய்தி தாபனங்கள் தெரிவிக்கின்றன. இத் தாக்குதல்களுக்கு அமெரிக்காவிலும் ஒருசாரார் ஆதரவு தெரிவித்துள்ளனர். அதேபோன்று சர்வதேச ரீதியிலும் ஆதரவும் எதிர்ப்பும் தோன்றியுள்ளது. அமெரிக்காவில் பல அரசியல் ஆய்வாளர்கள் அமெரிக்கா மேற்கொண்டது முட்டாள்தனமான ஒரு செயல் என்றும், இதன் பின்விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் என்றும் எச்சரித்துள்ளனர். தன்சானியாவிலும், கென்யாவிலும் குண்டுத் தாக்குதல்கள் நடந்ததன் பின் அமெரிக்க வெளியுறவுச் செயலர் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்கு பதிலடிகொடுக்கும் தார்மீக உரிமையை அமெரிக்கா கொண்டுள்ளது என்றும், இதன் சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறியிருந்தார்.

ஆபிரிக்க தலைநகரங்களில் இடம்பெற்ற மேற்படி குண்டு வெடிப்புகளுக்கு ஈராக் காரணமாக இருக்கலாம் என முதலில் அமெரிக்க உளவு நிறுவனம் கூறியது. ஈராக்கின் மீது மற்றுமோர் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள இது சாதகமாக அமையலாம் எனவும் அது முதலில் எண்ணியது. ஆனால் பின்னர் தற்போது ஆப்கானிஸ்தானில் வாழ்ந்துவருவதாக நம்பப்படும் சவுதிஅரேபிய கோடீஸ்வரரான ஒஸாமா பின் லேடன் தான் இச் சம்பவங்களுக்கு சூத்திரதாரி என்றும், அவரது தலைமையின் கீழானவர்களே மேற்படி குண்டு வெடிப்புக்களை மேற்கொண்டனர் என்றும் கூறியது. இவ் வேளையில் வியாழன் அன்று இரவு அமெரிக்க அதிபர் கிளின்டன் தாக்குதலுக்கு உத்தரவிட செங்கடல் பகுதியில் நிலைகொண்டிருந்த அமெரிக்க கடற்படைக் கப்பல்களிலிருந்து 70க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் ஒரே சமயத்தில் ஆப்கானிஸ்தான், சூடான் போன்ற நாடுகளை நோக்கி ஏவப்பட்டன. இவைகளில் சூடான் நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைகள் தலைநகர் கார்ட்டூம் இன் மருந்துத் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றினை தாக்கி அழித்தது. இத் தொழிற்சாலையில் நச்சுவாயு தயாரிப்பிற்கான மூலப் பொருட்கள் தயாரிக்கப்பட்டவை என்றும், இத் தொழிற்சாலை பின் லேடனின் நிதியின் மூலமே நிர்மாணிக்கப்பட்டதாக அமெரிக்கா கூறியது. ஆனால் சூடானின் மருந்துத் தேவையின் பெரும்பகுதியை இத் தொழிற்சாலை தயாரிப்புக்களே நிரப்பிவந்ததாக சூடான் கூறுகின்றது. இதேவேளை கார்ட்டூமில் தாக்கி அழிக்கப்பட்ட மருந்துத் தொழிற்சாலையின் கட்டுமானப்பணியில் ஈடுபட்ட பிரித்தானிய மற்றும் ஜோர்தானியப் பொறியியலாளர்கள் கூறுகையில், அத் தொழிற்சாலை சாதாரண மருந்துவகைகளைத் தயாரிக்கும் திறனையுடையே கொண்டுள்ளது. அங்குள்ள இயந்திரங்கள் நச்சுவாயு மூலப் பொருட்களை தயாரிக்கும் முறைக்கு மாற்றப்படுவது இயலாதகாரியம் என அமெரிக்காவின் குற்றச்சாட்டை மறுத்துள்ளனர்.

இதேசமயம் அமெரிக்காவின் ஏவுகணைகள் ஆப்கானிஸ்தான் ஜலாலபாத் பகுதியில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளன. அங்கு அமைக்கப்பட்டிருந்த ஒசாமா பின் லேடனின் ஆறு பயிற்சி முகாம்களையே தாம் தாக்கி அழித்ததாக அமெரிக்கா கூறுகிறது. ஆனால், தலிபான் நிர்வாகம், தாக்குதலுக்கு உள்ளாகியது மக்கள் குடியிருப்புக்கள் என்றும் கொல்லப்பட்டவர்கள் சாதாரண மக்களே என்றும் அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் இத் தாக்குதலைத் தொடர்ந்து பல நாடுகளாக சூடான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மற்றும் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகளில் எல்லாம் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இத் தாக்குதல்களை கண்டித்த பலஸ்தீனிய ஹமாஸ் அமைப்பு அமெரிக்காவிற்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை தாம் அதிகரிக்கப் போவதாக எச்சரித்துள்ளது. ரஷ்ய அதிபர் ஜெல்ஸின் அமெரிக்காவின் தாக்குதல்கள் ஒருபக்க சார்பானவை என்றும், இதன் மூலம் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள அமெரிக்காவால் முடியாது என்றும் நீண்ட பேச்சுக்களின் மூலமே இவ்வகையான பிரச்சினைகள் தீர்க்கப்படலாம் என்றும் கூறியுள்ளார்.

## சேர்பியா

# கொசோவோ பிரச்சினையில் சேர்பிய — அல்பேனியர்கள் இரகசிய பேச்சுவார்த்தை

மத்திய ஐரோப்பிய நாடான சேர்பியாவின் மாகாணமான கொசோவோவில் அண்மைக் காலமாக இடம் பெற்றுவரும் மோதல்களை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் சர்வதேச சமூகம் ஈடுபட்டுவரும் வேளையில், கொசோவோவின் பெரும்பான்மை அல்பேனிய இனப் பிரதிநிதிகளுக்கும், சேர்பிய அரச பிரதிநிதிகளுக்கும் இடையே நேரடி இரகசியப் பேச்சுவார்த்தை இடம் பெறவுள்ளதாக கடந்த வெள்ளியன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொசோவோ பிரச்சனை தீர்வுமுயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க பிரதிநிதி கிறிஸ் ஹில் கடந்த வியாழனன்று அல்பேனியப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தினார். பின்னர் அவர் சேர்பிய அரச பிரதிநிதிகளுடனும் பேசினார். இப் பேச்சுக்களின் பின் இரு தரப்பினரிடையேயும் உள்ள இழுபறி வேறுபாடுகளை நீக்கிய பின் வெகுவிரைவில் பேச்சுவார்த்தைக்கான திகதி அறிவிக்கப்படும் என அறிவித்தார்.

இதேவேளை கடந்தவார நடுப்பகுதியில் நேரடியான இரகசியப் பேச்சுவார்த்தைகளை சேர்பியா, அல்பேனிய பிரதிநிதிகளுடன் நிகழ்த்தியதாக சேர்பிய அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.



ரவி வாகனசேவை
உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது
தொலைபேசி: 0148765190 அல்லது 0607622689

## கொங்கோ

# பிராந்திய போருக்கு வழிவகுக்கும் 'கொங்கோ' (சயிர்)' மோதல்கள்

மத்திய ஆபிரிக்காவில் கடந்த சில மாதங்களாக ஏற்பட்டு வரும் நிகழ்வுகள் அப் பிராந்தியத்தை ஒரு யுத்த மண்டலமாக மாற்றக்கூடும் அபாயம் தோன்றியிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக கொங்கோ ஜனநாயகக் குடியரசில் ஆட்சிக்கு எதிராக அந் நாட்டின் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுவந்த புரட்சி நடவடிக்கைகள் விரிவடைந்து தற்போது தலைநகர் கின்சாசா வரை பரவியுள்ளது. கொங்கோ நாட்டின் ஜனாதிபதி லோரன் கபிலாவின் அரசு ஜனநாயக முறைமையான அமைப்பில்லை என்றும், முன்னைய ஆட்சியாளரான மொபுட்டுவின் ஆட்சிக்காலத்தைவிட மிக அதிகமான அடக்கு முறைகள் புதிய ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தினர். கொங்கோவின் கிழக்குப்பகுதியில் வாழும் ருட்சி இன மக்கள், பெரும்பான்மை ஹூட்டு இன மக்களாலும், அரசினாலும் அடக்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டது. இந்நிலையில் அன்று மொபுட்டுவின் அரசை ஆட்சியிலிருந்து அகற்ற கபிலாவிற்கு உதவிபுரிந்த கிழக்குப் பகுதி ருட்சி இனப் போராளிகள் புதிய அரசினையும் அகற்றும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். ருட்சி இனப் போராளிகளுக்கு அண்டை நாடுகளாக உகண்டாவும், றுவண்டாவும் உதவுவதாக கபிலா தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இக் குற்றச்சாட்டுக்களை இவ்விரு நாடுகளும் தொடர்ந்து மறுத்து வந்தன. ருட்சி போராளிகள் தொடர்ந்து முன்னேறி தலைநகர் கின்சாசாவிற்கு முடிப்பது கியோ மற்றும் தொலைவில் நிலைகொண்டுள்ள நிலையில் கபிலா அரசிற்கு உதவுவதற்காக சிம்பாப்வே படைகளும், அங்கோலா படைகளும் கொங்கோவிற்கு அனுப்பப்பட்டன. இந் நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் உகண்டா நாட்டின் அதிபர் இந்த யுத்தத்தில் தமது படைகள் நேரடியாகப் பங்கேற்கப் போவதாக அறிவித்தார். இதுவரை தாம் உதவியிராத போதிலும் அந்நியநாட்டுப் படைகள் கொங்கோவின் உள்விவகாரத்தில் தலையிடுவதற்காக குவிக்கப்பட்டுள்ளதால் தாமும் நேரடியாக போராளிகளின் பக்கத்தில் உதவிக்கு படைகளை அனுப்பப்போவதாக அறிவித்தார். இது இப்படி இருக்க போராளிகள் தரப்பிலிருந்தும் அங்கோலா, சிம்பாப்வே படைகளுக்கு எதிரான எச்சரிக்கைகள் விடப்பட்டுள்ளன. ஒன்பது நாடுகளின் எல்லைகளைக் கொண்டுள்ள வளம் மிக்க கொங்கோ பல நாட்டுப் படைகளின் சண்டைக்களமாக மாறுவது பிராந்தியப் போருக்கு வழிவகுக்கும் என நம்பப்படுகிறது.

கொங்கோவின் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கும் மகாநாடு ஒன்றினை தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா கூட்டியிருந்த போதிலும் அம் மகாநாட்டிற்கு கபிலா சமுகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈராக்

# அமெரிக்க ஏவுகணைத் தாக்குதல்களுக்கு ஈராக் கண்டனம்!

### கிளின்டனை 'பிளே போய்' என வர்ணிப்பு



ஈராக்கில் கடந்த சனியன்று வெளியாகிய பத்திரிகைகள் யாவும் அமெரிக்கா, சூடான், ஆப்கானிஸ்தான் நாடுகள் மேல் மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களை வன்மையாக கண்டித்திருந்தன. தன்னைச் சூழ்ந்துகொண்டிருக்கும் பாலியல் விவகார எதிர்ப்பலையை திசை திருப்பும் முயற்சியாகவே 'பிளே போய்' கிளின்டன் இத் தாக்குதல்களுக்கு உத்தரவிட்டார் என அப் பத்திரிகைகள் மேலும் கூறியுள்ளன.

அமெரிக்க நிர்வாகம் பொறுப்பற்ற முறையிலும், பேடித்தனமான வகையிலும் மனிதகுலத்திற்கு எதிரான புதிய ஆக்கிரமிப்பினை சூடானின் மருந்துத் தயாரிப்பு மையம் மீதும், ஆப்கானிஸ்தானின் மக்கள் பகுதிகள் மீதும் தாக்குதல் நடத்தியதன் மூலமும் மேற்கொண்டுள்ளது. இவ்வாறு பாக்தாத்தில் வெளியாகும் 'அல் முஸ்தாக்பால்' என்னும் பத்திரிகை எழுதியுள்ளது.

அப் பத்திரிகை, 'முழு உலகமும் அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனின் பாலியல் விவகாரத்தை உற்று நோக்கிக் கொண்டிருக்கும் வேளை அதை திசை திருப்ப அமெரிக்க நிர்வாகம் மேற்கொண்ட முயற்சி இது. ஆனால், சூடான் மீதும், ஆப்கானிஸ்தான் மீதும் தாக்குதல்களை நடத்தி அமெரிக்கா பலசாலியாக தன்னை காட்ட முயல்கிறது. ஆனால், முற்றிலும் தோல்வியிலேயே இவை முடிந்துள்ளன என தனது செய்தியில் அப் பத்திரிகை எழுதியுள்ளது. இதேவேளை ஈராக்கின் புரட்சிகர கட்டளை சபையில் 'நாம பிராந்திய ரீதியாக ஒன்றுபட்ட அரேபிய அமைப்பாக, சர்வதேச ரீதியில் இவ்வகையான பயங்கரவாத ஆக்கிரமிப்பு, முட்டாள்தனமான கொள்கையைக் கொண்ட எதிரிக்கு எதிராக பங்கேற்க தயாராகி உள்ளோம். இன்று நாம எட்டு வருடங்களாக அமெரிக்கப் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கிறோம். முடிவெடுக்க வேண்டிய சந்தர்ப்பம் இதுவாகும்' என அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

logo

**CENTRE EDUCATIF FRANCO TAMOUL**

CEFT யின் 12 வது வருடமிகச்சிறந்த கல்வி சேவையின் தொடர்ச்சியாக மீண்டும் ஒரு புதிய விசேட பிரெஞ்சு ஆரம்ப வகுப்பு!!

உங்கள் அனைவரின் வேண்டுகோளிற்கிணங்க ஆரம்பம்!

திகதி: 30/08/1998.
நேரம்: 13.00 மணிமுதல் 14.30 மணிவரை.
காலம்: 6 மாதங்கள்

இவ்வகுப்பில் பேச்சு, உச்சரிப்பு, இலக்கணம் உரையாடல் ஆகிய பயிற்சி முறைப் பாடங்கள் நடத்தப்படவுள்ளது.

பிரெஞ்சு மொழியை விரைவில் பேசுவதற்காக ஓர் விசேட புதிய வகுப்பு ஆரம்பம்.

திகதி: 05/09/1998
நேரம்: 13.15 முதல் 14.45 மணிவரை
காலம்: 6 மாதங்கள்

- சிறுவர்களுக்கான ஓர் விசேட வகுப்பு ஆரம்பம்!.

திகதி: 05/09/1998
நேரம்: 16 மணிமுதல் 17.15 மணி வரை
காலம்: 5மாதங்கள்

பிரெஞ்சுக் கல்வியில் எமக்கு கிடைத்த 12 வருட கால அனுபவமும் திறமையும் உங்களை பிரெஞ்சு பேச வைக்கும் என்பது நிச்சயம்.

இடம்: 81, Rue de la Plaine, 75020 Paris.
Mº: Maraichers ou Porte de Vincennes.
Bus Nº - 26

தொடர்புகளுக்கு சனி, ஞாயிறு தினங்களில் 13 மணி முதல் 18 மணி வரை நேரடியாக அல்லது: 0146483052

(No - 11/16588 (அரச அங்கீகாரம் பெற்றது)

## மியன்மார்

# மியன்மாரில் தொடரும் ஆர்ப்பாட்டங்கள்

மியன்மாரின் தலைநகர் யங்கூனில் நேற்றுக்காலை பல நூறு மக்கள் தற்போதைய இராணுவ ஆட்சிக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். யங்கூனில் கடந்த இரண்டு வருடங்களில் இதுவே முதலாவது இராணுவ எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் என கூறப்படுகிறது.

மியன்மாரின் ஜனநாயக அமைப்பினதும் எதிர்க்கட்சியினதும் சின்னமான மஞ்சள் மயிலின் படம் கொண்ட சிவப்பு கொடிகளுடன் ஆர்ப்பாட்டத்தில் மக்கள் காணப்பட்டனர். ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானோர் பல்கலைக்கழக மாணவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. இப் பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களால் 1996ம் ஆண்டின் இறுதியில் மிகப் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. கண்ணீர்புகைக் குண்டுகளை பிரயோகித்து ஆர்ப்பாட்டத்தை கலைத்த இராணுவ அரசு அதை ஈடுபட்ட ஏராளமான மாணவர்களை கைதுசெய்து நீண்டகால தண்டனைகளை வழங்கியது.

இதேவேளை மியன்மாரின் எதிர்கட்சி தலைவரான அவுசான் சூகி கடந்த பதின்மூன்று நாட்களாக யங்கூன் அருகே ஒன்று வாகனத்தில் தங்கி நிறுத்தப்பட்டுள்ளார். அவரும் மேலும் மூன்று கட்சி அமைப்பாளர்களும் ஆதரவாளர்களை



அவு சான் சூகி

சந்திக்க சென்றுகொண்டிருந்த வேளை இராணுவத்தால் தடுக்கப்பட்டார்கள். இவரைச் சந்திக்க வைத்தியர்களுக்கும், இராணுவ ஆட்சி தடைவிதித்துள்ளது. அவு சான் சூகி பிரயாணம் செய்த வாகனம் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்ட சம்பவங்களில் இது நான்காவது என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யா

# மீண்டும் ஆட்சிக் கலைப்பு!

### புதிய பிரதமராக செர்னமைடின்

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் நேற்று முன்னாள் பிரதமர் விக்டர் செர்னமைடினை மீண்டும் ஆட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். இதன்படி இதுவரை பிரதமராக இருந்த சேர்ஜி கிரியென்கோவுக்கு பதிலாக மீண்டும் விக்டர் செர்னமைடின் புதிய பிரதமராகிறார். ரஷ்யாவில் கடந்த சில வாரங்களாக தோன்றியுள்ள பொருளாதார சிக்கல்களை தீர்க்க கிரியென்கோ தவறிவிட்டார் என்பதை சுட்டிக் காட்டிய பொறிஸ் யெல்ட்சின் கிரியென்கோ திறமையானவர்தான் ஆனால் அவருக்கு அனுபவம் போதாது. இன்றைய நிலையில் நாட்டின் நிர்வாகத்தை தைரியமாக கொண்டு செல்ல அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை. அவர் விக்டர் செர்னமைடினாகத்தான் இருக்க முடியும். ஆகையால்தான் மீண்டும் அவரை ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள அழைப்பின்றேன்.

மேலும் 2000ம் ஆண்டில் எனது பதவிக்காலம் முடிகின்ற போது ஜனாதிபதி பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் தகுதியும் அவருக்குத்தான் உண்டு என்று தொலைக்காட்சியில் மக்களுக்கு தெரிவித்தார். 1992ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து கடந்த மார்ச் மாதம்வரை பதவியில் இருந்த விக்டர் செர்ன



விக்டர் செர்னமைடின்

மைடினின் மந்திரி சபையை யெல்ட்சின் கலைத்து கிரியென்கோவ் தலைமையிலான மந்திரி சபையை யெல்ட்சின் ஏற்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது மீண்டும் பதவியேற்றுள்ள செர்னமைடின் பிராந்திய ஆளுனர்களுடன், தலைவர்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளார். ஆயினும் கம்யூனிச பெரும்பான்மை கொண்ட பாராளுமன்றக் குழு யெல்ட்சின் பதவி விலக வேண்டும் என்றும் புதிய கட்டாட்சி ஒன்றை அமைக்க பரந்த விரிவான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.



SFR

*Promotion*

இரண்டு மாத

*Abonnement*

*Gratuits**

* Hors Packs SFR

**O L A**

Coffret OLA

Philips - 90Frs

Alcatel - 290Frs

Nokia - 690Frs

இலவசம் Frais de dossier

A partir du 21 août 1998

**PRIX DES PACKS SFR**




புதிய பழைய தொலைபேசிகள்

வாங்க – விற்க – திருத்த

# ஆர்த்தி ஸ்ரூடியோ

**15 RUE CAIL, 75010 PARIS.**

**M°: GARE DU NORD - LA CHAPELLE**

**Tel: 01 40 34 20 90**



தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரெஞ்சுக் கிளை நடாத்தும்

# மாபெரும் தமிழர் விளையாட்டு விழா

## 30.08.1998

**காலை 9.00 மணி**

GTV ஆதரவில்
பாரிசின் முன்னணி
இசைக்குழுக்களின் இசை மழை
Cool Guys நடனக் குழுவின்
மேற்கத்தேய நடனம்

பிரான்சின் முன்னணிக் கழகங்கள் பங்கேற்கும்

குமார்ஸ் ஆதரவில்

* உதைபந்தாட்டப் போட்டி

சபரினா உணவகம் ஆதரவில்

* கிரிக்கட் போட்டி

ஞானம்ஸ் ஆதரவில்

* கரப்பந்தாட்டப் போட்டி
* வலைப்பந்தாட்டப் போட்டி
* கூடைப்பந்தாட்டப் போட்டி

என்பவற்றுடன் நீங்கள் பங்கேற்கும்
சாந்தினி உணவகம் ஆதரவில்
கிளித்தட்டு, கயிறிழுத்தல்
வூட்லண்ட்ஸ் ஹோல்,
வூட்லண்ட்ஸ் உணவகம் ஆதரவில்
முட்டி உடைத்தல்,
சங்கீதக் கதிரை, சாக்கோட்டம்
தலையணிச்சண்டை, குறிபார்த்துச் சுடுதல்,
விநோத உடைப்போட்டி
மற்றும் சிறுவர்களுக்கான கேளிக்கை
விளையாட்டுப் போட்டிகள்

காலை முதல் மாலை வரை உங்கள் பசியாற்ற

## தமிழீழ உணவகம்

★ அப்பம் ★ தோசை
★ கொத்துரொட்டி
★ றோல்ஸ் ★ வடை
★ சூசியம் ★ போண்டா
★ கோழிக்கால் பொரியல்
★ கட்லட் ★ மீன்பொரியல்

என்பவற்றுடன்
தமிழீழ மணம் கமழும் ஒடியல் கூழ்
மேலதிக விபரங்களுக்கு: 01 40 38 30 74

# Stains மைதானம்

சிறு கதை

# இழவுக்கும் தொழிலுக்கும்

1997 ஜனவரி வெள்ளிக்கிழமை. மொறட்டுவை...

செனவிரத்ன வந்தபோது வழக்கமான காலை நேரத் தூங்கலில் பொலிஸ் நிலையம் இருந்தது. இரண்டொரு பொலிஸ்காரர்கள் தமதிடங்களிலிருந்து 'திவயின', 'லக்பிம' படித்துக் கொண்டிருந்தார்கள். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இலங்கை மக்களின் உடம்புக்குத் தரமான சவர்க்காரத்தை சிபாரிசு செய்துகொண்டிருந்தது. தடுப்புக் காவலிலிருந்த ஒரே ஒரு கைதி இன்னும் படுத்தேயிருந்தான். எழும்புவதால் எதுவும் ஆகப் போவதில்லை என அவனுக்கு நன்கு தெரிந்தேயிருக்கும்.

தனது மேசைக்கு வந்ததும் செனவிரத்ன மேலோட்டமாகப் பத்திரிகைகளைப் பார்த்தார். யுத்தம் குறித்த தலைப்புச் செய்திகள். மேசையிலிருந்த கோப்புகளைப் பார்த்தார். இன்னும் மூடப்படாத நிறையப் பழைய சம்பவங்கள். எப்போதாவது நேரம் இருந்தால், 'மூட்' இருந்தால் முடித்துக்கொள்ளலாம்!

மேசைக்குக் கோப்பியும் பணிசும் வந்தன. கடித்தார். குடித்தார்.

தொலைபேசி அழைத்தது. எடுத்தார். மறுமுனையில் விக்கிரமசிங்க. 'எப்போது தருவதாக உத்தேசம்?'

'உன்னை இங்கு தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டாமென்று பல தடவைகள் கூறியிருக்கிறேன்'

'நீ வீட்டிலிருந்து கொண்டே இல்லையென்று கூறச்சொல்லி மனைவி, பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறாய்.'

'நான் இப்போது வேலையிலிருக்கின்றேன்.'

'அது உன்னுடைய பிரச்சினை. எனக்கு என்னுடைய பணம் வேண்டும்.'

'தரலாம் என்று சொல்லியிருக்கின்றேன்'

'மாதக் கணக்காக.'

'எப்படியும் தந்துவிடுவேன்.'

'அது உனது நம்பிக்கையாக இருக்கலாம். எனக்குப் பொறுமை போய்விட்டது. இனியும் இப்படி தொலைபேசியில் மட்டும் கதைத்துக் கொண்டிருக்க மாட்டேன். வீட்டுக்கும், பொலிஸ் நிலையத்திற்கும் ஆட்களுடன் வருவேன்.' விக்கிரமசிங்க வைத்துவிட்டான்.

செனவிரத்னவுக்கு மிச்சமாயிருந்த தூக்கமும் போய்விட்டது. கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டே பார்த்தார். பத்திரிகைக்கு மேலால் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த தலைகள் மறுபடி குனிந்தன. பணம் வேண்டும். மிக விரைவாக. விக்கிரமசிங்க பொல்லாதவன். பொலிஸ் பதவியை மட்டும் வைத்துக்கொண்டு அவனை ஒன்றும் செய்துவிட முடியாது. அரசியல் பலம் வைத்திருக்கிறான். சொன்ன மாதிரியே வந்துவிடுவான்.

பணம்!

வ. செ!

பணம்!!

'இளைய மகனுக்கு 'கொம்பியூட்டர்' வாங்கிக்கொடுக்க என்ன செய்வீர்கள்?

அதுதான்.

அதையேதான் இப்போதும் செய்யலாம்.

பணம் கிடைப்பதற்கான இலகுவான, உத்தியோக பூர்வமான, சட்ட ரீதியான, அரச அங்கீகாரம் பெற்ற வழி அது ஒன்றேதான்.

'ராஜபக்ஷ'

வந்தான்.

'பக்கத்தில் எங்காவது தமிழர்கள் புதிதாக வந்திருக்கிறார்களா?'

'வெளிநாடு போவதற்காக ஒருவன் வந்து விடுதியில் தங்கியிருக்கிறான். வடக்கிலிருந்துதான் வந்திருக்கிறான். இரண்டு நாளாகிறது.'

'ஜீப்பை எடு.'

இருக்கின்றன. தப்ப முடியாது'

விசாரணை அத்துடன் முடிந்தது.

அவன் தொடர்ந்து அழுதுகொண்டேயிருந்தான். கதவுக் கம்பிகளைப் பிடித்துக் கெஞ்சினான்.

மாலை பொலிஸ்காரர்கள் குறைந்தார்கள். போகாதிருந்தவர்களுக்கு செனவிரத்ன வேலை கொடுத்து அனுப்பினார் ராஜபக்ஷ மட்டும் மிச்சம்.

இருவரும் அவனிடம் வந்தார்கள். செனவிரத்ன ஆரம்பித்தார்.

'நன்றாகக் கேள். இன்று வெள்ளிக்கிழமை. தற்செயலாக எந்த சட்டத்தரணியாவது வந்தாலும் திங்கட்கிழமைதான் உன்னை நீதிமன்றத்தில் நிறுத்தமுடியும். இடையில் இரண்டு நாட்கள் இங்குதான் இருக்கப் போகிறாய். இந்த

பார்த்திருக்கின்றேன். உனக்கு அரை மணித்தியாலம் தரப்படுகிறது. புத்திசாலித்தனமாக முடிவு எடுத்தால் அதோ மேசையிலிருக்கும் தொலைபேசியில் உனது உறவினருடன் தொடர்பு கொள்ளலாம்.'

செனவிரத்ன திரும்ப மேசைக்கு வந்து பத்திரிகை பார்த்தார். கோப்பி குடித்தார்.

தனக்கு எவ்வளவு கிடைக்குமென்று ராஜபக்ஷ கணக்குப் பார்க்க ஆரம்பித்துவிட்டான்.

அவன் அழுதபடியே சிறைச் சுவர்களைப் பார்த்தான். எங்கும் இரத்தம். அரை மணித்தியாலத்தின் பின் ஜேர்மனியில், உணவு விடுதியொன்றுக்கு கோப்பை கழுவுவதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருந்தவன் அறையில் தொலைபேசி ஒலித்தது.

'இருக்கும். இல்லாமலும் இருக்கும். நீ ஏன் தனிய நெகற்றிவாய் மட்டும் யோசிக்கிறாய்...?'

'இது முன்னூறு, நானூறு சனத்தோட விளையாடுற விளையாட்டு'

'இஞ்சை பார் மகேந்திரன். இது தொழில். பாவ, புண்ணியம் பாக்கிறதெண்டா நீ ரெட் குறோசிலை சேர்ந்திருக்க வேணும்.'

அந்தப் பதிலுடன் மகேந்திரன் தடுமாறித்தான் போனான். என்றாலும் அன்றைய தொலைக்காட்சியில் பார்த்த கடலில் மிதந்த பிரேதங்கள் ஒருகணம் வந்து போயின. வியர்த்தது.

சிங்கம் சொல்லுறதிலையும் பிழையில்லை. இது தொழில். இதிலையெல்லாம் சகசம். என்டாலும் எங்கடை சனம்தானே.. இன உணர்வு

விடுதிக்கு ஜீப் விரைந்தது. கதவைத் தட்டினார்கள்.

திறந்தவன் இவர்களைக் கண்டு மிரண்டான். கையில் மனைவி, பிள்ளைகளுடன் எடுத்த குடும்பப் படம்.

'உன்னைக் கைது செய்கின்றோம்.' அவன் எதுவும் புரியாமல் தமிழில் அழ, அவர்கள் சிங்களத்தில் கூறியபடி, கைகளில் விலங்கு பூட்டி, இழுத்துக்கொண்டுபோய் ஜீப்பில் ஏற்றினார்கள். விடுதியில் இருந்தோர்க்கு இப்படி தொடர்ந்து பார்த்துப் பழகிப் போய்விட்டதால் தங்கள் அலுவல்களைக் கவனித்தார்கள்.

பொலிஸ் நிலையம் வந்ததும் தடுப்புக் காவலில் அவனைத் தள்ளிப் பூட்டினார்கள்.

வியர்த்துப் போயிருந்த அவன் பேந்தப் பேந்த முழித்தான். பயங்கரம் புரிந்தபோதும் அழுதான்.

யாரும் அலட்டிக் கொள்ளவில்லை. பக்கத்து அறைக் கைதி வந்து புதினம் பார்த்தான்.

மதிய உணவு முடிந்த பின்னர் தனது மேசையிலிருந்தபடியே விசாரணையை ஆரம்பித்தார் செனவிரத்ன. ராஜபக்ஷ எழுதினான்.

அவனுக்குச் சிங்களம் தெரிந்திருக்கவில்லை.

பின்னர் ஆங்கிலம், அதுவும் அவனுக்குத் தெரியவில்லை.

கடைசியாக ராஜபக்ஷ் தனது கொச்சைத் தமிழில் மொழிபெயர்த்தான்.

'நீ தமிழ்தானே?'

'ஓம்'

'கொழும்பில் குண்டு வைக்கத்தானே உன்னை இங்கு அனுப்பியிருக்கிறார்கள்!'

'ஐயோ.. நான் ஒரு பிரச்சினைக்கும் போகாதவனையா....' அழுதான்.

'எங்கே குண்டு வைக்கத் திட்டம்!'

'நான் ஜேர்மனி போறதுக்காண்டி வந்திருக்கிறன். அடையாள அட்டையெல்லாம் இருக்கு.'

'உன்னுடைய அறையில் ஆயுதங்கள் எடுத்திருக்கின்றோம்.'

அவன் பயந்துபோய் சத்தமாக அழுதான்.

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உன்னைக் கைது செய்திருக்கின்றோம். தகுந்த ஆதாரங்கள் கைவசம்

இரண்டு நாட்களிலும் எதுவும் நடக்கலாம். நீ தப்பியோடும்போது சுடப்படலாம். அல்லது அதோடார் உன்னையே கோபமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் சக கைதி உன்னை அடித்தே கொல்லலாம். இல்லையென்றால் தலையில்லாமல் மொறட்டுவ கடற்கரையில் கண்டெடுக்கப்படலாம். இரண்டு நாட்கள் என்பது அதிகம். எதுவும் நடக்கலாம்.

அவன் இப்போது பெரிய சத்தமாக அழுதான். நிலத்தில் போட்டு தலையை அடித்தான். கம்பிகளுக்குள்ளால் கைகளை நீட்டி அவர்களது சப்பாத்துகளைக் கும்பிட்டான்.



'நான் இன்னும் முடிக்கவில்லை. உனக்கு ஒரு சந்தர்ப்பம் தரப்படுகிறது. வெளிநாட்டிலிருக்கின்ற உனது உறவினர்களிடமிருந்து நான் கேட்கின்ற தொகையைப் பெற்றுத் தா. பத்திரமாக வெளியில் போகலாம். இப்படிப் பல தமிழருக்கு நான் உதவி செய்து அவர்கள் இப்போது வெளிநாடுகளில் மகிழ்வாக இருக்கிறார்கள்.' அவன் தொடர்ந்து அழுதான். கண்ணீர் வற்றும் வரையாக அழுதான். குரல் வரும்வரை உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. எல்லாம் போய் கடைசி நம்பிக்கையாக அவனை வெளிநாடு அனுப்பத் துணிந்த மனைவி, எப்போதுமே படத்தைக் கண்களில் வைத்திருக்கும் பிள்ளைகள், உதவியை எதிர்பார்த்திருக்கும் பெரிய சுற்றம், வட்டிக்கு வாங்கி அனுப்பிய ஜேர்மனி மைத்துனன்.. எல்லாவற்றிற்குமாய் அழுதான்.

'இப்படி நிறையப்

பின்னர் அதே நகரத்திலிருந்த வட்டிக்காரன் வீட்டில் ஒலித்தது.

கொஞ்ச நேரம் கழிந்து உண்டியல் காரர் ஜேர்மனியிலிருந்து கொழும்புக்குத் தொலைபேசியில் கதைத்தார்.

கொழும்பிலிருந்து ரக்சி ஒன்று மொறட்டுவ பொலிஸ் நிலையத்திற்கு வந்தது.

செனவிரத்ன விக்கிரமசிங்காவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

***

1997 பெப்ரவரி, புதன்கிழமை. பிராங்பேட்...

உக்ரெய்ன்காரன் போய்விட்டான். சிங்கம் சிகரெட் புகைத்தவாறு யோசித்தான்.

விலை பரவாயில்லை. முன்னூறு, நானூறு பேரையாவது அடக்கலாம். அவ்வளவும் வெளிக்கிட்டா வரவேற்பிலை இடம் வெளிக்கும். பிறகு கொழும்பிலையிருந்து மிச்சச் சனத்தைக் கொண்டந்து இறக்கிப்போட்டுக் கொஞ்சக் காலத்துக்குச் சமாளிக்கலாம். எப்பிடியும் தரமானவாய் தேறும்.

'நான் சொல்லுற மாதிரி கோப்பியைக் கலந்து உந்தப் பிளானைக் கைவிடு' என்றான். அதே அறையிலிருந்த மகேந்திரன். அவன் முன்னால் இருந்த மேசையில் ஏராளமான தாள்கள் சிதறிக் கிடந்தன. கணக்குகளும், உலகத்து தொலைபேசி எண்களும், சில ஏஜென்சிகளின் பெயர்களும்...

'ஏனப்பிடிச் சொல்லுறாய்..?' புகை வந்தது.

'இல்லை, இப்பதான் ஒரு கிரீக் கப்பல் வந்து தாழ்ந்துபோய் நிக்குது. எக்கச்சக்கமான சனம் செத்திருக்கு. இன்டர்போல் தீவிரமாய் விசாரிக்குது. செத்த சனங்களுக்கு அந்திரட்டி கூட முடிஞ்சிருக்காது. நீ அடுத்த கப்பலுக்கு நேரம் பேசுகிறாய்.'

'விலை சரி வந்திருக்கும். இவர் முடிச்சவெடலாம் ஞாயமாய் தேறும். ஒரு கப்பலும் கவிழும் என்டு நினைக்காதை'

'உக்ரெய்ன் கப்பலைப் பற்றி உனக்கென்ன தெரியும்? உவங்கள் கிரீஸ் கவுன்மேந்துக்கு வித்த 'வோர் பிளேன்' கூட தரையிறங்காமலே காணாமல் போகுதாம். உவ்வளவு கழிவுச் சாமான்கள் முழுக்க வித்துத் தள்ளுறாங்கள். அதிலை ஒண்டாகத்தான் உந்தக் கப்பலும் இருக்கும்'.

ஒரே செக்கல் கவலைப்பட வைத்தது. பிறகு இலாபம் பற்றி யோசித்தான்.

சிங்கம் மகேந்திரனைப் பார்த்து மெலிதாகச் சிரித்தபடி குறுக்கு மறுக்காக நடந்தான். எட்டு வருடங்களாய் தொழில் செய்கின்றான். பழகிவிட்டான். முடிந்தது. அடுத்ததைப் பற்ற வைத்துக்கொண்டான்.

எதுக்கும் ஒரு இரண்டு நாள் 'ரைம்' எடுத்து யோசிப்பம். சிலவேளை இன்னும் நல்ல 'றூட்' ஏதேன் அம்பிடலாம். என்று இழுத்தான் மகேந்திரன். குரலில் முன்னைய உறுதி இல்லை.

சிங்கம் ஒரு கதிரையை இழுத்துக்கொண்டு வந்து மகேந்திரன் அருகில் அமர்ந்தான்.

இஞ்சை பார். இதெல்லாம் நான் பாக்கிற விசயமில்லை. முந்தி மாதிரியில்லை இப்ப. ஊருப்பட்ட ஏஜென்சியள். 'காட்டர் பிளைற்'றிலை அள்ளிக்கொண்டு வந்து கொட்டினவை இரண்டொருவருக்கு தொழில் முன்னேறிவிட்டுது. ஒவ்வொரு 'றூட்'டும் நாற நாற எங்களுக்குத்தான் நட்டம். அதாலை நாங்கள் முந்த வேணும். சொன்னபடி மகேந்திரனுக்கு ஒரு சிகரெட் கொழுத்தி, பற்ற வைத்தான்.

நீயே யோசித்துப்பார்! எங்கடையாட்கள் கூட்டியந்ததில எத்தினை சனம் யூரோ காட்டுக்கை காணாமல் போயிருக்குது? போலந்து ஆத்துக்கை தாண்டிருக்குது? ஒன்ரியா 'சினோ'வுக்கை புதைஞ்சிருக்கு. இதுக்கெல்லாம் நீ பதில் வைச்சிருக்கிறியே? நாங்கள் சனத்தைக் கரை சேக்கிற நல்லதைத்தான் செய்யிறம். ஆனா வாற சனத்தின்ரை விதி நல்லாயில்லாம அதுகள் மண்டையைப் போடுறதுக்கு நாங்கள் என்ன செய்யிறது?

எப்ப கப்பல் சரிவருமாம்?

பொறு முதல் வாவோசுக் கடிச்ச நிலைமையை விசாரிப்பம். சிங்கம் தொலைபேசியைத் தேடிப்போக அதுவாக முந்திக்கொண்டு சத்தம் போட்டது.


ஆர்....?

அதுதான் சிவா கதைக்கிறன்.

எந்தச் சிவா?

ராஸ்கி சிவா. இஞ்சை மொஸ்கோவில நிற்கிறம்.

(தொடர்ச்சி 20ம் பக்கம்)





## உங்கள் கைவண்ணம்



செல்வி ராகவி அமலதாசன்
வயது: 05 (06.08.1993)
இடம்: பாசல்
சுவிஸ்

மயில்
மயில் மிகவும் அழகான பறவை
மயிலின் தோகையானது பளபளப்-
-பான. பல வர்ணங்கள் உண்டு
மழை மேகத்தைக் கண்டால்
ஆண் மயில் தன் அழகான தோகையை-
-விரித்து ஆடும்
மயில் காடுகளில் உண்டு
சிலர் வீடுகளிலும் ஆசையாக [illegible]
விரும்பி வளர்ப்பார்கள்

## கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்



இல. 2.

சென்ற வாரத்திற்கான விடை (ரா)

## விடுமுறைப் பயணக் கட்டுரை

**எனது கோடைகால விடுமுறை 1998**
**தமிழ் ஈழப்பயணம் 25.06.98-ல்**
**இருந்து 02.08.98 வரை**

எனது தமிழ்ப் பயணக் கட்டுரையை ஈழமுரசு பத்திரிகை, சிறுவர் முற்றத்திற்கு எழுதுவதன் மூலம் மகிழ்ச்சியடைகின்றேன்.

எனது பெயர்: நீலன் திரவீரசிங்கம்
வயது: 13 (30/05/85)
புகலிடம்: டென்மார்க்
வதிவிடம்: லண்டன்



1. நான் எனது பெற்றோருடனும் தம்பி நிசாந்தன், தங்கை நிலுஜாவுடனும் தமிழீழத்துக்குச் சென்றேன்.
2. தமிழீழம் ஒரு அழகான சிறியநாடு.
3. அங்கு எங்களது உறவினர்கள் பலர் இருக்கிறார்கள்.
4. யாழ்ப்பாணத்தில் உள்ள வடமராட்சிப் பகுதியில் கரணவாய் தெற்கில் எங்கள் உறவினர்கள் வாழ்கிறார்கள்.
5. அங்கு எங்கள் அப்பம்மா, ஐயா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைகள், அத்தான்மார், மச்சாள்மார் என்று பல உறவினர்கள் இருக்கிறார்கள்.
6. அவர்கள் எங்களுடன் மிகவும் சந்தோசமாகவும் அன்பாகவும் பழகினார்கள்.
7. அப்பம்மாவும், அம்மம்மாவும் மற்றும் உறவினரும் பல சுவையான உணவுகள் எங்களுக்கு செய்து விருந்து வழங்கினார்கள்.
8. அங்கு நாங்கள் வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், கொய்யாப்பழம், செவ்விளநீர், நொங்கு, பனையிலிருந்து எடுக்கும் கருப்பணி நீர் என்பவற்றை விரும்பிச் சுவைத்தோம்.
9. வாழைப்பழத்தில் பல இனங்கள் உண்டு. கதலி, இதரை, கப்பல், யானை என்பன சிலவாகும். இவைகள் தேன் மாதிரி இனிப்பானவை.
10. நானும் அப்பாவும் தம்பியும் சன்னதி முருகன் கோயிலில் காவடி எடுத்தோம்.
11. இங்கு கனகாலமாக மழை இல்லாதபடியால் வெயில் சூடு அதிகம் இருந்தது.
12. தமிழீழத்தில் சிறிலங்காவின் ஆமிக்காரர் இருப்பதால் அங்கு இருக்கும் நாட்களில் சிலவேளைகளில் பயமாக இருந்தது. சில இரவுகளில் வெடிச் சத்தங்களையும் கேட்டேன்.
13. தமிழீழம் எனக்கு நன்றாக பிடித்திருக்கிறது. அதிலும் யாழ்ப்பாணத்தில் இருந்த 5 வாரங்களும் என்னால் மறக்க முடியாதவை. எனக்கு திரும்பவும் தமிழீழம் போகவேண்டும்போல் ஆசையாகவுள்ளது.

### விடுமுறை நாட்கள்

பிள்ளைகளே!

உங்கள் விடுமுறை நாட்களை எப்படிக் கழித்தீர்கள்? உங்கள் விடுமுறை அனுபவங்களை அறிந்து கொள்வதற்கு சிறுவர் முற்ற நண்பர்களும் ஆவலாக உள்ளனர். உங்கள் சுற்றுலா பற்றிய அனுபவத்தையும் புகைப்படத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள்.

முடிந்தால் சுற்றுலா பயணத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இருப்பின் அதனை அனுப்பி வைக்கவும். உங்கள் சுற்றுலா அனுபவம் சிறுவர் முற்றத்தில் உலா வருவது உங்களுக்கு மகிழ்ச்சி தானே!

## குட்டிக் கதை படியுங்கள்

இக்கதையை எழுதி அனுப்பியவர்:
செல்வன் சிவநாதன் பிர்ந்தன்
வயது: 10
தூர்க்கா தமிழ் வித்தியாலயம்
Frauen feld


### ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் அழிவே!

ஒரு எரிய காட்டின் அருகே பெரிய புல்வெளி ஒன்று இருந்தது. அங்கு நிறைய மாடுகள் வசித்து வந்தன. அவைகள் எப்பொழுதும் சேர்ந்தே புல்மேயும். அதனால் வயிறார உண்டு கொழுத்து இருந்தன.

அருகிலுள்ள காட்டில் சிங்கம் ஒன்று இருந்தது. அதற்கு இம் மாடுகளைக் கொன்று தின்ன ஆவல். பல முறை முயன்றும் முடியவில்லை. எல்லா மாடுகளும் ஒன்று சேர்ந்து சண்டையிட்டு சிங்கத்தை துரத்தி வந்தன. அதனால் சிங்கத்தால் அவைகளின் அருகில் நெருங்க முடியவில்லை. சில மாதங்கள் கழித்து அம்மாடுகள் தமக்குள் முட்டிக் கொண்டு சண்டையிட ஆரம்பித்தன. அதனால் அவற்றின் ஒற்றுமை குலைந்தது.

அவைகள் தனித்தனியே மேய ஆரம்பித்தன. சமயம் எதிர்பார்த்திருந்த சிங்கம் இதைக்கண்டது. உடனே மாடுகளை ஒவ்வொன்றாகத் தாக்கிக் கொன்று தின்றது. சில நாட்களில் அங்கிருந்த எல்லா மாடுகளும் சிங்கத்திற்கு இரையாயின. தமக்குள் ஒற்றுமை இழந்ததால் எல்லா மாடுகளும் அழிந்தன.

## குட்டிக் கதை



செல்வன்
சி.பிரதீபன்
வயது: 13
இடம்: London,
4NX, S.E18
England

### குரங்கு அரசன்

ஒரு காட்டில் நிறைய மிருகங்கள் இருந்தன. எல்லா மிருகங்களும் இருந்தன.

ஒரு சமயம் எல்லா மிருகங்களும் ஒன்று கூடின. தமக்குள் ஒரு தலைவனைத் தேர்ந்தெடுக்க நிச்சயித்தன. பல வகைகளில் சாமர்த்தியம் உள்ள தலைவனை தேர்ந்தெடுக்கத் தீர்மானித்தன. ஒவ்வொரு மிருகமும் தனியே முன்வந்து தனது வேலைகளைக் காண்பித்தது. பெரிய குரங்கு ஒன்று நன்றாய் குதித்து நாட்டியம் ஆடியது. மற்றும் பல விளையாட்டும் செய்து காண்பித்தது இதைப்பார்த்து எல்லா மிருகங்களும் அக்குரங்கை தமது தலைவனாக்க நிச்சயித்தன. ஆனால் ஒரு நரி மாத்திரம் குரங்கு தலைவனாவதை விரும்பவில்லை.

அன்று முதல் அம்மிருகங்களுக்கு அக்குரங்கு தலைவனாயிற்று. நரி எவ்வகையிலேனும் குரங்கை அவமானப்படுத்த நினைத்தது. ஒரு நாள் ஒரு பொறியில் அக்குரங்கிற்கு மிக விருப்பமான தின் பண்டங்களை வைத்தது. குரங்கை அவ்விடம் அழைத்துச் சென்றது. பொறியின் தின்பண்டங்களை கண்டதும், குரங்கு தன்னை மறந்து அவைகளை எடுக்க நினைத்தது. உடனே அப் பொறியில் மாட்டிக் கொண்டது. நரியும் குதூகலத்துடன் கூக்குரலிட்டது. நரியின் கூச்சலைக் கேட்ட மற்ற மிருகங்களும் அங்கு வந்தன. தமது தலைவன் குரங்கு, பொறியில் மாட்டிக் கொண்டிருப்பதைக் கண்டன. வரும் ஆபத்தினை உணராத தலைவனை அவைகள் விரும்பவில்லை. அன்று முதல் குரங்கு தமக்குத் தலைவனாக இருப்பதை அவைகள் விரும்பவில்லை.

நரியும் தனது எண்ணம் பலித்தது கண்டு ஆனந்தம் கொண்டது.

## வாரம் ஒரு சோலை

புலம் பெயர்ந்த நாடுகளில் இயங்கும் தமிழ் பாடசாலைகளில் இருந்து 'வாரம் ஒரு பாடசாலை' என்ற வகையில் புகலிடத் தமிழ் சிறார்களின் பல்வேறு ஆக்கங்களையும் புகைப் படங்களையும் சுமந்துகொண்டு சிறுவர் முற்றம் பவனிவரவிருக்கிறது. உங்கள் பாடசாலைச் சிறார்களின் ஆக்கங்களை சிறுவர் முற்றத்தில் உலாவிடச் செய்ய விரும்பும் பாடசாலை பொறுப்பாளர்கள் அல்லது அமைப்புகள், கீழ் உள்ள படிவத்தை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாடசாலை பெயர்: ........................................

முகவரி: ........................................

தொலைபேசி இல: ........................................

சிறுவர் முற்றத்தில் வாரம் ஒரு சோலையில் எமது பாடசாலை சிறார்களைப் பங்கு கொள்ளச் செய்ய விரும்புகிறேன்.

திகதி: ....................

....................
ஒப்பம் பொறுப்பாளர்

# சிலி கவிஞர் பாப்லோ நெருடா

சாளரம்

இந்த நூற்றாண்டில் தோன்றிய இஸ்பானிய (ஸ்பானிஷ்) மொழிக் கவிஞர்களுள் ஒருவர் இவர். (Pablo Neruda) தம் காலச் சமுதாயச் சிக்கல்களை கவிதையில் அழகுறச் சித்தரித்த பெருமையை உடையவராவார். அடிமைப்பட்டுக் கிடக்கும் மனித குலத்தை அதன் தளைகளில் இருந்து விடுவிக்க வந்த மீட்பராக இவர் கருதப்பட்டார். பிரான்சில் சிலி நாட்டுத் தூதுவராக இவர் 1971-ம் ஆண்டு பணியாற்றி வந்தபோது 'இலெனினின் சமாதானப் பரிசு'ம் இலக்கியத்திற்கான நோபல் பரிசும் இவருக்கு வழங்கப்பட்டன.

பாப்லோ நெருடா 1904-ம் ஆண்டு மத்திய சிலியில் உள்ள பார்ரால் என்னும் சிறு நகரத்தில் பிறந்தார். இரு மாதக் குழந்தையாக இருக்கும் போதே இவர் தாய் மறைந்தார். அதன் பின் இவர் குடும்பம் நாட்டின் தென் பகுதியில் உள்ள தெமுக்கோ என்னும் இடத்தில் குடியேறியது. நெருடாவின் தந்தை அப்போது இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். சிற்றன்னை, நெருடாவை தம் சொந்தக் குழந்தை போலவே கருதி போற்றி வளர்க்கத் தொடங்கினார். நெருடாவின் பள்ளிக் கல்வி 1910-ல் தொடங்கி 1920-ம் ஆண்டு முடிவுற்றது. இவர் தம் 10-ம் வயது முதலே கவிதைகள் பாடத் தொடங்கினார். இவர் 12-ம் வயதில் கேப்ரியேலா மிஸ்ட்ரால் என்பவர் வாயிலாக புகழ்பெற்ற சிலி நாட்டுக் கலைஞர்களின் அறிமுகத்தைப் பெற்றார். இவர் 1921-ம் ஆண்டு பிரெஞ்சில் பட்டம் பெற்றார். அதே ஆண்டு அக்டோபர் திங்களில் சிலிநாட்டு மாணவர் பேரவை நடத்திய கவிதைப் போட்டியில் கலந்துகொண்டு பரிசு பெற்றார். பேரவை வெளியீடாக வந்து கொண்டிருந்த இதழ் ஒன்றில் தன் கவிதைகளை வெளியிட்டு வந்தார். இவர் முதல் கவிதைத் தொகுதியை தம் சொந்தச் செலவில் வெளிக் கொணர்ந்தார் (1923). அது அவருக்கு நிறைய புகழை ஈட்டிக்கொடுத்தது. தொடர்ந்து இவர் பல கவிதை நூல்களை வெளியிட்டு வந்தார்.

இஸ்பெயின் நாட்டில் 1936-ம் ஆண்டு உள்நாட்டுப் போர் வெடித்தபோது இவர் கவிதைப் புனைப்புக்களில் சற்றே இடைவெளி ஏற்பட்டது. இவர் நண்பன் ஒருவனுக்கு தண்டனை விதிக்கப்பட்டதும், தெருக்களில் பெருக்கெடுத்தோடிய இரத்த வெள்ளமும் இவரைப் பெரிதும் பாதித்தன. 'நெஞ்சில் நிலைத்த இஸ்பெயின்' (Spain in The Heart) எனும் கவிதைத் தொகுதி அப்போதுதான் வெளிவந்தது.

நெருடா 1939-ம் ஆண்டு சிலி நாட்டிற்கு இஸ்பெயின் அகதிகள் சிலரோடு திரும்பி வந்தார். வந்த சில நாட்களுக்குள்ளேயே அரசு இவரை மெக்சிக்கோவிற்கு அனுப்பி வைத்தது. இவர் மெக்சிக்கோ வாழ்க்கை உணர்வாழமும் கருத்து நயமுமுடைய கவிதைகளை உருவாக்க உதவியது. அக்காலகட்டத்தில் இவர் எழுதிய கவிதைகள் அனைத்தும் இரண்டாம் உலகப் பெரும்போர் இவர் உள்ளத்தில் உண்டாக்கிய பாதிப்பின் விளைவே எனலாம்.

இவர் 1943-ல் கடல் வழியாகச் சிலியை அடைந்தார். இவர் 1945ல் பேரவை உறுப்பினராக மூன்றாண்டு காலத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அக்காலத்தில் நாட்டின் மிக முக்கியமான சிக்கல்களைப் பற்றி இவர் ஆழமாகச் சிந்தித்தார். இடதுசாரி மனப்பான்மை கொண்ட இவர் இலவசப் பொதுவுடைமையாளராக மாறினார். 'பொது நிலைப் பாடல்கள்' (General Songs) எனும் பெயரில் அமெரிக்கக் கண்டத்தைப்பற்றி இவர் எழுதிய பாடல்கள் மிகப் பெரும் காப்பியமாகத் திகழ்ந்தது. பாரிஸ் நகரில் நடந்த 1948-ம் ஆண்டு அமைதி ஆர்வலர் மாநாட்டில் இவர் கலந்து கொண்டார். இவர், 1949-ம் ஆண்டு சோவியத் நாட்டிற்கு முதல் முதலாகச் சென்றார். அலெக்சாண்டர் புஷ்கின் எனும் உருசிய நாட்டு மகாகவியின் 150-ம் பிறந்தநாளில் இவர் பங்கேற்றுப் பேசினார். இடதுசாரி எழுத்தாளர்கள் மீதும் அரசியல் தலைவர்கள் மீதும் இருந்த அடக்கு முறை உத்தரவு நீக்கம் செய்யப்பட்ட பின் 1952-ல் இவர் மீண்டும் சிலி திரும்பினார். இவர் கவிதைகள் பல்வேறு ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன.


ஒரு மனிதனின் வாழ்வில் அவன் அனுபவங்கள் மெல்ல மெல்ல மாறும் பெறுவதுபோலவே, நெருடாவின் கவிதைகளும் அவ்வப்போது காலத்திற்குக் காலம் மாற்றம் பெற்று வந்தன. இவர் தம் இளமைப் பருவத்தில் தன் உணர்ச்சிப்பாக்களையும், காதலையிட்ட காம உணர்வே மிக்க ஓங்கிய அகத்திணைப் பாடல்களையும் பாடினார். பின்னாளில் புற உலகக் கவர்ச்சியில் இருந்து தம்மை விடுவித்துக்கொண்டு, தம்மிலேயே ஆழமாக இருந்து போகின்ற நிலையில் உள்ளுணர்வு அனுபவங்களைப் பாடினார். கவிதை உலகில் அதுகாறும் இருந்துவந்த மரபுகள் பலவற்றை உடைத்தெறிந்து 'நெருடாயிசம்' என்று சொல்லத்தக்க புதிய பாணியை உருவாக்கினார். பாடுபொருளில் பல வகைப்பட்ட வளமும் உத்திப் புதுமையும் இவர் கவிதைகளில் நாளுக்குநாள் வளர்ந்தனவே தவிர மறைந்துவிடவில்லை. 'நான் இறக்கும் வரை எழுதிக்கொண்டே இருப்பேன்' என்று அவர் பல முறை குறிப்பிட்டார்.



இவர் இறுதியில் 1973-ம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

*மா. இசா*

**கவிதை உலகில் அதுகாறும் இருந்துவந்த மரபுகள் பலவற்றை உடைத் தெறிந்து 'நெருடாயிசம்' என்று சொல்லத்தக்க புதிய பாணியை உருவாக்கினார். பாடுபொருளில் பல வகைப்பட்ட வளமும் உத்திப் புதுமையும் இவர் கவிதைகளில் நாளுக்குநாள் வளர்ந்தனவே தவிர மறைந்துவிடவில்லை.**


சிவாசினி வாகன சேவை
Chivashini Transport
வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு: ஜெயா
0614616984 / 0611289118 /
0614424117 / 01 42 05 44 04
டிஸ்னி றெஸ்றோறன்ட்



# நாற்று
இளம் ஆக்கங்கள்

## உலரும் உணர்வுகள்...

உடலும் உணர்வுகளும்
அடிக்கடி சிலிர்த்துக்
கொள்கையிலே
உள்ளம் மாத்திரம்
மரத்துப்போனதென்பது
எப்படி உண்மையாகும்?

வானத்து வட்ட நிலவைப்
பார்த்துக் களைத்துபோன
எத்தனை இரவுகள்
உறக்கத்தை இழந்தன ?

தேயும் நிலவோடு
நானும் தேய்ந்தே போனாலும்
வளரும் பிறையோடு– ஏன்
வளரமுடியவில்லை என்னாலும்?

விடிவெள்ளிகளை
எண்ணிக்கொண்டு
நான் விழிமூடாமல் இருக்கையிலே
விடிந்த அதிகாலை
பொழுதுகள் எத்தனை?

இயல்பாய் இல்லாமல்
இயந்திரமாய்
அன்றைய பொழுது கழிய
மீண்டும்
இதயத்தை நெட்டித்
தள்ளியபடியே
இரவு உதயமாகும்...
தொல்லைகளே,
தொடர்கதையாய்...

நிகழ்வுகள்
நெஞ்சைநெருடும்!
நினைவுப் பூக்களின்
மலர்வுகள் கூட
சலிப்பையே தரும்!

என்தலை கோதிவிடவும்
மடியில் தலை சாய்த்து
விழி மூடிவிடவும்,
விரல்களில்லாத
இந்த நினைவுகளால்
முடிவதில்லை
ஒருபோதும்...

ஆனாலும்
விழியால் எரித்து
விடக்கூடிய
சக்தியொன்று
என்னிடமில்லாததால்
சாபம் பெற்ற பின்னும்
என்னுடனேயே
சல்லாபிக்கும் என்
உணர்வுகள்
என் சிதையில்தான்
கருகுமென்று
உறுதிகொண்டிருக்கும்
போல்...

– நிலவு

# புலம்பெயர் மரணங்கள் - தற்கொலைகள் - கொலைகள்

## ஒரு சிறப்பு புலனாய்வுத் தொடர்

அந்த இளைஞரின் பெயர் ரொபின்சன்.

பிரான்சில் அகதி அந்தஸ்து பெற்றவர்.

வயது 32 அல்லது 33 இருக்கலாம்.

யாழ்ப்பாணம் வலிகாமப் பகுதியைச் சேர்ந்த அவர் அண்மையில் திடீரென்று இறந்து விட்டார்.

பாரிசின் புறநகர் பகுதியிலுள்ள நகரமொன்றுக்கு திங்கள் வேலையொன்றுக்காக நான் சென்று கொண்டிருந்த போது, என்னை தற்செயலாகச் சந்தித்த அந்த இளைஞரின் தந்தை தனது மகனது அஞ்சலித் துண்டுப் பிரசுரத்தை என்னிடம் தந்த போது நான் அதிர்ந்து விட்டேன்.

நீண்டகாலமாகத் தெரிந்த அந்தப்பெரியவரை 'என்ன நடந்தது?' என்று கேட்ட போது அவரால் பதில் சொல்ல முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைக்க, கண்களில் கலங்கி கண்ணீர் ததும்பி நின்றது.

'தம்பி என்னால ஒன்றும் சொல்லம் முடியேல்ல ராசா. நான் பிறகு சொல்லுறன்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

மனிதனாகப் பிறந்த எல்லோரும் ஒரு நாள் இறப்பது இயற்கைதான். ஆனால் பெற்றவர்கள் தாங்கள் உயிரோடு இருக்கும் காலத்தில் தங்கள் பிள்ளைகளுக்கு இறுதிக்கடன் செய்யும் நிலை தான், 'துயரங்களில் பெரிய துயரம்' என்பார்கள்.

டேவிட் அண்ணை ரொபின்சனின் தந்தை விடயத்தில் அது சரியாகவே இருந்தது. அந்த மனிதர் முதுமைப் பருவத்தை எட்டிவிட்டாலும், ஒரு 30 வயது வாலிபனுக்குரிய கம்பீரத்தோடும் 'என்னடா தம்பி எப்படி இருக்கிறாய்?' என்று பேசும் தட்டாத கணீரென்ற குரலில் மற்றவர்களைப் பார்த்து பேசுகின்ற அவர், அன்று சோர்ந்து போய் பேசமுடியாமல் கண்ணீர்விட்டு அழமுடியாமல், கையறு நிலையில் நின்ற காட்சி பிள்ளைகளை இழக்கின்ற சோகம் எவ்வளவு கொடுமையானது என்பதை புலப்படுத்துவதாக இருந்தது.

பின்பு, டேவிட் அண்ணர் குடும்பத்துக்கு நெருக்கமான சிலரிடம் 'ரொபின்சனுக்கு என்ன நடந்தது' என்று விசாரித்தபோது, அவர்கள் தெரிவித்த தகவல்கள் அதிர்ச்சி தரக்கூடியதாக இருந்தன.

சாதாரண ஒரு குளிர் காய்ச்சலில் ரொபின்சன் இறந்து விட்டான்.

மருத்துவத்துறையில் முன்னேறிய ஒரு நாட்டில், மக்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகள் கிடைப்பதை சகல வழிகளிலும் உறுதிப்படுத்துகின்ற ஒரு நாட்டில் இது எப்படிச் சாத்தியமாகும்? என்று விசாரிக்கும்போது, நோய் சிறியதென்றாலும், பெரியதென்றாலும் அதற்கு உரிய மருத்துவம் செய்யாவிட்டால் விளைவுகள் பாரதூரமாகத் தான் இருக்கும் என்ற பதில் கிடைத்தது.

**'நோய்க்கு வைத்தியரிடம் சென்று வைத்தியம் பார்ப்பது சாத்தான்களின் வேலை' என்று போதித்த ஒரு குழுவின் வலையில் ரொபின்சன் விழுந்து விட்டதால் குளிர் காய்ச்சல், சன்னியாக்கியதால்..அவரது உயிரைப் பறித்துவிட்டது'**

'நோய்க்கு வைத்தியரிடம் சென்று வைத்தியம் பார்ப்பது சாத்தான்களின் வேலை' என்று போதித்த ஒரு குழுவின் வலையில் ரொபின்சன் விழுந்து விட்டதால் குளிர் காய்ச்சல், சன்னியாக்கியதால் அவரது உயிரைப் பறித்து விட்டது' என்றார் ரொபின்சனின் நெருங்கிய நண்பரான ரஞ்சன்.

இதுபற்றி அவரிடம் நான் மேலும் விசாரித்தபோது, தீவிரமான கத்தோலிக்க மதப்பற்றுள்ள குடும்பத்தில் பிறந்த ரொபின்சன் அவரது சிறு வயது தவறுகள் மற்றும் பலவீனங்கள் காரணமாக, பிரான்ஸ் அரசாங்கத்தால் 'செக்ட்'கள் என அடையாளப் படுத்தப்பட்டுள்ள ஒரு தீவிர மதக்குழுவொன்றின் வலையில் விழுந்து விட்டார்.

மனிதனுடைய இயல்பான நடவடிக்கைகளை 'கர்த்தரின்' பேரால் கட்டுப்படுத்தி, மனிதர்களின் பலவீனங்களைப் புரிந்து கொண்டு அவர்களை கர்த்தரின் பெயரால் பயமுறுத்தி, தங்களது 'பாச வலைக்குள்' சிக்க வைத்திருக்கும் இந்த மதக்குழுவின் நடவடிக்கைகள். ஆரம்பத்தில் ரொபின்சனுக்கு தேவாமிர்தமாக இருந்தாலும் போகப் போக, பத்தியச்சாப்பாடுபோல் ஆகிவிட்டது. தொலைக்காட்சி பார்க்கக்கூடாது, சினிமா பார்க்கக்கூடாது, வேறு பத்திரிகைகள் படிக்கக்கூடாது, நோய்க்கு மருத்துவரிடம் சென்று வைத்தியம் செய்யக்கூடாது, மற்றவர்கள் சொல்லுகின்ற நல்ல கருத்துக்களை (தங்கள் குழுவின் கருத்துக்களை தவிர மற்றக் கருத்துக்களை) கேட்கக்கூடாது என்பது போன்ற கட்டுப்பாடுகளும், 2000 ஆண்டில் உலகம் அழியும், கர்த்தர் தனக்கு விரோதமானவர்களை அதாவது சாத்தான்களை தண்டிப்பார். அதுவும் அவர்களுக்கு கொடூரமான தண்டனை கொடுப்பார் என்கின்ற யதார்த்த நிலைமைகளுக்கு புறம்பான, கற்பனையான பயமுறுத்தல்களும் ரொபின்சனுக்கு நாளடைவில் அலுப்பைத் தந்தது மட்டுமல்லாது, அவை எல்லாம் சுத்தப் பம்மாத்து என்றும் காலப் போக்கில் புரிந்து விட்டது. அவர் அதிலிருந்து விடுபட நினைத்தாலும் அவரால் முடியவில்லை. ஏனென்றால் அவரது மனைவி 'எலிசபெத்' அந்த மதக்குழுவின் கருத்துக்களால் மூளைச் சலவை செய்யப்பட்ட 'இயந்திர மனுசி' யாகி விட்டார்.

ரொபின்சன் அந்த மதக்குழுவின் தொடர்பை அறுத்தெறிய முற்பட்ட போதெல்லாம் — உங்களை சாத்தான் பிடித்து ஆட்டுகின்றது. கர்த்தரிடம் ஜெபம் பண்ணுங்கள். கர்த்தர் உங்களுக்கு நல்ல வழிகாட்டுவார் என்று அவரை தடுத்திருக்கின்றார்.

தன்னுடைய மனைவிமீது அன்பு கொண்ட ரொபின்சன் அவளது நம்பிக்கைகளை சிதைக்கும் விதத்தில் நடந்துகொள்ள முடியாமலும், அதேநேரத்தில் சிறை கட்டுப்பாடுகளை விட மோசமான கட்டுப்பாடுகளாக இருக்கும் அந்த மதக்குழுவின் கட்டுப்பாடுகளை ஏற்று தன்னுடைய ஆசாபாசங்களை விட்டுவிடுவதற்கும் முடியாமல் இருதலைக்கொள்ளி எறும்பு போல துடித்திருக்கிறார்.

இந்தக்குடும்ப அவரை நாளடைவில் வெளியுலகத்திலிருந்து தனிமைப்படுத்திக்கொண்டு தனி அறைக்குள் முடங்கிக்கிடக்கும் சூழ்நிலைக்கு தள்ளிவிட்டது.

அவர் இறப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு அவர் வீட்டுக்கு வரக்காணவில்லையே என்று டேவிட் அண்ணரும் அவரது மனைவியும் தேடியிருக்கின்றார்கள்.

மறுநாள் மனைவியையும் அழைத்துக்கொண்டு டேவிட் அண்ணர் ரொபின்சன் வீட்டுக்கு சென்றிருக்கின்றார்.

அங்கே குளிர் காய்ச்சலில் படுத்திருந்த ரொபின்சன், 'பப்பா என்னால ஏலாது என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்கோ' என்று கேட்டிருக்கின்றார். அதற்கு 'ஆஸ்பத்திரிக்கெல்லாம் கொண்டு போக நான் விடமாட்டேன் கர்த்தர் அவரைக் குணப்படுத்துவார்' என்று எலிசபெத் தடுத்திருக்கின்றார்.

டேவிட் அண்ணர் மருமகளிடம் கெஞ்சாத குறையாக தன்னுடைய மகனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக விடும்படி கேட்டிருக்கின்றார். அவருடைய கோரிக்கைகளை எலிசபெத் அவ[illegible] ஏற்றுக் கொண்டாலும், அம்புலன்ஸ் வண்டியை அழைக்கும் முயற்சிக்கும் ஒத்துழைப்புத்தர மறுத்துவிட்டார்.

### அகதி வாழ்வின் அவலங்கள்

அம்புலன்ஸ் வண்டியை அழைத்தால் 2000, 3000 பிராங் பணம் கட்டவேண்டும். அதற்கு என்னிடம் பணம் இல்லை என்று எலிசபெத் சொல்லியிருக்கின்றார்.

டேவிட் அண்ணரும் அவர் மனைவியும் தங்களுக்குத்தெரிந்த ஒருவரின் காரில் ரொபின்சனை அழைத்து வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கின்றார்கள்.

பொதுவாக பிரான்ஸில் உரிய அனுமதிபெற்று வதியும் ஒருவரை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கும் போது மருத்துவ சமூகக் காப்புறுதி (Sécurité Social) அட்டையைக் கேட்பார்கள்.

ஆனால் ரொபின்சனிடம் அந்த அட்டை இருக்கவில்லை. நோய் வந்தால் மருத்துவரிடம் போவது சாத்தானின் வேலை என்று அந்த மதக்குழு போதனை செய்வதால், ரொபின்சன் பிரான்ஸில் வதியும் அனைவரும் அவசியமாக வைத்திருக்க வேண்டிய அந்த அட்டையை வைத்திருக்கவில்லை.

இதனால் ரொபின்சனை ஆஸ்பத்திரியில் அனுமதிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. டேவிட் அண்ணர் - அவன் தன்னுடைய மகன் என்று தன்னுடைய பத்திரங்களைக்கொடுத்து உறுதிப்படுத்தி அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்.

ரொபின்சனை பரிசோதித்த வைத்தியர்கள் அவனுக்கு நோயின் பாதிப்பு அதிகரித்து

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)

### மதக்குழுக்கள் பற்றி நாம் ஏன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்?

'செக்ட்'கள் என்று வரையறை செய்யப்பட்டுள்ள மதக் குழுக்களைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படி பிரான்ஸ் மட்டுமன்றி ஐரோப்பியக் கூட்டமைப்பிலுள்ள நாடுகளும் தங்கள் நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

தனி மனித உரிமை மற்றும் தனிமனித சுதந்திரம் என்பவற்றுக்கு, தாங்கள் முக்கியத்துவம் கொடுத்து வருபவர்கள் என்று கூறும் இந்த நாடுகள் இந்த மதக் குழுக்கள் விடயத்தில் இந்த இரண்டையும் பொருட்படுத்திப்பார்க்க வேண்டாம் என்று வேண்டுகோள் விடுப்பதற்குக் காரணம், இவை இந்த இரண்டுக்கும் எதிராக இருப்பதுதான்.

'செக்ட்'கள் எனப்படும் இந்த மதக் குழுக்கள் ஐரோப்பாவில் பெருமளவுக்கு செயற்பட்டாலும், அவர்களுடைய செயற்பாட்டுத் தளமாவது புலம் பெயர்ந்துவந்த மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் தான் என்பதை அவதானிக்க முடியும்.

தங்களுடைய சொந்த நாட்டில் நடைபெறும் யுத்தத்தினாலும், இன அடக்குமுறைகளாலும், மோசமான பாதிப்புக்குள்ளாகி புலம் பெயர்ந்த இந்த மக்களின் துயரத்தில் பங்குகொண்டு 'அவர்களுக்கு ஆன்மீக விடுதலை அளிக்கப்போவதாகக் கூறிக்கொண்டாலும் இந்த மதக் குழுக்களின் உண்மையான நோக்கம், இந்த மக்களின் அரசியல் சமூக விடுதலையை இல்லாதொழிப்பதே!

உதாரணமாக, எமது தாயகத்தின் யுத்தச் சூழ்நிலைகள் காரணமாக இங்கே ஐரோப்பாவுக்கு இரண்டு இலட்சத்துக்கு அதிகமான தமிழர்கள் புலம் பெயர்ந்து வந்திருக்கின்றோம். இங்கே நாங்கள் அத்தனைபேரும் ஒன்றுபட்டு எமது தாயகவிடுதலைக்கு ஒருமித்த பங்களிப்பை செலுத்துவோமாக இருந்தால் அது எமது போராட்டத்தின் முன்னேற்றகரமான பாய்ச்சலுக்கு மாபெரும் உந்து சக்தியாக அமையும்.

வேறு புறத்தில் இங்கே வந்திருக்கக் கூடிய நமது இன்றைய தலை முறையினர்கள் - இங்கே பிறந்து வளர்கின்ற குழந்தைகள், ஐரோப்பிய நாடுகளின் நவீன தொழில்நுட்ப விஞ்ஞான கல்வியைக் கற்றுக்கொண்டு, 'நாம் தமிழர்கள், எமது நாடு தமிழீழம்' என்ற உணர்வோடு நாடு திரும்புபவர்களாக இருந்தால், அது எமது இனத்தினதும் நாட்டினதும் வளர்ச்சிக்கு மிகப்பெரிய உந்து சக்தியாகவும் பங்களிப்பாகவும் இருக்கும்.


இதை தடுப்பதற்காகவே எமது எதிரிகள் இந்தச் 'செக்ட்'கள் என்ற மதக் குழுக்களின் போர்வையில் ஆட்களை அனுப்பி மனிதர்களுடைய ஆன்மீகப் பலவீனங்களை இனங்கண்டு, அவர்களுடைய மனத்தில் இருக்கும் வெற்றிடங்களுக்குள் ஊடுருவி ஆன்மீக விடுதலைக்கு வாருங்கள் என அவர்களை திசை திருப்பி விடுவதன் மூலம், அவர்களது தாயக உணர்வையும், அவர்கள் யார் என்ற சுய அடையாளத்தையும் அழித்து, குறிப்பாக இனத்தின் அரசியல் விடுதலைக்காகவும் சமூக விடுதலைக்காகவும் நாம் ஒன்று சேர்ந்து விடாதபடி தடுக்கின்ற பணியை செய்வித்துவருகின்றார்கள்.

இதனாலேயே இந்த மதக்குழுக்கள் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய தேவை எமக்கு இருக்கிறது.

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது
ஜவ்னா இறைச்சிக்கடை

# ஜவ்னா இறைச்சிக்கடை

ஆடு, மாடு, கோழி
இறைச்சி
வகைகளையும்,
தினமும் உயிர்க்கோழி
வகைகளையும்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்



இன்று கிழமைகளில் சபரியுடன் மளிகை
நிறுவனத்தில் எல்லா இறைச்சி
வகைகளையும் ஓடர் செய்துகொள்ளலாம்

## Jaffna Boucherie

70, Rue Louis Blanc, 75010 Paris. M°: la Chapelle
Tel: 01 40 35 46 47

விசேட கொள்வனவுகளுக்கு
விசேட விலைக்கழிவுகள்



# உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்புச் சேவை

(கிருஷ்ணபிள்ளை மாயவன்)

உங்கள் சகல மொழிபெயர்ப்புத் தேவைகள், பிரெஞ்சு நிர்வாக – நீதிமன்றத் தேவைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவற்றுக்கான சட்ட ஆலோசனைகளுக்கு கடந்த 14 ஆண்டுகளாக அரசாங்க அங்கீகாரம் பெற்று பாரிஸ் நகரில் (பாரிஸ்-18 - மெத்ரோ மார்க்கடே புவசொனியேயில்) சேவையாற்றி வரும் நாம் எமது அலுவலகத்தை தற்போது புதிய முகவரிக்கு இடமாற்றம் செய்துள்ளோம்

எமது மொழிபெயர்ப்புத் தேவைகள் சகல நீதி – நிர்வாக அலுவலகங்களினாலும் வெளிநாட்டுத் தூதரகங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படும்

புதிய முகவரி:
39, Bld. de la Chapelle, 75010 Paris.
(Mo: La Chapelle / Gare du Nord)
Tel / Fax: 01 40 34 53 41 - Port: 06 14 89 68 07
(எம்.ஜி.ஆர். வீடியோ & ரெக்ரைல்ஸ் நிறுவனத்திலுள்ளே, ஈழநாடு, தமிழாலயம் நிறுவனங்களுக்கு அருகாமையில்)



சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

(இதில் குறிப்பிட்டிருக்கும் நிமிடங்கள் உண்மையானவை)




இந்தியா 42 நிமிடம்
பிரான்ஸ் 200 நிமிடங்கள்
(மாலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை)

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | 42 நிமிடம் | பிரித்தானியா | 120 நிமிடம் |
| கனடா | 120 நிமிடம் | அமெரிக்கா | 120 நிமிடம் |
| தாய்லாந்து | 27 நிமிடம் | ஜேர்மனி | 100 நிமிடம் |
| ஹொங்கொங் | 62 நிமிடம் | அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிரான்ஸ் | 200 நிமிடம் | பிலிப்பைன்ஸ் | 40 நிமிடம் |
| இலங்கை | 45 நிமிடம் | அல்ஜீரியா | 65 நிமிடம் |
| சுவிஸ் | 100 நிமிடம் | மொரோக் | 65 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் | பெல்ஜியம் | 100 நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 நிமிடம் | பிரான்ஸ் (கைத்தொலைபேசி) 80 நிமிடம் | |
| துனிசியா | 65 நிமிடம் | | |

## இலங்கைக்கு 45 நிமிடங்கள்

## GNANAM Telecom Center

195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.
Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14
M°: La Chapelle / Gare du Nord

சகல நாடுகளுக்குரிய தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.




# வந்தது வந்தாள் துணையுடன் வந்தாள்... டிவோசும் கேட்டு கடிதமும் தந்தாள்

யாழ்ப்பாணச் ஆமிக்காரர் பாசாக்க, காவலக்கபம் சேகரிப்போ சொல்லிருப்பார் பட்டு எண்டு திருவாரிலுமுள் சொல்லி வைச்சிட்டுப் போனது. சின்ன னிலை படிச்ச ஞாபகம். எதையும் அவ வோட கதைச்சா அமைதி மட்டுமில்லை அன்பும் வளரும். முன்னம் இலங்கை யிலிருந்து நாட்டுக்கு ரெலிபோன் அடிக்கிற தெண்டா செய்வது சுக்காச்சக்கப்பாரப் வந்து சேர்ந்திடும். மாசம் மாசம் பிறீம்பா அதுக்கே உழைக்கவேணும். உதாலை அந்த நேரம் ரெலிபோன் அடிச்சா ரெண்டு மூண்டு நிமி சத்துக்கை 'காட்' முடியுதெண்டு சொல்லி 'கட்' பண்ணிப்போடுவினம். அதை கதைச் சுக் கொண்டிருக்கிறவை நம்பவேணும் எண்டதுக்காக ஒரு இலக்கத்தை அடிக்க அது போடுற சத்தமும் 'காட்' முடியிற சத்த மும் ஒரே மாதிரி. அவையளும் உண்மை யெண்டு நம்பி வைச்சிடுவினம். ஆனாலும் ஊரிலை இருந்து பாரிசுக்கோ, விரும்பிறி ருக்கிற காதலியோடோ பெருமூச்சு வந்து ஒரு ரெண்டு கிழமை நிண்டா ரெலிபோன் அடிச்சே ரெண்டு மாசம் வந்துபோட்டுதுவ அவ்வளவும். ரெலிபோன் கதைச்ச காசு கட்ட, சீட்டைக் கழிச்சவையும் வட்டிக்கு எடுத்தவையும் இருக்கினம்.

இப்பவெல்லாம் காலம் தலைகீழா மாறிப் போச்சு! மணித்தியாலக் கணக்கா ஆடு புல்லு மேஞ்சதிலை இருந்து தொலைக் காட்சி தொடர் நாடகம் வரைக்கும் விதண் டாவாதம் பண்ணி விவகாரியா கதைச் சாக் கூட கணக்க வராது! அதால உந்த எழுத்துலக நாடுகளிலை (இந்தியா, சிங் கப்பூர், தாய்லாந்து) எழுத்துக்களை முதல் ல போட்டு வாறவையின்ரை பாடுதான் பெரும் கொண்டாட்டமா இருக்குது! எழுத்து முடிய அவ அங்கையும் இவர் இங்கையும் எண்டு பிரிய வேண்டியது. பிறகு ரெலி போனை எடுத்து மணித்தியாலக் கணக்கா அரியண்டு அழ வேண்டியதுதான். உப்பிடியானவை கதைக்கிற பக்கத் திலை இருந்தா, பாத்துக் கொண்டிருக்கிற வைக்குத்தான் பைத்தியம் பிடிக்கும். வைக்கிறன்.... வைக்கிறன் எண்டே அரை மணித்தியாலமா இழுபடுவினம். அங்கை 'காட்' முடிஞ்ச நேரம் முடிஞ்சு தானா நிண்டு ஒழிய ரெலிபோன் வைப்பதில்லை.

பெடியளும் என்ன செய்யிறது? வெள் ளையளுக்கு அடிச்ச முடிஞ்ச தடுத்துப் போட்டு, எங்கடை ஆறுதலும் அன்பும் கிடைக் கும் எண்டு கதைச்சு, ஆளைப்பாக்கவுமாகி நிரப் பட்டுவினமாம் இருக்கினம். பட ஒண்டுமில் லாட்டி கூட நேரகாலம், நிகழ்காலம் எண்டு அட அத்தியாயம் வரைக்கும் தொடருது. எக்கச்சக்கமா கிழிஞ்ச பிறகு கட்டிடமே ஆடி காதல் கோட்டையும் சரிஞ்சு போறது எண்டாலே இப்ப நடந்து கொண்டிருக்கு. அவைக்கு பிறகு எல்லாம் அம்பிடுத்தான்.

இதை எழுதிக் கொண்டிருக்கேக்கை என்ரை சிநேகிதன் ஒருத்தன் வந்து சொன் னான்.... இப்ப கிட்டடியிலைதான் ஒருத்த ரும் எழுத்துலக நாட்டொண்டிலைபோய் எழு திப்போட்டு வந்தவராம். வந்ததிலை ருந்து லட்சக்கணக்கா அள்ளிக் குடுத் துத்தான் இங்காலை கூப்பிட்டிருக்கிறார். வந்து இவரை நேரிலை பாத்தாப்பிறகு அவளுக்கு பிடிக்கேலையாம். மீசை இல்லா தவை எல்லாம் ஆம்பிளையளோ? வீரப் பனை மாதிரி முறுக்கி விட்டுக்கொண்டு திரிஞ்சா எல்லோ ஆம்பிளையள் எண்டு தம்புவியைப்போல கிடக்குது எண்டாள். பின்னை நாலும் யோசியாமல் எல்லா மீசையை முறுக்கி விட்டுக் கொண்டன். அவனுக்கும் உடனை கோபம் வந்திருக்க வேணும்.

பெண் அழுமைத்தனம்... பெண் அடி மைத்தனம் எண்டு கத்துறீங்கள். இதுக்கு கும்பல் எதிர்பார்ப்போட திரிகிறதுகள். உப்பிடி ஒண்டு அங்கினேக்கை கிடைக்க சேக்கை அவங்களின் பாசமும் இருக்கிற பிறச் சனை போய் வேணுமெண்ட அவசரம்தான்.

அந்த நேரம் ரெலிபோன் அடிச்சா ரெண்டு மூண்டு நிமிசத்துக்கை 'காட்' முடியுதெண்டு சொல்லி 'கட்' பண்ணிப்போடுவினம். அதை கதைச்சுக் கொண்டிருக்கிறவை நம்பவேணும் எண்டதுக்காக ஒரு இலக்கத்தை அடிக்க அது போடுற சத்தமும் 'காட்' முடியிற சத்தமும் ஒரே மாதிரி அவையளும் உண்மையெண்டு நம்பி வைச்சிடுவினம்.

இதாலை அன்பு கூடுதோ இல்லையோ அவையளுக்கையே அரியண்டம் வராது தெண்டது மட்டும் உண்மைதான். எடுத்து வைச்ச 'அன்பே நீ அங்கே நான் இங்கே வாழ்ந்தால் இன்பம் காண்பது எங்கே..'

இருந்து அவரும் ஒரு ரெலிபோன் அடிச் சான். இதுக்கை ஒருபட்டுத் திரிஞ்ச 'ஓமோ' (அகதி அந்தஸ்து வழங்குமிடம்) அலுவலுகளும் பாத்து, எல்லாம் சரிவந்து அவ அங்கையிருந்து பயணம் ஏற வேண்டி யதுதான். ஆரம்பத்திலை ரெலிபோனிலை நல்லா கதைச்சுக் கொண்டிருந்தவ கொஞ்ச நாளையிலை வந்து இங்கினை கதைக்கிறதை குறைச்சுப் போட்டாளாம். பெடியனுக்கும் ஒண்டுமாய் விளங்கேலை. மண்டையை மண்டையை பிச்சுப்போட்டு இருந்திருக்கிறார்.

பயணமும் சரிவந்து ஆளும் வந்து சேர்ந் திட்டுது. கலியாணத்துக்கு நாள் பாத்து அவர், 'கண்ணைத் தாவட்ட வருவாயா' எண்டு பாடிக் கொண்டிருக்க, அவ வந்தது வந்தா துணையுடன் வந்தா! 'டிவோசும்' கேட்டு கடிதம் கொடுத்திருக்கிறாவாம். அவ விரும்பியிருக்கிற இன்னொருத்தரை செய்யிறதெண்டா இவர் முன்னம் போட்ட கையெழுத்தை 'வாபஸ்' வாங்கினாத் தானே முடியும். சொல்லிப்போட்டு இவ வோண்டையும் சொன்னாளாம். இன்னொரு பக்கத்து நாட்டினையும் ஏஜென்சிக்கார என்ன சொல்லப் போறாய்? எண்டு வடக்கு முடக்கான கேள்வியை என்னட்ட போட்டு விட்டான். எனக்கு அப்பதான் விளங்கிச்சுது. உவன் ரெண்டு விசயத்தை ஒண்டாய் சொல்லேக்கை ஏதோ ஞாபகமான கேள்வி கேட்கிறானெண்டு! இதுக்கு நான் என்னத்தைச் சொல்லுறது..? உதுகள் மட்டுமில்லை உப்பிடி உங்கை கனக்க நடக்குது. இப்பிடியானவைக்கா ஈழமுரசு 'பெண்கள் பகுதிக்கு' எதிரிலை 'ஆண்கள் பகுதி' எண்டொரு பக்கம்தான் திறக்க வேணும்போல..' எண்டன். இருந்தாலும் அவன் சொன்னதிலையும் வேதனையான விசயம் இருக்குத்தான். பெடியளும் ஊரில கத்துக்குதும் 'அவள் வருவாளோ அவள் வரு வாளோ..' எண்டு பாடியிருப்பாங்கள். 'கடைசியா இலவுகாத்த கிளியின்ரை நிலை மையா போறது வேதனைக்குரிய விசயம் எண்டதை உரியவை புரிஞ்சு கொண்டா நல்லதுங்கோ. உண்மைகள் எப்பவும் கசப்பாய்த்தான் இருக்கும்.

**அருமைத்தம்பி**


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

35 % முதலீடு - 65 % சேமிப்பு

எமது தொலைபேசி அட்டைகளை விற்பதன் மூலம் அதிக லாபம் பெறுங்கள்!

மிகவிரைவில் எமது விஸ்தரிப்புகள்: லண்டன், சுவிஸ், ஜேர்மனி

இலங்கை 45 நிமிடம்
இந்தியா 45 நிமிடம்
கனடா 100 நிமிடம்
லண்டன் 100 நிமிடம்
ஐரோப்பா 70 நிமிடம்



92, Rue de Bellville
75020 Paris (M°: Pyrénees)
Tél.: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96

33, Place de Général de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tél.: 03 44 55 41 59 Fax: 03 44 55 42 51

KING Telecom

# நீங்கள் யார்? உங்கள் நிலை எது?

ஒரு குழந்தையாக இருந்த போது
நான் யார்?
என் பெயர் என்ன?
என் சமயம் என்ன?
என் கலை கலாச்சாரம் பண்பாடு எது?
என் தகுதி என்ன? திறமை என்ன?
எனக்கு எது பிடிக்கும்?
எது பிடிக்காது?
என்பது எதுவுமே தெரியாத நிலையில் தான் வாழ்க்கை தொடங்குகிறது.

## மனிதனின் மகத்தான சக்திகள்

தன்னம்பிக்கை ப[illegible] சுப்பிரமணியம்

இளம் பிராயத்தில், வளரும் சூழலில் நடைபெறும் சம்பவங்களோ, அனுபவமும், குணம், சமய நம்பிக்கை கலை, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றுக்கு மையக் கருவாக அமைந்து விடுகின்றன.

இந்த வயதுகளுள் மனதில் பதியாகும் விஷயங்களே ஆழமான நம்பிக்கையாக (Core belief) வாழ்க்கையை ஆக்கிரமித்துக் கொள்கின்றது.

குழந்தையின் மனம் 'மண்' போன்றது. மண்ணில் எதனை விதைத்தாலும் மறுக்காமல் அதனை ஏற்றுக்கொண்டு தன்னுடைய சக்தியை வழங்கி விளைச்சலைக் கொடுப்பதுபோல மனதும் விதைக்கப்படும் எண்ணங்களை மறுக்காமல் ஏற்றுக் கொண்டு, தன்னுடைய சக்தியை வழங்கி பலன் தருகிறது.

மண்ணுக்கு என்ன விதை விதைக்கப்படுகிறது என்பது தெரியாது. கத்தரி விதையை விதைத்தாலும், சோள விதையை விதைத்தாலும், மாங்கன்றை நட்டாலும், தென்னங்கன்றை நட்டாலும், எதுவாக இருந்தாலும், எதையும் மறுப்பதில்லை. அது தன் வேலையை பாரபட்சமில்லாமல் செய்கின்றது. இயற்கையாகவே தன்னகத்தே கொண்டுள்ள சக்தியினை வழங்கி விதையை வளரச் செய்து பலன் தருகிறது.

கத்தரி விதைத்தால் - கத்திரிக்காய்,
சோளம் விதைத்தால் - சோளம்
மாங்கன்று - மாம்பழம்,
தென்னங்கன்று - தேங்காய்
என்று விதைக்கேற்ற பலன் கிடைக்கின்றது.

மனித மனமும் அவ்வாறே செயல் படுகிறது.

சிறுவயதில் மனதில் விதைக்கப்படும் எண்ணங்கள் சரியா தப்பா என்பதெல்லாம் தெரிவதில்லை.

மண்ணில் விதைக்கப்படுவதை இறுகப் பற்றிக் கொள்ளும் மண்போல மனதில் ஐம்புலன்கள் வழி (கண், காது, மூக்கு, வாய், உடல்) பார்க்கும், கேட்கும், சுவைக்கும், நுகரும், உணரும் அத்தனையும் எண்ணங்களாக நம்பிக்கையாக

மனதில் வீடியோ நாடாவில் பதிவு செய்யப் படுவது போல பதிவாகிக்கொண்டிருக்கின்றன. அச்சுப்போல அழுத்தம் பெறுகின்றன.

மண்ணில் விதைத்தது தான் பயிராக - பலன் தருகிறது. வீடியோ நாடாவில் பதிவு செய்யப்பட்டது தான் ஒளிபரப்பாகிறது. அச்சு எப்படி; பலகாரம் அப்படி.

சிறுவயதில் மனதில் கருக்கொள்ளும் எண்ணங்களுக்கு ஏற்ப, நம்பிக்கைக்கேற்ப மனிதன் செயல் படுகிறான்.

இன்று வாழும் வாழ்க்கையின் உயர்விலோ தாழ்விலோ அது மனத்தின் மீது குற்றமில்லை. மனத்தில் இருக்கும் எண்ணம் அத்தகைய எண்ணத்தை விதைத்தவன் மீதுதான் குற்றம்.

மாற வேண்டியது 'மண்' அல்ல
மாற்றப்பட வேண்டியது 'விதை'
மாற வேண்டியது 'மனம்' அல்ல
மாற்றப்பட வேண்டியது 'எண்ணம்'.

மண்ணுக்கு சுயமாக விதையை மாற்றிக்கொள்ளும் வாய்ப்புக்கிடையாது.

ஆனால் மனிதனுக்கு மட்டும் தன் எண்ணத்தை மாற்றிக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. எண்ணங்களை மாற்றினால் மனம் அதனை ஏற்றுக்கொண்டு செயல்படுகிறது.

உலகில் எந்தவும் வேறு எந்த உயிரினத்துக்கும் இத்தகைய வாய்ப்பு கிடையாது. மனிதனுக்கு மட்டுமே உள்ளது.

மனிதனின் மகத்தான சக்தியே இதுதான். இருந்தது போல இருப்பவை மிருகங்கள், விரும்பினால் இருக்கின்ற நிலையை மாற்றிக் கொள்ளுபவர்கள் மனிதர்கள்.

### நீங்கள் யார்?

மிருகங்களும் மற்ற உயிரினங்களும் இருக்கிற வாழ்க்கையை மாற்றிக்கொள்ள முடியாதவை. மனிதன் இருக்கிற வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளலாம். அல்லது மாற்றிக் கொள்ளலாம். **ஏற்றுக்கொள்வதா? மாற்றிக்கொள்வதா?**

இருக்கிற வாழ்க்கையை ஏற்றுக் கொள்பவர்கள். இருக்கிற இடத்திலேயே இருக்கிறார்கள்.


மாற்றிக் கொள்பவர்கள் மனிதப் பிறப்புக்கு பெருமை சேர்க்கிறார்கள்.

### உங்கள் நிலை எது?

இன்றைய நிலையில் நீங்கள் வாழும் வாழ்க்கைக்கு அடிப்படைக் காரணம், இதுவரை முடியாது என்ற எண்ணமும் நம்பிக்கையைத் தவிர வேறொன்றாக இருக்க முடியாது.

இத்தகைய நம்பிக்கை உங்களுக்கு ஏற்பட்டது எப்படி?

பிறப்பிலேயா-வளர்ப்பிலேயா?



வளர்ப்பிலிருந்தான் என்பதை புரிந்து கொண்டால், இதுவல்ல நான் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

இன்றைக்கு நீங்கள் உங்களைப் பற்றி உங்கள் தகுதி பற்றி கொண்டுள்ள அபிப்பிராயம் உண்மையானதுதானா? அல்லது அப்படி நம்ப வைக்கப் பட்டிருக்கிறீர்களா?

உங்களை நீங்களே ஒரு கேள்வி கேட்டுப் பாருங்கள்

**இதுதான் நானா?**

உங்களை வேறு இனத்தவர்கள் எடுத்து வளர்த்தால் உங்கள் பெயர் என்னவாக இருக்கும்? கலை, கலாச்சாரம், பண்பாடு, சமயம் எதுவாக இருந்திருக்கும். இப்பொழுது இருப்பது போல் இருக்காது. உறுதியாக மாறி இருக்கும். நீங்கள் தற்போதுள்ள நீங்களாக இருக்க முடியாது. இது போலத்தான் உங்கள் தகுதி பற்றி நீங்கள் தற்போது கொண்டுள்ள அபிப்பிராயமும்.

உண்மை என்னவெனில் உங்கள் தகுதி - திறமை, ஆற்றல், அறிவு என்பதெல்லாம் வாழ்க்கைச் சம்பவங்களால் உருவாக்கப்பட்டுள்ளவை. வேறு விதமான வாழ்க்கைச் சம்பவங்கள் அமைந்து இருப்பதால் வேறு விதமான மனிதராக நீங்கள் இருந்திருப்பீர்கள்.

இன்றுள்ள நிலை உண்மையல்ல.

இப்படி ஆக்கப் பட்டிருக்கிறீர்கள் என்பதுதான உண்மை நீங்கள் எப்படி இருந்தால் நல்லது என்று நினைக்கிறீர்கள். எத்தகைய தகுதி, திறமை, அறிவு இருக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறீர்கள்.

கவலைப்படாதீர்கள்.

எண்ணத்தை மாற்றினால் வாழ்வும் மாறலாம்.

உயர்வு காணலாம்.

மாறக் கூடியது மனிதன் மட்டுமே.

மறவாதீர்கள்! நீங்கள் மனிதனாக இருக்கிறீர்கள்.

10வது ஆண்டில் காலடிபதிக்கும்
இமாலயாவின்
தொடரும் சேவையில்.... மற்றுமோர் அறிமுகம்
100 இடியப்பம் 100 பிராங்குகள் மட்டுமே
உங்கள் இல்லங்களையும்; உங்கள் தொழிலகங்களையும் நோக்கிய எமது....
கடுகதி பார்சல் சேவை
❀ பிரியாணி ❀ கொத்துரொட்டி ❀ இடியப்பப்பிரியாணி ❀ தந்தூரி வகைகள் ❀ நாண் ❀ சீஸ்நாண் ❀ சப்பாத்தி ❀ சமூசா ❀ றோல்ஸ் ❀ சோறு - கறி
இவற்றை உங்களின் இல்லங்களில் இருந்தபடியே உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்து உண்டு மகிழ்ந்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
தொலைபேசி: 01 42 06 03 50 / 01 42 03 06 51
ரெஸ்ரோறன் இமாலயா
9, Rue Jacques Louvel Tessier, 75010 Paris (M°: Goncourt)

சாந்தினி உணவகம்
குதூகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது
14, Rue Perdonnet, 75010 Paris.
Métro: La chappelle / Gare du Nord
Tel: 01 42 09 37 99
காலை – 9.00 மணி முதல் இரவு – 11.30 மணிவரை
உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு
காலை: இட்லி, புட்டு, இலங்கைத்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு
மதியம்: சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து,
கொத்துரொட்டி, ரொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.
இரவு: நீங்கள் விரும்பிய உணவு வகைகள் உண்டு
மகிழ்ந்திட நாடவேண்டியது
சாந்தினி உணவகம்
Pub

# ஐ.நா. பேரணி

## ஒரு கண்ணோட்டம்

கடந்த 10.08.98 திங்கட்கிழமை சிறீலங்கா அரசிற்கு எதிராக சுவிற்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரத்தில் அமைந்துள்ள ஐக்கிய நாட்டு வளாகத்தை நோக்கி பத்தாயிரத்திற்கும் அதிகமான தமிழீழ மக்கள் அணி திரண்டனர்.

ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கலந்துகொண்டு தமிழீழ மக்கள் எழுப்பிய உரிமைக் குரல், ஐக்கியநாட்டு அதிகாரிகளின் மனக்கதவைத் தட்டியிருக்கிறது.

அன்றைய தினம் ஐநாடுகள் சதுக்கத்தில் அமைதிப் பேரணியின் இறுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் சிறப்புப் பேச்சாளர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.

**கா.சிவநாதன்: (ஜேர்மன் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர்)**

சிறீலங்காவில் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் உலகத்தின் கண்களை ஏமாற்றி தமிழருக்கு எதிராக ஐக்கியநாடுகள் சாசனத்திற்கு முரணான விதத்திலேயே நடந்தன. இதன் காரணமாகவே நாம் ஆயுதமேந்தி எமது உரிமைக்காகப் போராட முற்பட்டோம். தமிழரைப் பாதுகாக்கும் படையை பயங்கரவாதிகள்; கொலைச்சிக்காரர்கள் என்று பொய்யாக அவர்களை அழிப்பதுக் கூறிக்கொண்டு தமிழ் மக்களை அழித்தொழிக்கின்றனர். ஐக்கிய நாடுகள் சபை சாசனத்தில் இல்லாத கொடுமைகளை செய்து திரிகின்றன. இந்த அரசுகள். எனவே இந்தப் பெரிய பாதகத்தை இனியும் மறைக்க முற்படாது; மனநம்காது தமிழர்க்கு உரிய உரிமைகளைக் கொடுத்து தமிழர்களுக்கு தனி நாட்டைக் கொடுத்து சுதந்திரமாக வாழவிடுவீர்களானால் மட்டுமே, நீங்கள் மனிதநேயத்தைக் காப்பாற்றுபவர்களாக இருப்பீர்கள் என்பதை எடுத்துக்காட்டவே இங்கு இவ்வளவாயிரம் மக்கள் கூடியிருக்கிறார்கள் என ஆவேசத்துடன் பேசினார்.

**டிமர்ரீ மக் கொணல் (தமிழர் மனித உரிமை மையம்)**

ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை மூலம் அரசு எதிர்கொள்ளும் பின்னடைவையும்,



புலிகள் பெறுவதும் அதிக பலத்தையும் எடுத்துக்காட்டி, கூடியுள்ள மக்களால் உணர்ந்து படிய கோரிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை செவிமடுக்க வேண்டும் எனவும், 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' எனவும் தமிழில் கூறி தனது பேச்சை முடித்தார்.

**கரண் பாக்கர்: (உலகக் கல்வி மேம்பாட்டு நிறுவனம் U.S.A)**

விடுதலைப்பாதை என்பது சுலபமானதல்ல. இது ஒரு கடினமான பாதை. இந்தப் பாதை




யில் மக்கள் அலகிறன்று உலக நாடுகளுக்கும் மக்களுக்கும் தமது போராட்டத்தைப் பற்றித் தெரியப்படுத்தி சிறீலங்கா அரசின் கொடுமைகளையும் மனித உரிமை மீறல்களையும் வெற்றி கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

**பாலசுந்தரம் (பிரான்ஸ்)**

எமது நாட்டில் நடைபெறும் அனர்த்தங்கள் அழிவுகள் மனிதாபிமானமற்ற செயல்களை உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்துவதில் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு தெரியப்படுத்துவதில் இப் பேரணி முக்கியமாகிறது. அகதி நிலை கொண்டு புலம் பெயர்ந்து வாழ்ந்த போதிலும் எங்கள் மக்களின் உணர்வுகள் தாயகம் மீது ஒட்டியுள்ளன என்பதற்கு ஆதாரமாக ஐநா சபைக்கு முன்பாக இங்கு மக்கள் கூடியுள்ளனர் எனக் கூறினார்.


**பத்மநாதன் (இங்கிலாந்து)**

கத்தும் தமிழீழ கடல் நீர் கொட்டு, மனித உருக்கொண்டு எழுந்ததுபோல் காட்சியளிக்கும் ஜனசமுத்திரத்தை நோக்கி ஒற்றார் சிலைபெற்றிய கவிவரியில் முழங்கியவாறு, புலிக்கொடி ஏந்தி நிற்கும் தமிழீழத் தாய்மாரே!! சிலை எழுந்த தாய் போல் நின்றபடி சிங்களப் படை முகாம் வீழ்த்தார் பெண் போராளிகளின் சகோதரிகளே! தாய்மார்க்கு வெண்மாடும் போங்களின் அண்ணனாய், தம்பியாய் தந்தையாய், தோழராய்... என்று பாரம்பரியமான போர்களின் ஆரம்பித்து, தமிழீழ மக்கள் அமைதிக்கு எதிரானவர்கள், சர்வதேச பாதிப்புக்கு குந்தகம் விளைவிப்பவர்கள்.. பயங்கரவாதிகள். போர்வெறி பிடித்தவர்கள், மனித உரிமைகளின் மாண்புகளை மறந்தவர்கள் என சிறீலங்கா அரசு ஐக்கியநாடுகள் முன்னே, ஏன்! உலகமெங்கும் பொய்ப் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டு தனது அரச பயங்கரவாதத்தையும் மூடி மறைக்க முயல்கிறது. அந்த முகமூடியைக் கிழித்து சிறீலங்கா அரசின் உண்மைச் சொரூபத்தைக் காட்டவே நாம் இன்று இங்கு எமக்கெல்லாம் நம்பிக்கை தரும் தலைவனாய், எமது தேச விடுதலை இயக்கமாம், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவனாய் எம் உயிரினும் மேலான தாய்த்தமிழ்த் தேசத்தின் தலைவனாய், மக்கள் விடுதலையை தேச விடுதலையாய் கொண்ட காரண கர்த்தா ஜனநாயக நாடொன்றை, பழந்தமிழ்க் கனவு புதிய சமுதாயமொன்றை உருவாக்கிக் காத்து நிற்கும் 21ம் நூற்றாண்டின் உலகின் தன்னிகரற்ற தலைவர்களில் ஒருவராய் விளங்கும் மேதகு தலைவர் வே.பிரபாகரனின் வழிநடத்தலில் வாழும் தேசம் எங்கள் தமிழீழத் தேசம் என்பதை எடுத்துக்காட்டுமுகமாக அவரின் உருவப்படத்தைத் தாங்கி இங்கு நிற்கிறோம். 1946 முதல் 1956 வரை இலங்கை ஒரு தனிநாடு இல்லை எனக்கோரி, ஒருமுறை அல்ல; இருமுறை விட்டோம் அதிகாரத்தைக் கொண்டுவந்ததை இந்த ஐக்கியநாடு சபைக்கு முன்பு நாம் நினைவுபடுத்துகிறோம். இதே ஒரு நாடு தனி நாடு என்பதற்குச் சான்றாகும். எனவே 'தமிழீழ மக்கள் தனியான தேசிய இனம் தனித்துவ இறைமை உள்ளவர்கள்' என்பதை சுட்டிக்


எங்கும் கிடைக்கிறது




Marketed & Distributed by
Ayngaran Limited
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
E-mail: bhasky@aol.com
BHASKY




போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

# எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்



- வசந்தி பாலசுப்பிரமணியம்

கருவில் இருக்கும்போதே தாயின் மன உணர்வுக்கேற்ப மன வளர்ச்சியும், பரம்பரைக்கேற்ப உடல் வாகும் அமைந்துவிடுகின்றது.

**உடல் உறுப்புகள்:**

மனித உடலில் ஒவ்வொரு உறுப்புக்களும் ஒரு குறிப்பிட்ட கணியத்தைச் செய்வதற்காக இயங்குகின்றன. ஒவ்வொரு உறுப்பும் உடலுக்கு இன்றியமையாதது ஒன்றாகும், எந்த உறுப்புமே தேவையில்லை என்று ஒதுக்க முடியாது. உடல் உறுப்புகளைப் பொறுத்த வரையில் உலகில் அனைவருக்குமே ஒரே மாதிரியாகத்தான் அமைந்துள்ளன.

ஆனால் வாழ்க்கைமுறை எண்ணங்கள் மட்டுமே மாறுபட்டு இருக்கின்றது. எண்ணங்களுக்கேற்ப மனிதர்கள் வாழுகின்றார்கள்.

**மனம்**

மனித வாழ்க்கையை நிர்ணயம் செய்வது மனம்தான். 'உன் உணர்வுதான்' மனம் எனப்படுகிறது. மனம் எந்த உருவில், இடத்தில் இருக்கிறது என்பதில் பல கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. எனினும் மூளைக்கும் மனதுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது என்பதை அனைவருமே ஒப்புக் கொள்கின்றனர். மூளையில்தான் மனம் இயங்குகிறது என்றும் மூளையே மனம் என்றும் சில அறிவியல் அறிஞர்கள் விளக்கம் சொல்கின்றனர்.

**மூளை**

உடலில் பல உறுப்புகள் இருந்தாலும் வாழ்க்கையை நிர்ணயம் செய்வது மூளை மட்டுமே. மூளைதான் உடலில் உள்ள எல்லா உறுப்புக்களையும் இயக்குகிறது. சிந்திக்கிறது, கற்பனை செய்கிறது. மனிதனின் செயல்பாடுகள் அனைத்துக்கும் மூளையே மூலமாக இருக்கின்றது.

ஒருவருக்கு மூளையில் கோளாறு ஏற்பட்டுவிட்டால் அவருடைய செய்கைகள் அனைத்தும் ஒருக்கு மாறாக அமைந்து பைத்தியக்காரர் என்று ஒதுக்கி வைக்கப்படுகிறார். அவர் தன்னையறியாமல் பல காரியங்கள் செய்கிறார். மூளைக் கோளாறினை சரிப்படுத்திவிட்டால் அவர் தன்னிலைக்கு திரும்புகிறார். மூளைதான், மனிதன் மனிதனாக இருப்பதற்கு காரியமாற்றுகிறது.

எல்லா மனிதருக்கும் அமையப் பெற்றுள்ள உடல் உறுப்புகள் போலவே மூளையும் அனைவருக்கும் ஒரே மாதிரியாகத்தான் அமைந்திருக்கின்றது.

**மூளை வளர்ச்சி**

குடும்ப பரம்பரை உடல்வாகு - குணாதிசயம் - தாயின் மனோநிலை இவையாவும் கருக்கூடும் போதே குழந்தையின் உயிரணுக்களில் பதிவாகிவிடுகின்றது.

கருவில் இருக்கும் குழந்தையின் மூளையின் உயிரணுக்கள் 5 மாதத்திலிருந்து மிக வேகமாக வளர்ச்சியடையத் தொடங்குகிறது. ஒன்பதாவது மாத இறுதியில் குழந்தை பிறக்கும்போது பெரியவர்களுக்கு உள்ள மூளையின்

> உயிரணுக்கள் மிகுந்த நுட்பமான - மென்மையான உணர்வுகளைக் கொண்டிருக்கின்றன. கருவிலிருந்து - வளர்ச்சி பெற்று - பிறந்து ஒரு வயது ஆவதற்குள் குழந்தையைச் சுற்றி நடைபெறும் அனைத்தும் மூளையில் பதிவாகிவிடுகின்றன.

அளவில் 25% வளர்ச்சி பெற்றுள்ளது. குழந்தை ஒரு வயது அடையும் வேளையில் பெரியவர்களின் மூளையின் அளவில் 70% வளர்ச்சி பெற்றுவிடுகிறது.

குழந்தையின் மூளை வளர்ச்சி பெறும் கால கட்டம் கருக்கூடிய நாள்முதல் - ஒரு வயதுவரையாகும். இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டமாகும்.

**மூளையின் அமைப்பு**

மனிதர்கள் அனைவருக்கும் 1.4 கிலோகிராம் எடையில் மூளை அமைந்துள்ளது. ஏழையோ, பணக்காரரோ, அறிவாளியோ - முட்டாளோ எவராக இருந்தாலும் அனைவருக்கும் ஒரே எடையில் - அளவில்தான் மூளை அமையப் பெற்றுள்ளது.

**நியூரோன்ஸ்**

மூளையின் பெரும்பகுதி உயிரணுக்களால் (NERVE CELLS) உருவாக்கப்பட்டுள்ளது. மூளையில் 10 முதல் நூறுகோடி உயிரணுக்கள் இருப்பதாக அறிவியல் அறிஞர்கள் அனுமானித்துள்ளார்கள். இவ்வணுக்களை நியூரோன்ஸ் (Neurons) என்றழைக்கிறார்கள். ஒவ்வொரு நியூரோனும் தனித்து இயங்கும் வல்லமை கொண்டுள்ளதோடு ஏனைய நியூரோன்களோடு இணைந்து இயங்கும் தன்மையும் கொண்டுள்ளது.

ஒவ்வொரு நியூரோனிலும் 50,000-க்கு மேற்பட்ட எக்சோன் (Axon) டென்ட்ரைட்ஸ் (Dendrites) எனும் மெல்லிய மென்மையான நரம்புகள் அமைந்துள்ளன.

எக்சோன் —
செய்தியைப் பெறுகின்றது
டென்ட்ரைட்ஸ் —
செய்தியை அனுப்புகிறது

ஒரு செய்தியை அனுப்பி வைக்க ஒவ்வொரு நியூரோனும் மின்சக்தி வழியோடு ஒன்று மணிக்கு 290 கிலோமீற்றர் வேகத்தில் தொடர்பு கொள்கின்றன.

நியூரோன்கள் உருவத்தில் மிக மிகச் சிறிய அளவில்தான் அமைந்துள்ளன. ஒரு பேப்பர் இணைப்பு ஊசி (Paper pin) தலைப்பகுதி மிகச் சிறியதாக இருக்கும். ஆனால் மூளையில் அப்பகுதிபோன்ற அளவிலான இடத்தில் ஏறக்குறைய 50,000-க்கு மேற்பட்ட நியூரோன்கள் இயங்குகின்றன.

இத்தகைய உயிரணுக்கள் மிகுந்த நுட்பமான - மென்மையான உணர்வுகளைக் கொண்டிருக்கின்றன. கருவிலிருந்து - வளர்ச்சி பெற்று - பிறந்து ஒரு வயது ஆவதற்குள் குழந்தையைச் சுற்றி நடைபெறும் அனைத்தும் மூளையில் பதிவாகிவிடுகின்றன.

**அவை நல்லவைகளா?**
**நேர்மறை எண்ணங்களா?**
**(Positive)**
**கெட்டவைகளா? எதிர்மறை**
**எண்ணங்களா (Negative)**
**என்று மூளைக்குத் தெரியாது.**

பச்சை மண்ணில் விதைக்கப்படும் விதைகள் என்னவென்று மண்ணுக்குத் தெரியாது. ஆனால் விதை துளிர் விட்டு வளர முன் தன் பணியைச் செய்கிறது. அது போலவே குழந்தையைச் சுற்றி நடைபெறும் அனைத்தும் மூளையில் விதைக்கப்படுகிறது. மூளையில் உள்ள நியூரோன்கள் அதனைப் பத்திரமாக பாதுகாத்து வைத்துக்கொண்டு, மண்ணைப் போலவே தன் பணியினைச் செய்கின்றது.

விதைத்தது விளைகிறது!

ஒரு வயதுக்குள்ளாக உங்கள் குழந்தையின் மூளையில் விதைக்கப்பட்டுள்ளது என்ன? சிந்தித்துப் பாருங்கள்.

அடுத்த இதழில் மூளையின் செயல்முறைகள் தொடரும்.

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

## இரவுக்குள் தொழுகையும்

'என்ன புதினம்?'

'கோட்டை காசு தராததால புலிகளைக் கோர்ட்டுக்குள விட்டுட்டுவந்த நாங்களெல்லோ!'

'அதாரடக்கென்ன? ஒரு வழியைச் சரியவில்லை. கொண்டுபோய் விட்டுட்டாங்களோ?'

'அவன் செத்துப்போனான். ஒரு குறுக்கு றோட்டில கிடந்து பொலிஸ் சவத்தைக் கண்டெடுத்திருக்கு.'

'ஏதாவது ஆவணங்கள் அம்பிட்டுதோ?' இப்போது செல்வம் கதறினான். மகேந்திரனும் விடயம் புரியாமல் பதட்டமடைந்தான்.

'என்னெண்டு? அதுதான் துலைவிக்க காட்டிலை இருந்து எல்லாத்தையும் வாங்கி வேறை ஆளுக்கு விற்றுபோச்சே! ஆள் ஆர் எந்த நாடு என்டு கண்டுபிடிக்கக் கூடிய எந்த டொக்குமென்ற்சும் இல்லை. இதைவிட மினைக்கெடவதுக்கு ரஷ்யா போலிசும் இல்லை.'

'அப்பாடா. அதுசரி. இப்ப என்னத்துக்கு எடுத்தனி?'

'இல்லை என்ன இருந்தாலும் அவன் எங்கட வாடிக்கையாளன் கடைசி நாங்கள் ஆரெண்டு சொல்லாமல் அவனின்ர சொந்தக் காரருக்கெண்டாலும் அறிவிக்கச் சொல்லுவமே?'

'பேப்... மண்டைக்கை ஒரு சரக்கும் இல்லை. ஒன்றையும் நாதத்தையும் உன்ர அலுவலைப் பார்' செல்வம் கோபத்துடன் அறைந்து வைத்தான்.

'என்னவாம்?' அடி. தனி தெரியாமல் கேட்டான் மகேந்திரன்.

'சரி, பேர் தெரியாதவனும் கொல்லாம். இரக்கம் பார்த்து ஒரு தொழில் போட்டுக் கொடுத்தால் அதுகள் இப்ப எனக்கு சமயம் படிப்பிக்கத்துகள். அதுகலா விடு. நீ ஒருக்கா லாகோசுக்கடித்துக் கதை. நான் கொழும்புக்குக் கதைக்கிறன்.' இரண்டு மகத் தொலைபேசிகள் உயிர்த்தன.

அடுத்து வந்த நாட்களில் லாகோசிலிருந்து புறப்பட்ட ஆபிரிக்க உக்ரெய்ன் விமானம் ஒன்றில் பிள்ளை, குட்டிகளுடன் இருந்த 30க்கும் மேற்பட்ட தமிழர்கள் வண்ணக் கனவு கண்டுகொண்டிருந்தார்கள்.

கொழும்பிலிருந்து பலர் லாகோசுக்குக் கொண்டு வந்து இறக்கப்பட்டனர்.

(இன்னும் என்னவெல்லாமோ தொடருமோ).


**Radio Asia**
**Canada**

24 மணிநேர தமிழ் ஒலிபரப்பு

ஐரோப்பிய நாடுகளில்:

Astra Satellite Video Channel 7 இல்
Audio Frequencey : 7.38 mhz
Video Carrier: 11.303 Ghz

சிற்றலை வரிசை ஒலிபரப்பு:

Gmt 20:00 -22:00 -15,245 Mhz
GMT 22:00 -24:00-11.960 Mhz
GMT 24:00 -02:00 -9.560 Mhz
GMT 02:00 -04:00 -9:855 Mhz

அவுஸ்திரேலியா: 24 மணிநேரம்

Stereo -173.6 Mhz

தலைமையகத் தொடர்புகளுக்கு:

**Radio Asia Canada**

680 Pregress Avenue. Unit 1
Scarborough, Ontario, M 1H 3A5, Canada.
Tel: 416-289-1522 / Fax: 416-289-1840



## ஐரோப்பா தழுவிய குறும்பட போட்டி -1998

**கலைஞர்களே !**

உங்கள் கமராக் கண்களைத் திறவுங்கள், எங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சினைகளை படமாக்கிக் கொள்ளுங்கள். சமூகத்தைப் பற்றிய பார்வையும் எதிர்காலம் பற்றிய தெளிவும் உங்கள் குறும்படத்தில் பிரதிபலிக்கட்டும்.

**குறும்படப் போட்டியில் பங்குபற்றுபவர்களுக்கான விதிமுறைகள்**

1. இவ்வருட ஜூலை மாத இறுதிப் பகுதிக்குள் போட்டியில் பங்குபற்றும் அனைவரும் தங்களது விண்ணப்பங்களை தொலைபேசி மூலமாக பதிவு செய்து கொள்ளுங்கள்
2. குறும்படங்கள் எம்மை வந்து சேரவேண்டிய இறுதித் திகதி ஒக்ரோபர் 15 இற்கு முன்.
3. ஆக்க தளம் - புலம் பெயர் வாழ்வின் அவலங்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் விரும்பத்தக்கது.
4. திரைக்கதை, இசை, பாடல், நெறியாள்கை யாவும் சுயமானதாக இருத்தல் வேண்டும்.
5. இப்போட்டியில் கலைக்குழுக்களாகவோ, தனிநபர்களாகவோ கலந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ் (01 48 68 11 42)

# முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரை சிறீலங்கா வென்றது

சிறீலங்கா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகள் பங்குபற்றிய 'எமிரேட்ஸ் ரையாங்குலர்' கிண்ணத்திற்கான ஒருநாள் போட்டித் தொடரில், நடைபெற்ற தெரிவுப் போட்டிகளில் மூன்று



அணிகளுமே தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சமபுள்ளிகளுடன் காணப்பட்ட போது, ஓட்ட விகித அடிப்படையில் இறுதிப் போட்டி இரு அணிகள் தெரிவுசெய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட இங்கிலாந்தும், சிறீலங்காவும் 20.08.98 அன்று லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து தனது ஆரம்ப ஜோடியான நைட், அதட்டன் ஆகியோரின் சிறந்த அடித்தாடலால் 132 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் அதட்டன் 64 ஓட்டங்களுடன் வெளியேற, சிறப்பாக ஆடிய நைட் 94 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த இங்கிலாந்தின் மட்டையாளர்கள் மளமளவென்று மைதானத்திலிருந்து திருப்பியழைக்கப்பட்டனர். ஒரு சுழல்பந்து வீச்சாளரால், அந்த சுழல்பந்து வீச்சாளர் ஆசிய அதிக தலைசிறந்த 'ஓவ் ஸ்பினர்' முத்தையா முரளிதரன். முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

50 ஓவர்கள் முடிவில் 8 விக்கட்டுக்களை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றது இங்கிலாந்து அணி. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிறீலங்கா அணி, ஆரம்பத்திலேயே தனது முக்கிய ஒருநாள் பந்தய வீரரான ஜெயசூரியாவை ஓட்டமேதும் பெறாத நிலையில் இழந்தது. அடுத்து ஆடவந்த புதுமுகமான வளர்ந்துவரும் புதிய நட்சத்திரம் அதபத்து, குணவர்த்தனாவுடன் இணைந்து ஆட்டத்தை மந்த சாதகமாக்கி முன் நகர்த்தினார். 69 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் குணவர்த்தனா ஆட்டமிழக்க அதபத்துவுடன் ஆட்டத்தில் இணைந்த அதிரடி வித்தகர் அரவிந்த டி சில்வாவும் தனது பாணியிலான ஆட்டத்தின் மூலம் அணியை வெற்றிக்கு இட்டுச் சென்றார். அரவிந்த டி சில்வா ஆட்டமிழக்க தொடர்ந்து வந்த ஆட்டக்காரர்களின் துணையுடன் 47.1 ஓவர்களில் 260 ஓட்டங்களை 5 விக்கட்டுக்கள் இழப்பில் பெற்று சிறீலங்கா அணிக்காக ஆட்டமிழக்காது 132 ஓட்டங்களைப் பெற்று கோப்பையை வெல்லக் காரணமாகவிருந்தவர் அதபத்து. இங்கிலாந்து மண்ணில் சிறீலங்கா பெற்றுக்கொண்ட முக்கிய வெற்றி இதுவாகும்

– பொன். தாமோதரம்

# நெதர்லாந்தில் மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

தமிழீழ மக்களின் விடிவிற்காக மரணித்த மாவீரர்களின் நினைவாக மூன்றாவது ஆண்டு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஈழத்தமிழர் விளையாட்டு ஒன்றியத்தால் டென்காக் மாநகரில் 15.08.98 சனிக்கிழமை நடாத்தப்பட்டது. மாவீரர் அமைதி வணக்கத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் நெதர்லாந்துப் பணியகப் பொறுப்பாளர் திரு. போல் அருளைநாயகம் மங்கள விளக்கினை ஏற்றி வைத்து இப்போட்டியினை ஆரம்பித்து வைத்தார். இப்போட்டிகளில் நெதர்லாந்தின் பல பாகங்களில் இருந்தும் 10 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றியிருந்தன. இரு குழுக்களாக விளையாட்டுக் கழகங்கள் பிரிக்கப்பட்டு இரு மைதானங்களில் போட்டிகள் நடாத்தப்பட்டன. குழு 'A' பிரிவில் Hilversum - ஜெகன்வைரர்ஸ் விளையாட்டுக் கழகம், Amsterdam விளையாட்டுக்கழகம், Oudendorch - Y.M.T.A விளையாட்டுக்கழகம், Zwolle தமிழ் விளையாட்டுக் கழகம், Breda விளையாட்டுக் கழகம் ஆகியனவும் குழு 'B' பிரிவில் Denhelder - F.V.H விளையாட்டுக்கழகம், Alkmaar - தமிழ் நட்சத்திர விளையாட்டுக்கழகம், Winterwijk - பாரதி விளையாட்டுக்கழகம், Schiedam - செஞ் அப்பிரவீஸ் விளையாட்டுக்கழகம், Beverwijk விளையாட்டுக்கழகம் ஆகியனவையும் இடம்பெற்றிருந்தன. போட்டிகள் கடந்த ஆண்டுகளை விட மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றன. 'லீக்' முறையில் நடாத்தப்பட்ட முதலாவது சுற்றின் இறுதியில் Amsterdam, Den helder, Zwolle, Alkmaar ஆகிய 4 விளையாட்டுக் கழகங்கள் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகின. முதலாவது அரையிறுதிப்போட்டியில் Zwolle - Denhelder விளையாட்டுக்கழகத்துடன் மோதி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அடுத்த அரையிறுதிப் போட்டியில் Amsterdam - Alkmaar மோதியதில் 0:3 என்ற கோல் கணக்கில் Alkmaar விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. இறுதிப்போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் Alkmaar விளையாட்டுக்கழகம் Zwolle விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டது. மூன்றாம் இடத்திற்கான போட்டியில் Den helder விளையாட்டுக் கழகம் Amsterdam விளையாட்டுக் கழகத்தை 2:1 கோல் கணக்கில் வெற்றிகொண்டது. சென்ற ஆண்டு Den helder விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

வெற்றிபெற்ற மூன்று விளையாட்டுக்கழகங்களின் அனைத்து வீரர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நெதர்லாந்து பணியகப் பொறுப்பாளரால் வெற்றிப் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். நடுவர்கள், துணைநடுவர்கள் மற்றும் மைதானத்தின் உரிமையாளர் ஆகியோர் மலர்க்கொத்துக்கள் வழங்கப்பட்டும் புலிச் சின்னங்கள் அணிவிக்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டனர். இப்போட்டிகளில் சிறந்த பந்துக்காப்பாளராக பரணியும் அதிக கோல்களை அடித்தவராக காசியும் Alkmaar விளையாட்டுக் கழகத்திலிருந்தும் சிறந்த விளையாட்டு வீரராக வில்லியம்ஸ்வரன் Den helder விளையாட்டுக் கழகத்திலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். வெற்றிக்கிண்ணங்கள் 30.11.98 இல் டென்காக்கில் நடைபெறவிருக்கும் மாவீரர் தினத்தில் வழங்கப்படவிருப்பதாக மைதானத்தில் அறிவிக்கப்பட்டு அன்றைய நிகழ்வுகள் நிறைவு செய்யப்பட்டன.

நூற்றுக்கணக்கான மக்கள் பார்வையாளர்களாக கலந்து கொண்டு விளையாட்டுக்களை சிறப்பித்தனர்.


# பாரிசில் முதன்முறையாக தமிழர் விளையாட்டுக்கள்

உதைபந்தாட்டம், கிரிக்கட், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் இப்போட்டிகள் எல்லோருக்கும் நன்கு தெரிந்த போட்டிகளாகும். ஆனால் புலம்பெயர்ந்த மண்ணில் வாழும் தமிழர்களின் புதிய சந்ததியினர் பலருக்கு தெரிந்திராத பல புதிய விளையாட்டுக்கள் ஐரோப்பிய மண்ணில் நடைபெறப்போவது இதுவே முதல் தடவை என்பதை எல்லோரும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**கிளித்தட்டு மறித்தல்:** இவ் விளையாட்டிற்கு 6 பேர் பங்குபற்றவேண்டும். 5 பேர் 5 கோடுகளில் நின்று மறிக்க ஒருவர் அவர்களுக்குத் தலைவர். அவரை கிளியென்றும் சொல்லலாம். இந்தக் கிளி என்பவர் மேல் கோடு; நடுக்கோடு; இரண்டு பக்கக் கோடுகள்; கடைசிக் கோடு (சாக்கோடு)களில் விளையாடும் தகுதியுடையவர். இதே போல் மறிக்கப்படுபவர்களும் 6 பேர் பங்குபற்றவேண்டும். இந்த 6 பேரும் ஒவ்வொரு கோடுகளிலும் நின்று மறிப்பவர்களை உச்சிக்கொண்டு அடிவாங்காமல் கடைசிக்கோட்டைத் தாண்டி வெளியேறினால் அவரை பழம் என்று சொல்லலாம். இந்தப் பழம் என்று சொல்லுபவர் மறுபடியும் கடைசிக்கோட்டில் இருந்து மறிப்பவர்கள் 5 பேரையும் உச்சிக்கொண்டு அடிவாங்காமல் மேற்கோட்டைத் தாண்டிவிட்டால் அவர் தமது அணிக்கு ஒரு வெற்றியைப் பெற்றுக்கொடுக்கிறார். இதில் ஒரு கிளியோ அல்லது வேறொருவரால் மறிக்கப்படும் அணியில் உள்ள 6 பேரில் ஒருவர் அடிவாங்கினால் அந்த அணிக்கு தோல்வி கிடைக்கின்றது. அத்துடன் இந்த அணியினர் கோடுகளில் நின்று எதிர் அணியினரை மறிக்கவேண்டும். இவ் விளையாட்டை நேரில் பார்த்தால் வெகு சுவாரசியமாக இருக்கும்.

**முட்டியுடைத்தல்:** இவ் விளையாட்டில் பங்குபற்றுபவர்களின் இரண்டு கண்களையும் ஒரு துணியினால் கட்டிவிட்டு ஒரு குறிப்பிட்ட உயரத்தில் கட்டித்தொங்கும் முட்டியை ஒருவர் கையில் வைத்திருக்கும் தடியால் அடித்துடைக்கவேண்டும். இது மிகவும் ஒரு நகைச்சுவையான ஓர் விளையாட்டு.

**தலையணைச் சண்டை:** ஒரு குறிப்பிட்ட உயரத்தில் நாட்டப்பட்டிருக்கும் இரு கம்பங்களின் நடுவே போடப்பட்டிருக்கும் குறுக்குக்கம்பத்தில் (Middle Bar) போட்டியில் கலந்துகொள்ளும் இருவர் எதிரும் புதிருமாக அமர்ந்து கொண்டு ஒரு கையை பின்புறமாகக் கட்டிக்கொண்டு மறுகையில் வைத்திருக்கும் தலையணையால் எதி




ரியை அடித்து வீழ்த்த வேண்டும். கீழே விழுபவர் தோல்வியடைவார். கம்பத்தில் இருக்கும்போது கால்கள் நிலத்தில் படக்கூடாது.

**கயிறு இழுத்தல்:** இவ் விளையாட்டு எம் மண்ணில் பழம்பெரும் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றாகும். இரு அணிகள் பங்குபற்றும் இப்போட்டியில் 6 தொடக்கம் 10 பேர் ஒரு அணியில் இடம் பெறுவர். இரு அணியினரும் கயிற்றை நேராகப் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு அணிக்கும் முன்னால் ஒவ்வொருவர் நின்றுகொண்டு தமது அணியை பலமாக இழுக்கச்சொல்லி உற்சாகப்படுத்துவார். இரு அணியினருக்கு மத்தியில் ஒரு கோடு போடப்பட்டிருக்கும். இக் கோட்டினைத் தாண்டும் அணியினர் தோல்வி அடைவார்கள்.

-பேர்ள் சூசப்பிள்ளை-

# உதைபந்தாட்ட பயிற்சி முறைகளும் விளைவுகளும்

உலகம் முழுவதும் சர்வதேச விதிமுறைகளுக்கு அமைய எல்லா விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறுகின்றன. நாங்கள் மட்டும் அதற்கு விதிவிலக்கல்ல. ஒவ்வொரு விளையாட்டு வீரரும் இவ் விதிமுறைகளை அறிந்தோ அல்லது தெரிந்தோ வைத்திருக்க வேண்டியது அவசியமானது. [illegible] சட்டத்தை மதித்து வாழ்ந்தால் என்றும் வாழலாம். சட்டத்தை [illegible] இந்த உலக நியதி விளையாட்டுக்களில் உள்ள சிறிய சட்டங்களுக்கு நாங்கள் கட்டுப்படவில்லையென்றால் வாழ்க்கையில் ஏற்படும் பெரிய சட்டங்களுக்கு நாங்கள் எப்படிக் கட்டுப்படுவோம்?

ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு மணித்தியாலமாவது பயிற்சி எடுக்க வேண்டும். [illegible] செய்ய வேண்டும். நல்ல விளையாட்டு யுக்திகளைக் கையாள [illegible] (Foul) [illegible] விளையாட வேண்டும். அப்போதுதான் நாங்கள் [illegible] ஒழுங்கான பயிற்சி இல்லாத வீரர்கள் தான் விளையாட்டில் [illegible] ஒழுங்கான பயிற்சி பெறும் விளையாட்டு வீரர்கள் [illegible] (Stamina) [illegible] பந்தின் மேல் கட்டுப்பாடு (Ball control) பாஸ் (Passing) கொடுத்து விளையாடும் [illegible] விளையாட்டு [illegible] இவ்வாறு நன்மைகளையும் [illegible]

– [illegible]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வி சின்னையா கவிதா

அன்னையின் மடியில்: 16.12.1980

ஆண்டவன் அடியில்: 02.09.1997

திதி: 23.08.1998

பார் கவிதா! ஓடோடி வா கவிதா!
எங்களில் இளையவளே... ஒளிவிளக்காய் வந்தவளே...
புன்சிரிப்புப் பூங்காவே, பூமகளே புதுமடியே,
உன் சிரிப்பால் உள்ளமெல்லாம் பூரித்து நிறைந்தோமே
இன்று நீ எம்மையெல்லாம் ஏன் விட்டுச் சென்றாயோ?
எங்கள் இதயங்கள் அலைமோதும் கடலலையாய்த்தம்மா
எங்கே நீ சென்றனையோ எமைக்காண வருவாயோ,
தங்கை அண்ணன்மார் தவிக்கும் நிலைகாணாயோ
திங்கள் திருமுகமே திரும்பிடவே மாட்டாயோ!

சீர்வரிசை தந்து ஊரெல்லாம் கூட்டி
சிறப்பாக மேளதாளங்கள் முழங்கிவர
பேர்கூறும் மணவாளன் பக்கத்திலே உனையிருத்தி
பெருமையுடன் நாங்கள் நிற்கும் நாளை
பார்த்திருந்தோம், காத்திருந்தோம் ஆனால் இன்றோ
பாவியர் நாம் பரிதவித்துக் கதறி அழுகின்றோம் பார்...
கவிதா நாம் பதறும்நிலை பார்கவிதா...
பாரில் எமைக்காண ஓடோடி வா கவிதா!

உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரை பிரார்த்திக்கிறோம்

என்றும் உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்காமார், மைத்துனர்கள்,
மைத்துனிகள், பெறாமக்கள்.

தகவல்: அண்ணாமார்
மாறன், குமார்,
— சுவிஸ்.

# சொற்சிலம்பம்

## போட்டி எண் — 11

வு - ர - வ - சி - ல் - லா - கு - ந - த - லெ -
ண் - ண - ல - து -ம் - ற - லு -வி - னை - ழி
- லோ - ர் - ள - ணெ - ய் - ன் - வே - ளை.

இங்கு காணப்படும் எழுத்துக்களைக் கொண்டு 15 சொற்கள் ஆக்கப்பட வேண்டும். சொற்கள் 4 எழுத்திலும் அதற்கு மேலும் அமைய வேண்டும். முதல் ஆக்கப்படும் சொல் எந்த முதல் இரண்டெழுத்தில் ஆரம்பிக்கிறதோ, அதே இரண்டெழுத்திலேயே ஆக்கப்படும் சொற்கள் அனைத்தும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

மேலதிகமாக எந்த எழுத்தும் சேர்க்கக் கூடாது.

மேலுள்ள எந்த எழுத்தும் விடுபடக்கூடாது.

| | |
|---|---|
| 1)........................ | 11)........................ |
| 2)........................ | 12)........................ |
| 3)........................ | 13)........................ |
| 4)........................ | 14)........................ |
| 5)........................ | 15)........................ |
| 6)........................ | 16)........................ |
| 7)........................ | 17)........................ |
| 8)........................ | 18)........................ |
| 9)........................ | 19)........................ |
| 10)........................ | 20)........................ |

'சொற்சிலம்பம்' எண்—11 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய

**இறுதி நாள்: 04.09.98**

(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

சொற்சிலம்பம்
ஈழமுரசு - 22, Rue Perdonnet, 75010 Paris, France.

பெயர்: ....................................
முகவரி: ....................................
....................................
....................................
பிறந்த திகதி: ....................................
சந்தாதாரராயின் சந்தா இல: ....................

**சொற்சிலம்பம் போட்டி எண்: 10 இற்கான மாதிரி விடைகள்**

அடித்தல், இடித்தல், ஒடித்தல், கடித்தல், குடித்தல்,
தடித்தல், துடித்தல், நடித்தல், வெடித்தல், படித்தல்,
பிடித்தல், பொடித்தல், மடித்தல், முடித்தல், வடித்தல்.
இன்னும் பல...

சொற்சிலம்பம் -10 இற்கு சரியான பதில் அனுப்பியவர்களில் குலுக்கல்முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

1) S. குருசுவியா
93600 Aulnay Sous Bois, France.
2) செல்வி J. அனுஷ்யா
East Ham, London E6 2NJ.
3) திருமதி C. உதயகலா
5415 Nussbaumen, Baden, Swiss.
4) யோகன் (பிரபு)
95140 Garges-lès Gonesse, France.
5) திருமதி பி. ஆனந்தகுமாரி
3940 Sitg, Swiss.
இவர்களுக்குரிய பரிசு காலக்கிரமத்தில் பாரிஸ் மக்கள் கடை நிறுவனத்தினரால் அனுப்பிவைக்கப்படும்.

போட்டியில் கலந்துகொண்டு சரியான விடைகளை எழுதி அனுப்பும் வாசகர்களில், குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தெடுக்கப்படும் ஐவருக்கு பாரிஸ் மக்கள் கடை தாபனத்தினரால் பெறுமதி மிக்க பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

சொற்சிலம்பம் எண்-11 இற்கான விடையும், சொற்சிலம்பம் எண்-12 உம், 10 - 16 செப்டெம்பர் 98 ஈழமுரசில் வெளிவரும்.

ஆக்கம்: சிவேசு. சுந்தரராஜா

மீண்டும் உங்கள் திருப்திக்காக

# வூட்லன்ஸ் கோல்

## தொலைபேசி அட்டை வெளியாகிவிட்டது





60 UN

50 Frs TTC

120 UN

100 Frs TTC




| | |
|---|---|
| இந்தியா.................... | 46 நிமிடங்கள் |
| இலங்கை ................ | 40 நிமிடங்கள் |
| ஐரோப்பா.................. | 70 நிமிடங்கள் |
| பிரித்தானியா........... | 100 நிமிடங்கள் |
| அமெரிக்கா............. | 100 நிமிடங்கள் |
| கனடா.................... | 100 நிமிடங்கள் |

இன்று பல நாடுகளுக்கும் மிகக்குறைந்த விலையில் அதிக நிமிடத்துடன் தெளிவான தொனியுடன் உரையாடுவதற்கு பாரிசில் முன்னணி தொலைபேசி அட்டையான Woodlands Call வாங்கி ஓர் முறை பேசிப்பாருங்கள்!

ஒரு மாத விலைகுறைப்பு

வர்த்தக ஸ்தாபனங்களுக்கு 15% கழிவுடன் வழங்கப்படும்

| | Local | Vert |
|---|---|---|
| இந்தியா | 46 | 30 |
| இலங்கை | 45 | 30 |
| UK | 100 | 30 |

நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!!

தொடர்புகளுக்கு: வூட்லன்ஸ் உணவகம்

**207, Rue Fg. St. Denis, 75010 Paris.**
**Tel: 0140370820 / Fax: 0140372820**

மிக விரைவில் லண்டன், ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க், இத்தாலி, இலங்கை, இந்தியா இன்னும் பல நாடுகளுக்கு விஸ்தரிக்கப்படும்.

விநியோகத்தர்கள் தேவை
அரிய சந்தர்ப்பங்களை நழுவவிடாதீர்கள்

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 1,80 | 0,61 | 6.02 | 1.50 |
| பிராங்பேட் | 0,55 | – | 0,34 | 3,35 | 1.20 |
| லண்டன் | 1,63 | 2,94 | – | 9.86 | 2.45 |
| பாரிஸ் | 0,16 | 0.30 | 0.10 | – | 0.25 |
| சூரிச் | 0.66 | 0.83 | 2.40 | 4.01 | – |
| பம்பாய் | 42.56 | 23.62 | 69.51 | 7.06 | 28.52 |
| கொழும்பு | 66.10 | 36.89 | 107.95 | 10.96 | 43.94 |

# டெய்லி நியூஸ் மீது அமெரிக்கா புகார் ஆசிரியர் விரட்டியடிப்பு

(24.08.98)

சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிக்கரை பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் அமெரிக்க தூதரகத்தினால் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. கிழக்கு ஆபிரிக்காவில் அமெரிக்க தூதரகங்கள் மீது நடத்தப்பட்ட குண்டு தாக்குதல்கள் தொடர்பாக டெய்லி நியூஸ் தெரிவித்த கருத்துக்கள் அமெரிக்காவின் விசனத்துக்கு உள்ளாகியது. இதைத் தொடர்ந்து அரச ஊதுகுழலான இப் பத்திரிகையின் ஆசிரியர் அப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இதனை சிறீலங்காவின் பத்திரிகைச் சுதந்திரத்திற்கான பிரஜெயந்தர என்னும் அமைப்பு கண்டித்துள்ளது.

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

### புலம்பெயர்...

விட்டதாக கூறியதுடன், காலதாமதமாக நோயாளியை வைத்தியசாலைக்கு கொண்டுவந்ததையும் கண்டித்தார்.

அன்று இரவு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட ரொபின்சன் - தனது தாயாரிடம் 'அம்மா எனக்கு நித்திரை வருகுது.. நீங்கள் போயிட்டு நாளைக்கு வாங்கோ' என்று சொல்லியிருக்கின்றார்.

மகனுக்கு குணமாகிவிடும் என்ற நம்பிக்கையோடு வீடு திரும்பி உறங்கச்சென்ற டேவிட் அண்ணாருக்கும், அவரது மனைவிக்கும் அதிகாலை 5 மணிக்கு ரொபின்சன் இறந்து விட்டான் என்ற செய்தி ஆஸ்பத்திரியில் இருந்து தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.

மருமகள் எலிசபெத்தோ தனது கணவனை கர்த்தரின் பார்வையில் இருந்து பிரித்து யாருடைய வைத்தியர்களின் பார்வைக்குக் கூட்டிச்சென்றதால் அவர் இறந்து விட்டதாக அழுது புலம்பியிருக்கின்றார்.

இந்தத் தகவல்களை எமக்குத்தெரிவித்த ரொபின்சனின் நண்பர்கள், ரொபின்சன் இருந்த மதக்குழுவின் — போதகர்கள், மக்களுக்கு மருத்துவமனைக்கு செல்லவேண்டாம்; கர்த்தர் குணம் ஆக்குவார் என்று சொல்லிவிட்டு - தங்களுக்கு நோய் வரும் போது இரகசியமாக வேறு ஊரில் உள்ள வைத்தியர்களிடம் சென்று மருந்தெடுத்துக் கொள்கின்றார்கள் என்பதையும் குறிப்பிடத்தவறவில்லை.

(பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன)

- நக்கீரன்

(33ம் பக்கத் தொடர்ச்சி)

### கட்டுப்பபை....

ஹுல நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கான தலைமையகம் படிப்படியாக கைவிடப்படும் என கருதப்படுகின்றது. முப்படைத் தளபதிகளுக்கும் வழங்கப்பட்ட அதிகாரங்கள் பல தற்போது நிறுவப்பட்டுள்ள கூட்டுத் தலைமையகத்தின் நேரடி கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படும் எனவும் இதனால் தளபதிகள் கொள்வனவுகளில் இடம்பெற்ற ஊழல்களை நிறுத்தலாம் என்றும் கொழும்பு இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.

(33ம் பக்கத் தொடர்ச்சி)

### வன்னியில்....

வர்களின் தொகை குறைந்து வருகின்றது.

ஏராளமான மாணவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். பலருக்கு கண் பார்வை குறைவு. இரத்தச் சோகை முதலான நோய்களும் ஏற்பட்டுள்ளன.

பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 560 ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. தற்போது அங்கு 940 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர்.

மேலும் வன்னிப்பெரு நிலப்பரப்பில் நோயாளர்களின் தொகை என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துவரும் அதே நேரத்தில் வைத்தியர்களுக்கும், பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டே இரண்டு எம்.பி.பி.எஸ். வைத்தியர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர். மல்லாவி வைத்தியசாலையில் பிரான்ஸின் எல்லைகளற்ற மருத்துவர்கள் சங்கத்தின் மருத்துவக் குழு பணியாற்றி வருகின்றது. வன்னியில் பனடோல் மருந்துக்குளிசை ஒன்று 4 ரூபாவாக விற்கப்படுகின்றது. வேறு சில அத்தியாவசிய மருந்துக்குளிசைகள் 100க்கு கூட கிடைப்பது அரிதாகவுள்ளது.

# ஹிங்குராங்கொட பொலிஸ் நிலையத்தில் விசாரணைக் கைதி அடித்துக்கொலை

(கொழும்பு - ஒகஸ்ட் 25)

ஹிங்குராங்கொட விமானப்படை தளத்துக்கு அருகிலுள்ள வீடொன்றில் T-56 ரக தானியங்கித் துப்பாக்கி மற்றும் அதற்குரிய ரவைகள் உட்பட பல பொருட்களை மறைத்து வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு ஹிங்குராங்கொட பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட 60 வயதுடைய ஜெயசிங்கா என்பவர் பொலிசாரால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஹிங்குராங்கொட விமானப்படைத் தளத்தைத் தாக்குவதற்கு விடுதலைப் புலிகளுக்கு உளவு பார்த்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஜெயசிங்கா ஹிங்குராங்கொட பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில் விசாரணை என்ற பெயரில் பொலிசார் நடாத்திய தாக்குதலில் இறந்துவிட்டதாகச் சொல்லப்படுகின்றது இந்தக் கொலையை மூடி மறைப்பதற்காக அவர் அணிந்திருந்த மேற்சட்டையைக் கிழித்து கழுத்தில் சுருக்கிட்டு அவரது உடலை பொலிஸ் நிலையக் கூரையில் தூக்கிவிட்டு அவர் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார் என்று ஹிங்குராங்கொட பொலிசார் அறிவித்துள்ளனர்.

(33ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ். குடாவில்....

மக்கள் சிலர் இரவு வேளைகளில் நடமாடிய போது சுட்டுக் கொல்லப்பட்டும் இருந்தனர்.

கடந்த வாரம் காவலில் சிறீலங்கா படையினர் ஒருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இப்படையினனை பொலிசார் தீவிர விசாரணை செய்த போது, யாழ். குடாநாட்டில் இராணுவ சேவையில் இருந்த போது அங்குள்ள மக்களிடம் கொள்ளையடித்ததாக கூறியுள்ளான்.

இவனிடமிருந்து மீட்கப்பட்ட நகைகளின் விபரங்கள் காவல் நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. மோதிரங்கள், காப்புகள் என பல்வேறுபட்ட நகைகளுடன் தாலிகளும் அடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நகைகள் தவிர கைக்கடிகாரங்கள் மற்றும் பெறுமதிமிக்க பல பொருட்களும் இவனிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. இதனது பெறுமதிகள் பத்து லட்சங்களுக்கும் அதிகமானவை எனவும் தெரிய வருகின்றது

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 26.08.1969

மண்ணின் மடியில்: 26.08.1997

## மேஜர் இளவதனி

### இராஜேஸ்வரி இராமநாதன்

வடலியடைப்பு - பண்டத்தரிப்பு

தகவல்:
பாபு - மணிவண்ணன் (ஜேர்மன்)
0144857469 / 0049 -213361074

AMV

IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub

# ஈழமுரசு

Eelamurasu Weekly



அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64




மீண்டும்

நல்லூர் படம் பதித்த 'வூட்லண்ட்ஸ் கோல்' தொலைபேசி அட்டைகள் வெளியாகிவிட்டன. மேலதிக விபரங்களுக்கு 30-ம் பக்கம் பார்க்க

| | N°: Local | N°: Vert |
|---|---|---|
| இந்தியா | 45 | 30 |
| இலங்கை | 40 | 30 |

வூட்லண்ட்ஸ்




100 Frs TTC

தொடர்புகளுக்கு:

வூட்லண்ட்ஸ் உணவகம்

207 Rue de Fg. St. Denis, 75010 Paris. Tel: 0140370820


# கப்பல் மூழ்கடிப்பு - ரத்வத்தை பாராட்டு

கடந்த வாரம் சிறீலங்காப் படையினரால் குண்டுவீசி 'பிரின்சஸ் காஷ்' கப்பல் மூழ்கடிக்கப் பட்டமைக்கு சிறீலங்கா பிரதி பாதுகாப்பமைச்சர் பாராட்டுத் தெரிவித்துள்ளார். விமானப்படையினரின் இந்த நடவடிக்கையினால் பெரியதொரு ஆபத்து தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என்றார்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் இதுவரை (31.07.98 வரை) கொல்லப்பட்ட சிங்க ரெஜிமெண்ட் படைப்பிரிவை சேர்ந்த 2050 படையினரின் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட நினைவு வைபவம் ஒன்றில் உரை நிகழ்த்திய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விமானப் படையினரால் நிர்மூலமாக்கப்பட்ட கப்பல் 'பில்லீஸ்' என்ற நாட்டில் பதிவு செய்யப்பட்டது. இதே நாட்டில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட இன்னொரு கப்பல் ஆயுதங்களை ஏற்றிவந்து கொண்டிருந்தபோது கடலில் மூழ்கடிக்கப்பட்டது. எனவே இதுவும் அவ்வாறே இருக்குமென சந்தேகம் எழுப்பப்பட்டது. ஆனாலும் அதில் ஆயுதங்கள் எதுவும் இல்லையென்ற போதும் அதிலிருந்த 4500 மெட்ரிக்தொன் பொருட்களும் புலிகளுக்கு போயிருந்திருக்கும். விமானப்படையினரின் துரித நடவடிக்கையால் அது தடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அங்கு தொடர்ந்து பேசிய ரத்வத்தை, போர் நடக்கும் போது பலியாகும் படையினரின் மரணங்களை உடனடியாக வெளியிட்டு படையினரின் பெற்றோர்களை கலக்கம் அடையச் செய்யவேண்டாம் என்பதற்காகவே செய்தி தணிக்கை கொண்டுவரப்பட்டது. எனவே ஆறுதலாக செய்திகளை வழங்கி எமக்கு உதவுங்கள் எனவும் பத்திரிகையாளரிடம் கேட்டுக்கொண்டார்.

# புழுப்பிடித்த நிலையில் பெண்ணின் நிர்வாண சடலம்

அழுகிப் புழுப்பிடித்த நிலையில் திருநெல்வேலியிலுள்ள வீடொன்றில் இறந்து தோளிலும் இடுப்பிலும் வெட்டுக்காயங்களுடன் நிர்வாணமாக பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மேற்கு கிராம சேவையாளர் மரண விசாரணையின்போது, இராணுவச்சிப்பாய் ஒருவர் தந்த தகவலைப்படுத்து தான் இச்சடலத்தை போய்ப் பார்த்த போது அருகில் போய் பார்க்கமுடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசியதாகவும், மிகவும் அழுகியநிலையில் தலை உட்பட உடல் முழுவதும் புழுப்பிடித்திருந்ததால், மிகவும் சிரமப்பட்டே முகத்தை அடையாள அட்டையுடன் ஒப்பிட்டுப்பார்த்தபோது இறந்தவர் 47 வயதுடைய நாகலிங்கம் பவானி என்பதை அடையாளம் கண்டுகொண்டதாகவும் கூறியவர், இறந்தவர் கணவனைப் பிரிந்து தனியாக வாழ்ந்து வந்தார் எனவும் தனது சாட்சியத்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# மேற்கத்தைய நாடுகள் புலிகளை கண்டிப்பதில்லை

## பிரித்தானிய சிங்களவர் கவலை

(24.08.98)

'நாங்கள் 20 வருடங்களுக்கு மேலாக பயங்கரவாதத்திற்கு எதிராக போராடுகின்றோம். 31 பௌத்த பிக்குகள் உட்பட 90,000 பொது மக்கள் புலிகளினால் கொல்லப்பட்டுள்ளனர். வழிபாட்டுத்தலங்கள் மீது குண்டு வீசப்பட்டுள்ளது, சேதப்படுத்தப்பட்டுள்ளது, அழிக்கப்பட்டுள்ளது' என சிங்கள பல மன்றம் என்றும் பிரித்தானிய சிங்களவரின் அமைப்பு பிரித்தானிய பிரதமருக்கு அனுப்பிய மனு ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

ஆப்கான் மீது அமெரிக்கா எடுத்த நடவடிக்கையையும் ஐ.ஆர்.ஏ. மீது பிரித்தானிய அரசாங்கம் இவ்வாரம் எடுக்கவுள்ள நடவடிக்கையையும் உதாரணங்களாகக் காட்டி புலிகளையும் தடைசெய்ய வேண்டும் என இச் சிங்கள இலவாத அமைப்பு கோரியுள்ளது.

மேற்கத்தைய நாடுகள் புலிகளின் நடவடிக்கைகள் பற்றி கண்டுகொள்ளவில்லை, கண்டிப்பதில்லை என கவலைதெரிவித்துள்ள இவ் அமைப்பு, புலிகளை ஆதரிக்கும் குழுக்களை பிரித்தானியாவில் இயங்க அனுமதித்தால் சிறீலங்காவில் பயங்கரவாதம் ஒழியாதென கூறியுள்ளது.

# யாழ். குடாவில் கொள்ளையடித்த படையினன் காலியில் கைது

யாழ். குடாநாட்டில் இராணுவ ஆக்கிரமிப்பின் பின் கொள்ளை சம்பவங்கள் பெருமளவு அதிகரித்திருப்பமை தெரிந்ததே. இக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் எனக்கூறி பொது

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# கூட்டுப்படைத் தளபதியாக ரோகான் தலுவத்தை நியமனம்

(24.08.98)

சிறீலங்கா அரசானது தான் திட்டமிட்ட கூட்டுநடவடிக்கைகளுக்கான தலைமையகத்தை கொழும்பில் நிறுவியுள்ளது. இதன் தளபதியாக தற்போதைய இராணுவத் தளபதி தலுவத்தை நியமிக்கப்பட்டுள்ளார். முப்படைகளினதும், பொலிஸ் மற்றும் துணைப் படைகளினதும் நடவடிக்கைகளை ஒன்றிணைத்து கட்டுப்படுத்தும் அதிகாரத்தை இத் தலைமையகம் கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் வவுனியாவை தலைமையகமாகக் கொண்டு செயற்பட்டுவந்த இரா

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# வன்னியில் பாரிய பொருளாதார நெருக்கடி

## மக்களிடம் பணம் இல்லை

## நோயாளர் தொகை அதிகரிப்பு

சிறீலங்கா அரசின் நிவாரண வெட்டு மற்றும் எரிபொருள் கட்டுப்பாடு என்பவற்றால் வன்னியில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள வங்கிகளில் பாரிய அளவுக்கு பணம் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் அங்கு கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் மாதம் 2000 ரூபா வுக்கு மேல் பெறமுடியாத நிலை உள்ளது.

அத்தோடு அரசாங்கத்தின் புதிய எரிபொருள் தட்டுப்பாடுகள் காரணமாக வன்னிவிவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்கு உணவு சிறுவடைகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் இல்லாத காரணத்தால் பாடசாலைக்கு செல்கின்ற மாண

(தொடர்ச்சி 3ம் பக்கம்)


பாரிஸ் லாசப்பலில்

# தர்ஷனா உணவகம்



நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திடவும் அனைத்துவிதமான உணவு வகைகளையும் ஒடருக்குப் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்

23, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41